**Mierra Gems & Jewellery**
லண்டனில் பொற்கைவண்ணர்களின் நிர்வாகத்தில் இயங்கும் ஒரே நகை மாடம்
மீரா
ஜுவல்லரி மார்ட்
34, London Road, Tooting,
London SW17 9HP
Tel: 020 8648 7750 / 07958 948 685

# புதினம்
A Freely Circulated Monthly
PUTHINAM

மலர் 17 AUGUST 2014 இதழ் 2

Vectone
Call Sri Lanka 1p /min
With Sri Lanka Pocket Saver
Get your Free SIM at www.vectonemobile.co.uk or call (020) 7179 0134

**SNM PAWN BROKERS**
அனைத்து
தங்க நகைகளும்
இங்கே
அடகு பிடிக்கப்படும்.



**MITHUS JEWELLERS**
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDONCRO 2TJ 020 8683 1756

# ஓநாய்கள் அழுகின்றன!

தாம் மேற்கொண்ட இனப்படுகொலைகளை மூடிமறைக்க உதவியவர்கள் பாதிக்கப்படும்போது, அவர்கள் பக்கம் நின்று பேசுவது பூகோள ராசதந்திரம் என்பார்கள்.

இப்போது சரி, தவறு எல்லாமே சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு சுயநலம், தற்காப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

இஸ்ரேலைக் கண்டித்தால், அவர்களின் அதிநவீன யுத்த தொழில்நுட்பத்தையும், அமெரிக்காவின் நட்பினையும் இழக்க வேண்டிவரும் என்பதால் கண்டிப்பதில்லை.

காசாவில் பாலஸ்தீன மக்கள் கொல்லப்படுவது தவறு என்பார்கள். ஆனால் அக்கொடுஞ் செயலைப்புரியும் இஸ்ரேலை நேரடியாகக் கண்டிக்க மாட்டார்கள்.

மக்களை, கேடயமாகப் பயன்படுத்துகிறது 'ஹமாஸ்' அமைப்பு என இஸ்ரேல் பூசணிக்காய்ப் பொய் கூறி மறைக்கும்போது, அது தவறென்று சொல்ல மாட்டார்கள்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில், இஸ்ரேலிற்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிக்கும் சீனாவும், ரஷ்யாவும், அதன் கைத்தடி நாடுகளும் இனவாத இலங்கை அரசிற்கு எதிராக அதே மன்றில் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது எதிர்த்தன.

இலங்கைக்கு வேண்டாம், இஸ்ரேல் மீது வேண்டுமாம் சர்வதேச போர்க்குற்ற விசாரணை.

சொல்வது வேறுயாருமல்ல. சீனாவும், ரஷ்யாவும், இந்தியாவும்தாம்.

இஸ்ரேலைக் கண்டிக்காவிட்டால், இலங்கைக்கு ஆதரவளிக்கும் சோசலிசக் குஞ்சுகளும் அதன் நட்பு வட்டங்களும் தமக்கு எதிராகத் திரும்பிவிடும் என்று கவலைப்படுகிறார் மகிந்த ராசாவின் ராசதந்திரி தயான் ஜயதிலக.

இஸ்ரேலைக் காப்பாற்றுகிறது அமெரிக்கா!

இஸ்ரேலைக்கண்டிக்க மறுக்கிறது மகிந்த அரசு!

இந்த ஒற்றுமை எங்கேயோ இடிக்கிறதே...!

**குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்**
**Immigration Application and Appeals**

- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் Fresh Applications
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பம்
- இலங்கை–இந்தியாவில் பிரித்தானிய விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடு
- குழந்தைகள் 7 வருடம் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்– நிரந்தர குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர், திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்

Visitors & Dependent Visa – Human rights Claim – Immigration Detention Matters – Bail Applications

- Social Welfare Benefits – Visa Extension
- Entry Clearance Applications (Spouse – Family Reunion Visitor – Settlement – Student – Prospective Student)
- Point based Applications : Tier 1 – Tier 5 (Student / Entrepreneur Visas)

மொழிபெயர்ப்பு சேவை தமிழ் - சிங்களம்

Kulendran Immigration Law Chambers, 90 High Street, Colliers Wood, SW19 2BT, 0208 632 4494 / 0208 542 8222 / 07769185592, email: kilc_work@yahoo.co.uk

LycaFly
Travel the world for less
CALL 0207 132 32 32 24x7
VISIT www.Lycafly.com

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | from £441 | TORONTO | from £444 |
| DUBAI | from £298 | SINGAPORE | from £488 |
| BANGKOK | from £457 | AND MANY MORE... | |

Incl Taxes

£50 FREE Lycamobile top-up with every single return ticket to Colombo from £205
Conditions apply
(Incl Taxes £529)



தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
**LAKSHMIS JEWELLERS**
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 16 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



## பெண் உதவியாளர் தேவை

வயதான தாயாரைக் கவனிப்பதற்கு பாசமுள்ள நடுத்தர வயது பெண் உதவியாளர் ஒருவர் தேவை. வார நாட்களில், காலை முதல் மாலை வரை. TOOTING பகுதியிலிருந்து 5 மைலுக்குள் வாழ்பவராக இருப்பது நல்லது.

**Tel : 07735346890**

புதிய பத்திரிக்கை தொடங்க உங்களிடம் ஆர்வமும், பணமும் போதுமா?

## நாங்க இருக்கோம்!

3 in 1
EDITORIAL
MAGAZINE
DESIGN
PRINTING

SATYAN LAYOUT
MAGAZINE, PUBLICATION BOOKS DESIGNING & PRINTING
+91 9551395516 - 044-42683451 • WWW. SATYAN LAYOUT.COM

## A-Lanka Travel Ltd
We make it easy to take it easy

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை
ATOL PROTECTED 6495
We Serve all 7 Days in a week
உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச் சீட்டுக்களை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

For Special Family Discount and Emergency Ticket Only.
Please Contact
Wimal on 07956 206 709

உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்...
020 8672 5551
020 8672 2010

SriLankan · Emirates · Singapore Airlines · Etihad · Qatar Airways · British Airways

Worldwide Travel Agent
Special Rates for
(Subject to availability)
Colombo £210 + tax,
Madras £235 + tax,
(with British Airways)
Canada £?? + tax,
(with Sri Lankan Airlines)

For special offers please listen to Sooriyoothayam Radio on 1035MW Mon - Fri 10 to 11 pm

Indian Visa services available




அவசர உடன் டிக்கட்களுக்கு அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி 07957 121 696
Wimal / Viji

Email: wimal@a-lankatravel.co.uk | Web: www.a-lankatravel.co.uk

## குறொய்டன் அருள்மிகு ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்
21 Brigstock Road, Thornton Heath, Croydon Surrey CR7 7JJ Tel : 0208 689 3466



## 13ஆம் ஆண்டு மஹோற்சவ விஞ்ஞாபனம்

விநாயக அடியார்களே!

எல்லாம் வல்ல ஸ்ரீ கணபதி பெருமானின் 13ஆம் ஆண்டு மகோற்சவமானது நிகழும் மங்களகரமான ஜெய வருடம் ஆவணித் திங்கள் 4ம் நாள் (20.08.2014) புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணித் திங்கள் 13ஆம் நாள் (29.08.2014) சதுர்த்தி திதி, வெள்ளிக் கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா, பூங்காவனம், திருவூஞ்சல், வைரவர் மடையுடன் இனிதே நடைபெற திருவருள் கூடியுள்ளது.

நிகழ்ச்சி நிரல்

| திகதி | காலை | மாலை |
|---|---|---|
| 19.08.14 செவ்வாய் | கணபதி ஹோமம் | தேவதானுக்ஞை, பூர்வாங்க கிரியைகள் |
| 20.08.14 புதன் | 7.00 மணி முதல் அபிஷேகம், நித்திய பூஜை, பேரிதாடனம், வசந்த மண்டப பூஜை மற்றும் 11.00 மணி கொடியேற்றம் (துவஜாரோஹணம்) | 6.00 மணி முதல் யாக பூஜை, நித்திய பூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை மற்றும் திருவீதி உலா |
| 21.08.14 வியாழன் முதல் 28.08.14 வியாழன் வரை | 10.00 மணி 21 கலச திரவிய அபிஷேகம், நித்திய பூஜை, தம்ப பூஜை 12.00 மணி வசந்த மண்டப பூஜை, திருவீதி உலா | 6.00 மணி நித்திய பூஜை, தம்ப பூஜை 7.00 மணி கலை நிகழ்ச்சிகள் 8.00 மணி வசந்த மண்டப பூஜை, திருவீதி உலா |
| 24.08.14 ஞாயிறு | | மாம்பழத் திருவிழா |
| 26.08.14 செவ்வாய் | | வேட்டைத் திருவிழா |
| 28.08.14 வியாழன் | | சப்பரத் திருவிழா |
| 29.08.14 வெள்ளி | ஆவணிச் சதுர்த்தி 10.00 மணி 108 சங்காபிஷேகம் | 5.00 மணி தேர்த்திருவிழா |
| 30.08.14 சனி | 11.30 மணி தீர்த்தத் திருவிழா (வெளிவீதியில் தீர்த்தத்தடாகத்தில்) | 8.00 மணி கொடியிறக்கம் (துவஜாவரோஹணம்) |
| 31.08.14 ஞாயிறு | 21 கலச திரவிய அபிஷேகம் | பூங்காவனம் |
| 01.09.14 திங்கள் | 21 கலச திரவிய அபிஷேகம் | திருவூஞ்சல் |
| 02.09.14 செவ்வாய் | 21 கலச திரவிய அபிஷேகம் | வைரவர் மடை |

அடியார்கள் அனைவரும் காலையும் மாலையும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து ஸ்ரீ சக்தி கணபதிப் பெருமானின் பேரருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய குருமார்கள், அறங்காவலர் சபையினர், நிர்வாகத்தினர், உபயகாரர்கள் மற்றும் அடியார்கள்




Vectone
Call
Sri Lanka
1p
/min
With Sri Lanka Pocket Saver
Get 1500 min
for just £15
Available to Etisalat, Hutch and Mobitel Mobile Numbers
Get your Free SIM at www.vectonemobile.co.uk
or call (020) 7179 0134
Multifunctional Top-Up Vouchers Where You See These Signs:
*Terms & Conditions are applicable or may be varied. For more information please visit www.vectonemobile.co.uk





# இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

**5 Chapel Road, West Ealing, London W13 9AE**
தொலைபேசி இல: **0208 810 0835** தொலைநகல் இல: **0208 840 0485,**
**Email: info@ammanealing.org web: www.ammanealing.org**

# மகோற்சவ விஞ்ஞாபனம் 2014

## 10.08.2014 ஞாயிறு தேர்த்திருவிழா



**பல்லாயிரம் பக்தர்கள்**
**அருள்வேண்டி நிற்க துர்க்கை அம்மன்**
**தேரேறிவரும் அற்புததிருக்காட்சி**

இலண்டன் ஈலிங் பதியில் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா 18.07.2014 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. 10.08.2014 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 11.08.2014 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 13.08.2014 இரவு வைரவர் மடையுடன் நிறைவுற திருவருள் கூடியுள்ளது.

| மாகோற்சவ நிகழ்வுகள் | | |
|---|---|---|
| 01.08.2014 | வெள்ளி | கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி |
| 02.08.2014 | சனி | வசந்தோற்சவ அருட்காட்சி |
| 03.08.2014 | ஞாயிறு | பக்தானுக்கிரக அருட்காட்சி |
| 04.08.2014 | திங்கள் | சந்தானபாக்கிய லட்சுமி அருட்காட்சி (தங்கரதப் பவனி) |
| 05.08.2014 | செவ்வாய் | ஜோதி மங்கள் அருட்காட்சி |
| 06.08.2014 | புதன் | ஓம்காரரூப தர்சன அருட்காட்சி |
| 07.08.2014 | வியாழன் | மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி |
| 08.08.2014 | வெள்ளி | வேட்டைத் திருவிழா |
| 09.08.2014 | சனி | சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்) |
| 10.08.2014 | ஞாயிறு | இரதோற்சவ அருட்காட்சி (தேர்) காலை 10:00 மணி |
| 11.08.2014 | திங்கள் | தீர்த்த உற்சவம், விஷ்ணு துர்க்கை அருட்காட்சி |
| 12.08.2014 | செவ்வாய் | பூங்காவன அருட்காட்சி, திருவூஞ்சல் |
| 13.08.2014 | புதன் | வைரவர் மடை |

தேர்த்திருவிழா அன்று அர்ச்சனைத் தட்டு மூலம் பெறப்படும் பணம் தாயகத்தில் பின்வரும் நான்கு நற்காரியங்களுக்குப் பயன்படும்.

1. சிறுவர்களைப் பராமரித்தல்.
2. வறுமைக் கோட்டில் வாழ்கின்ற தாய்மார்களுக்கு உதவுதல்.
3. 'அறிவுச் சுடர்' திட்டத்தின் கீழ் தேர்வாகின்ற பல்கலைக்கழக மாணவருக்கு உதவுதல்
4. இலங்கையில் கைத்தொழில் வலையத்தை உருவாக்கி, தொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தல்.

### மகோற்சவ பிரதம் குரு:

வேதாகமஞானசாகரம் சிவஞானசிரோமணி சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்த அரவிந்த குருக்கள் பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக.

*அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.*

**அன்னையின் சேவையில்**
**விழா உபயகாரர்களுடன், நிருவாகசபை, அறங்காவலர்சபை**
**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**



# ஈழத் தமிழர்களை இலண்டன் பிபிசி கை கழுவியது!

உலகத் தமிழ் வானொலிகளுக்கெல்லாம் ஒரு சிகரமாகத் திகழும் இலண்டன் BBC தமிழோசையை அந்த உன்னத அந்தஸ்திலிருந்து தள்ளி விழுத்தி விடுவதற்கு திடீர் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை, தமிழ் மொழியை நேசிக்கும் அனைவருக்கும் ஒரு அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

உலகப்போர் சமயத்தில் பிரிட்டன் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் அவர்களின் விருப்பப்படி, பிரிட்டனின் வெளியுறவுத் திணைக்களத்தின் செலவில் ஆரம்பிக்கப்பட்ட BBC உலக மொழி ஒலிபரப்புகளில் இலண்டன் தமிழோசையும் ஒன்று. "நாடு நாட்டுடன் நல்லுறவு பேசட்டும்" என்ற தத்துவத்தை சிரமேற்தாங்கி புகழ் மேல் சம்பாதித்தது இலண்டன் BBC தமிழோசை. பிற்காலத்தில் அமெரிக்காவிலிருந்து வாய்ஸ் ஆப் அமெரிக்கா, சீனாவின் பீகிங் தமிழ் வானொலி, பிலிப்பைன்ஸ் நாட்டின் வெரித்தாஸ் தமிழ் வானொலி என வானொலிகள் தோன்றின. பல மறைந்துவிட்டன!

2016ம் ஆண்டில் 75வது ஆண்டு நிறைவை வெற்றிகரமாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ள இலண்டன் பிபிசி தமிழோசை, உலகத் தமிழர்களின் அபிமானத்தை அள்ளிக்கொள்ளும் விதத்தில் கடந்த 73 ஆண்டு காலமாக தமிழோசை தமிழ் ஒலிபரப்பாளர்கள் நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்கள். அவர்கள் பேசும் தூய்மையான தமிழ் உச்சரிப்பு, தமிழ் மக்களின் அக்கறையைக் கவர்ந்துள்ள விவகாரங்களை அவர்கள் பேட்டிகள் மூலம் உடனுக்குடன் வழங்கும் பாங்கு, உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்ற தமிழர்களை பெரிதும் கவர்ந்திருக்கிறது.



பிபிசி தமிழோசை நீண்டகாலம் ஒலிபரப்பான 'புஷ் ஹவுஸ்' மாளிகை

மிகக் குறிப்பாக இலங்கையின் சிங்களப் பேரினவாத அரசின் ஆதரவுடன் அரசின் சிங்கள அடியாட்கள் 1983இல் தமிழர்களுக்கு எதிராக வன்முறை வெறியாட்டம் ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்ட போது, இலங்கையின் செய்தி ஊடகங்கள் அனைத்தும் இருட்டடிப்புச்செய்தன. அந்தவேளையில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உண்மைச் செய்திகளை உடனுக்குடன் வழங்கி, மக்கள் மதிப்பையும் மரியாதையையும்



கடந்த இரண்டு ஆண்டுகளாக, தமிழோசை ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் பிபிசியின் புதிய அலுவலகமான, ஆக்ஸ்ஃபோர் சர்க்கஸிலுள்ள நியூ பிராட்காஸ்டிங் ஹவுஸ்

கவர்ந்து கொண்டது இலண்டன் BBC தமிழோசை. அதன் அப்போதைய தலைவர் சங்கர் சங்கரமூர்த்தி அவர்கள் செய்திகளை வழங்கிய நேர்த்தியை, கம்பீரத்தை, உணர்வுகளை, ஈழத்தமிழர்கள் இன்னும் தமது 'நெஞ்சுக்கூட்டில் பக்குவமாகப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள்!

அன்று முதல் இன்று வரை, ஈழம் வாழ் ஈழத் தமிழர்களின் அவல நிலையை உள்ளது உள்ளபடி உடனுக்குடன் அறிவித்து, தமிழ் மக்கள் அபிமானத்தையும் தமிழ்த் தலைவர்களின் பாராட்டுக்களையும் இலண்டன் பிபிசி தமிழோசை குவித்துக்கொண்டது. அத்தோடு சிங்கள ஆட்சியாளர்களின் அதிருப்தியையும் சம்பாதித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்ததோடு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அழித்து விடலாம் என்று கனவுகள் கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் தமது முழுக் கவனத்தையும் இலண்டன் போன்ற மேனாட்டு நகரங்கள்மீதும், தாயகம் தன்னாட்சி கோரும் மேனாட்டு தமிழ்களின் இயக்கங்கள்மீதும் திருப்பினார்கள். புலம்பெயர் நாடுகளில் இயங்கி வரும் தமிழ் ஊடகங்கள், குறிப்பாக தமிழ் வானொலிகள், தமிழ் தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் ஈழத் தமிழர்கள் அனுபவித்து வரும் வீடு பறிப்பு, காணி பறிப்பு, கற்பு பறிப்பு செய்திகள் அம்பலப்படுத்தப்படுவதை நிறுத்த விரும்பினார்கள்.

பண நெருக்கடியில் இந்த மேனாட்டு தமிழ் ஊடகங்கள் அவதிப்படும் பலஹீனத்தைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்த விரும்பிய சிங்களச் சகுனி மாமாக்கள், அந்த ஊடகங்களுக்கு பல்வேறு மறைமுகமான வழிகளில் பண உதவி செய்து, அந்த ஊடகங்களை பினாமிகள் மூலம் கொழும்பு கோத்தபயரின் கட்டுப்பாட்டின்கீழ் மெதுவாகக் கொண்டு செல்லும் நிழல் யுத்தம் இப்போது ஆரம்பமாகியிருக்கிறது.

இந்தப் பனிப்போரில், இலண்டன் பிபிசி தமிழோசையை மௌனிக்கச் செய்யும், அழிக்கச் செய்யும் பிபிசி தலைவர்களின் தீர்மானம் 17.07.2014 வியாழக்கிழமை தமிழோசை இலண்டன் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டது உயர் அதிகாரிகளின் முடிவு எப்படிச் சம்பந்தப்பட்டது? என்ன தொடர்பு? தொடர்பு இருக்கலாம்; இல்லாமல் இருக்கலாம்; நிரூபிக்க முடியாமல் போகலாம்! 1963இல் அமெரிக்க அதிபர் கென்னடியைச் சுட்டவன் லீ ஒஸ்வால்ட். அவன் ஏன் பொலிஸ் காவலில் சுட்டுக் கொல்லப்பட்டான்? 1990களில் இளவரசி டயானா கார் விபத்தில் இறந்தாரா? பிரிட்டிஷ் அரச குடும்ப ஒற்றர் படையால் கொல்லப்பட்டாரா? அதிபர் பிரேமதாச, அமைச்சர் அத்துலத்முதலி ஆகியோர் உண்மையில் புலிகளால்தான் அழிக்கப்பட்டார்களா? கோடீஸ்வரர் உபாலி விஜேவர்த்தனா கொழும்பு வரும் வழியில் எப்படி மாயமானார்? என் சட்டக் கல்லூரி நண்பர், அற்புதமான தமிழ் பேச்சாளர் அமைச்சர் அஷ்ரபின் விமான விபத்து யாரால் நடத்துவிக்கப்பட்டது? என் மனைவியின் மைத்துனர், வழக்கறிஞர் குமார் பொன்னம்பலம் அவர்களை வெள்ளவத்தைக்குக் காரில் வரச் செய்து, பட்டப்பகலில் சுட்டுக்கொல்லும்படி ஏவியது யார்? என்னைப்போல கொழும்பு கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் படித்துச் சட்டக் கல்லூரியில் சட்டம் படித்து, பெண் வழக்கறிஞரைத் திருமணம் செய்து வாழ்ந்த லசந்தா விக்கிரமதுங்க தனது 'சண்டே லீடர்' பத்திரிகையில் சிங்கள அரசின் குறைகளை குத்திக்காட்டி எழுதிக் கொண்டிருந்த 'குற்றத்திற்காக' மரண தண்டனை பெற வேண்டுமென ஏவிவிட்டவர்கள் யார்?



சங்கர்....சங்கரமூர்த்தி

இந்த வினாக்களுக்கெல்லாம் என்றுமே விடை தெரியவே போவதில்லை. இலண்டன் பிபிசி தமிழோசையை அடுத்த ஆண்டு (2015) நடுப்பகுதியில் மூடிவிட்டு, அதன் தமிழ் தயாரிப்பாளர்களுக்கு மடியில் கொஞ்சம் சில்லறையைக் கொட்டி, வீட்டுக்கு அனுப்பி வைக்கும் பிபிசி நிர்வாகத்தின் தீர்மானமும் அதுபோன்றதுதான். ஏன் எடுக்கப்பட்டது? விடை தெரியாது!





இலங்கையைப் போன்ற நாடுகளில் அரசு தலையிடுவதுபோல, பிரிட்டிஷ் அரசாங்கம் பிபிசி நிர்வாகத்தில் தலையிடுவதே இல்லை. பிபிசிக்கான பணம் கொடுப்பது மட்டும்தான் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு.

இலண்டன் பிபிசி தமிழோசையை அடுத்த ஆண்டு மூடிவிடப்போகும் பிபிசி அதிகாரிகள் இந்தியாவின் புதுதில்லியிலிருந்து (தமிழ் நாட்டு சென்னையில் அல்ல) புதிய தமிழோசை நிகழ்ச்சியை புதிய ஊழியர்களுடன், புதிய நிகழ்ச்சி நிரலில் நடத்த இருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சி நிரலில் இலங்கைத் தமிழர்கள் விவகாரம் இடம் பெறுமா? பிபிசி புதுதில்லி தமிழோசையை உலகத் தமிழர்கள் கேட்டாலும் அதில் நம்பகத்தன்மையை அவர்கள் வைப்பார்களா? நிச்சயமாக இல்லை!

தமிழ் நாட்டிலிருந்து புற்றீசல்கள்போல வரும் ஊடகங்களையே அவர்கள் நம்புவதில்லை. புதுதில்லியிலிருந்து வரும் தமிழ் நிகழ்ச்சியையா அவர்கள் நம்பப் போகிறார்கள்? கடந்த 73 ஆண்டுகளாக (மிகக் குறிப்பாக), கடந்த 30 ஆண்டு காலமாக இலண்டன் பிபிசி தமிழோசையின் செய்திகள்மீது உலகத் தமிழர்கள் பெரும் நம்பிக்கை வைத்தார்கள். மற்ற ஊடகச் செய்திகள் பிரச்சார பரப்புரைகள் என்று கருதி நம்ப மறுத்தார்கள்.

73 ஆண்டு கால இலண்டன் பாரம்பரியம் அடுத்த ஆண்டில் இழுத்து வீழ்த்தப்படுகிறது! மண்ணோடு மண்ணாகப் போகிறது! அந்த வீழ்ச்சி எழுப்பப் போகும் புழுதியிலும், புகையிலும் மறைந்து நின்று சிலர் சிரிக்கத்தான் போகிறார்கள்!

என் கட்டுரையைப்படித்தபின் நீங்கள், "இதெல்லாம் காலத்தின் கோலம்! தலைவிதி! சரி; விட்டுத் தள்ளுங்கள்!" என்று கருதினால், நீங்கள் ஒன்றுமே செய்யத் தேவை இல்லை. சும்மா இருங்கள்! 'மாறாக நீங்கள் ஏதாவது செய்ய விரும்பினால் தமிழ் ஈழ உண்மைச் செய்திகளில் ஈடுபாடு கொண்ட தமிழ் நண்பர்களுடன் பேசுங்கள். உங்கள் அமைப்புகளிடம் விளக்குங்கள். உங்கள் நகராட்சி மன்ற தமிழ் கவுன்சிலர்களின் உதவியை நாடி, அவர்கள் மூலம் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினரை (எம்.பியை) சந்தியுங்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பும்படி செய்யுங்கள். எங்கள் குரல் எங்கள் ஊடகங்களுக்குள் 'தமிழ் மொழியில் மட்டும்' பேசப்படுவதால் மட்டும் பயனில்லை. எமது குரல் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எட்ட வேண்டும். பிரதமர் கமரன் அவர்களின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும்!

இதற்கு இலண்டன் தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகத் தமிழ் மக்கள், மற்ற ஊடகங்கள், வார்த்தகத்துறை பெருமக்கள், அனைவரின் ஒத்துழைப்பும் 'எமக்குத் தேவை!

**இது நிச்சயம் கிடைக்கும் என்று நாம் உறுதியாக நம்பலாமா?**



உ
சர்வம் சிவமயம் ஜகத்

# LONDON SIVAN KOVIL TRUST

4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk, Email: sivan.kovil@yahoo.co.uk - Charity Reg: 1051516

## இலண்டன் திருவருள்மிகு ஸ்ரீசிவன் திருக்கோயில்

## மஹோற்சவ விழா விஞ்ஞாபனம்

சிவனடியார்களே!

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராக விளங்குகின்ற எம்பிரானாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீதுள்ள அளப்பெரும் கருணை காரணமாக திருவுருவம் தாங்கி திருக்கோயில்களில் வீற்றிருந்து பஞ்ச கிர்த்தியங்கள் மூலம் இன்னருள் பாலித்து அருளாட்சி புரிந்து வருகிறார். இவ்வகையில் நீர்வளம், நிலவளம், மலைவளம் என்னும் சகல வளங்களும் நிரம்பப் பெற்ற சுவர்ணபூமியாகிய இங்கிலாந்து தேசத்திலே சைவமும், தமிழும் வளர்ச்சி பெற்று திருமகளின் திருவருட் பார்வையுடன் சிறப்பாக விளங்கும் லூயிஷம் பகுதியில் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் பெருமைகளுடன் சிவபுரம் என்னும் தமிழ் நாமமுடைய புண்ணிய ஷேத்திரமாகிய சிவராஜதானியில் எம்பிரானாகிய இறைவன் ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமான் கருங்கல்கோயில் கொண்டருளி ஆன்மாக்களைக் காப்பாற்றி வருகிறார். கருணாமூர்த்தியாகிய எம்பெருமானது வருடாந்தரப் பெருவிழாவாகிய பிரம்மோற்சவம் எனப்படும் மஹோற்சவ விழாவானது இவ்வருடம் நான்காவது ஆண்டுப் பெருவிழாவாக நடைபெறுவதற்கு இறைவனது பேரருள் கைகூடியுள்ளது. எனவே இவ்விழா நிகழும் சர்வ மங்களகரமான ஜயவருஷம், தஷிணாயணம், வர்ஷருது, ஆவணிமாதம் 13ம் நாள் (29.08.2014) வெள்ளிக்கிழமை துவஜாரோகணம் என்னும் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி ஆவணிமாதம் 32ம் நாள் (16.09.2014) திங்கட்கிழமை தீரத்தோற்சவத்துடன் பூரணத்துவம் பெறவுள்ளது. எனவே அடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக ஆலயம் வந்து மகா உற்சவமாகிய இப் பெருவிழாவிலும் அதற்கு முன்பின் நிகழவிருக்கும் அனைத்துப் பூஜா கைங்கர்யங்களையும் தரிசித்து அஞ்ஞானம் அகன்று மெய்ஞானம் பெற்று பரம்பொருளாகிய ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமானது கிருபையோடு பெருவாழ்வு வாழ்வீர்களாக!

## விழா நிகழ்ச்சிநிரல்

**நிகழும் ஜயவருஷம் ஆவணிமாதம் 12ம் நாள்**
**28.08.2014 வியாழன்: "பிள்ளையார் திருவிழா"**
மாலை 5.00மணி விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகம் ஆரம்பம் - ஸ்ரீமஹாகணபதிஹோமம்.
மாலை 6.00மணி - தீபாராதனை
இரவு 7.00மணி - மஹோற்சவ பூர்வாங்கக் கிரிகைகள் ஆரம்பம்
இரவு 8.00 மணி - வசந்தமண்டப விசேஷ சோடசோபசார தீபாராதனை
இரவு 8.30 மணி - விநாயகப் பெருமான திருவீதி எழுந்தருளல்
இரவு 9.30 மணி - அர்த்தஜாமப் பூஜை

**29.08.2014 வெள்ளி: துவஜாரோகணவிழா (கொடியேற்றம்)**
காலை 7.00மணி - சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேகம் ஆரம்பம்
காலை 9.00மணி - தீபாராதனை
காலை 9.30மணி - வசந்த மண்டப விசேஷ சோடசோசார தீபாராதனை
வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணங்கள்
காலை 11.00மணி - கொடியேற்றம் சுவாமிதிருவீதி எழுந்தருளல் சந்தி.ஆவாஹனம்
பகல் 1.00மணி - அன்னதானம்
மாலை 6.00மணி - நித்திய பூஜை
மாலை 6.30மணி - ஸ்தம்ப பூஜை - கலை நிகழ்வுகள்
இரவு 8.00மணி - வசந்த மண்டப விசேஷ தீபாராதனை, சுவாமி திருவீதி எழுந்தருளல்
இரவு 9.30மணி - அர்த்த ஜாமப் பூஜை - திருக்காப்பு

**30.08.2014 சனிக்கிழமை தொடக்கம் 13.09.2014 சனிக்கிழமை வரையும்**
காலை 8.00மணி - சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேகம் சங்கல்ப்பம்
பகல் 9.30மணி - தீபாராதனை
பகல் 10.30மணி - ஸ்தம்ப பூஜை
பகல் 11.45மணி - வஸந்த மண்டப விசேஷ தீபாரதனை, பாராயணங்கள் சுவாமி திருவீதி எழுந்தருளல்
பகல் 1.00மணி - அன்னதானம்
மாலை 6.00மணி - நித்திய பூஜை
மாலை 6.30மணி - ஸ்தம்ப பூஜை - கலைநிகழ்ச்சிகள்
இரவு 8.00மணி - வஸந்த மண்டப விசேஷ தீபாரதனை, பாராயணங்கள சுவாமி திருவீதி எழுந்தருளல்
இரவு 9.30மணி - அர்த்தஜாமப் பூஜை - திருக்காப்பு

**14.09.2014 ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவம் (தேர்த் திருவிழா)**
காலை 5.30மணி - சுவாமிகளுக்கு அபிஷேகம் ஆரம்பம்
காலை 6.30மணி - தீபாராதனை
காலை 7.00மணி - ஸ்தம்ப பூஜை
காலை 8.00மணி - வசந்த மண்டப விசேஷ தீபாராதனை, பாராயணங்கள
காலை 9.00மணி - சுவாமி திருத்தேரில் எழுந்தருளல்
பகல் 10.00மணி - தேர்த்திருவுலா ஆரம்பம்
பகல் 1.00மணி - தேர்சிவசந்நிதானம் வந்தடைதல் - அர்ச்சனைகள்
பகல் 2.00 மணி - பச்சை அலங்காரம் - சுவாமி ஆலயம் வந்தடைதல். அபிஷேகம், பஞ்சமுகார்ச்சனை, அன்னதானம்
இரவுத்திருவிழா வழமையான நேரத்தின்படி நடைபெறும்.

**15.09.2014 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் (தீர்த்தத்திருவிழா)**
காலை 6.00மணி - சுவாமிகளுக்கு அபிஷேகம் ஆரம்பம்
காலை 8.00மணி - தீபாராதனை
காலை 8.30மணி - ஸ்தம்ப பூஜை
பகல் 9.30மணி - சூர்ணோற்சவம்
பகல் 10.30மணி - வசந்த மண்டப விசேஷ தீபாராதனை - பாராயணங்கள்
பகல் 11.30மணி - தீர்த்தோற்சவத்திற்கு சுவாமி எழுந்தருளல்
தொடர்ந்து யாககும்ப அபிஷேகம் - திருவருட்பிரசாதம்
பகல் 1.00மணி - அன்னதானம்
மாலை 6.00மணி - நித்திய பூஜை
இரவு 7.30மணி - வசந்த மண்டப விசேஷ தீபாராதனை. பாராயணங்கள் திருவூஞ்சல்
இரவு 8.00மணி - துவஜஅவரோகணம் (கொடிஇறக்கம்) தொடர்ந்து சந்திவிஸர்சனம், மௌனோற்சவம், சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சார்ய உற்சவம், திருவருட்பிரசாதம்
இரவு 9.30மணி - அர்த்த ஜாமப் பூஜை - விழா பூரணத்துவம் பெறுதல்

**16.09.2014 செவ்வாய்க்கிழமை – பிராயச்சித்தஅபிஷேகம்**
காலை 10.00மணி - அபிஷேகம் ஆரம்பம்
பகல் 12.00மணி - தீபாராதனை
பகல் 1.00மணி - அன்னதானம
இரவு 6.00மணி - நித்திய பூஜை - கலைநிகழ்ச்சிகள்
இரவு 8.00மணி - வஸந்த மண்டப விசேஷ தீபாரதனை, பாராயணங்கள் - சுவாமி திருவீதி எழுந்தருளல்
இரவு 9.30மணி - அர்த்த ஜாமப் பூஜை - திருக்காப்பு

**17.09.2014 புதன்கிழமை - பூங்காவனத்திருவிழா**
மாலை 5.00மணி - அபிஷேகம் ஆரம்பம்
மாலை 6.30மணி - நித்திய பூஜை
இரவு 7..00மணி - ஸ்ரீசந்திரசேகரப் பெருமானுக்கு திருக்கல்யாணம் ஆரம்பம். சுவாமி பூங்காவனத்தில் எழுந்தருளல், திருவீதியுலா.
இரவு 9.30மணி - அர்த்த ஜாமப் பூஜை - திருக்காப்பு

**18.09.2014 வியாழக்கிழமை மாலை 5.00 மணி - நவோத்தரகலசசங்காபிஷேகம் (109கலசசங்குகள்)ஆரம்பம்**
இரவு 7.30மணி - நித்தியதீபாராதனை
இரவு 8.00மணி - வசந்தமண்டபவிசேஷதீபாராதனை - சுவாமி திருவீதி எழுந்தருளல்
இரவு 9.00மணி - அர்த்த ஜாமப் பூஜை - திருக்காப்பு

**19.09.2014 வெள்ளிக்கிழமை ஸ்ரீபைரவர் பொங்கல் விழா**
மாலை 5.00மணி - ஸ்ரீபைரவப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகம் ஆரம்பம்
மாலை 6..30மணி - தீபாராதனை - கலைநிகழ்ச்சிகள்
இரவு 8.00மணி - வசந்த மண்டப விசேஷ தீபாராதனை பாராயணங்கள், ஸ்ரீபைரவப் பெருமான் திருவீதி எழுந்தருளல்
இரவு 9.30மணி - அர்த்த ஜாமப் பூஜை. திருக்காப்பு

**29.08.2014 வெள்ளி: ஸ்ரீவிநாயகர் சதுர்த்தித் திருவிழா**
காலை 8.00மணி -
பஞ்சவிம்ஸதிகலஷாபிஷேகம்
உபயம்- திரு. V. கிருஷ்ணானந்தராஜ் குடும்பம்
மாலை 4.00மணி -
நவோத்தரசதசங்கபிஷேகம்
உபயம்- திரு. V.K. கணேசமூர்த்தி குடும்பம

தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா)

# “தம்பி வருவார்! தமிழீழம் காண்பேன்!! ராஜபக்ஷ் கும்பல் நாசமாகப் போகும்!!!”





“தம்பி வருவான்... தம்பி வருவான். நம்பி இருங்கள் தோழர்களே என்று பாடல் இயற்றினேன். தம்பி நிச்சயம் வருவார். விளக்கேற்றவார். தமிமீழத்தை ஓர் கண்கள் பார்க்கும். இனப் படுகொலைக்கு காரணமான கொழும்பு, ராஜபக்ஷ், இவருக்கு உடந்தையாக இருந்த தேசங்கள் இருளாகும்... நாசமாகப் போகும்!” என்று பிரபாகரனுடன் மிகவும் நெருக்கமாக இருந்த புலவர் புலமைப் பித்தன், அவர் எழுதி வெளியிட்ட ‘தலைவர் - தம்பி - நான்’ நூல் மற்றும் ‘விழுவதெல்லாம் எழுவதற்கே’ பாடல் குறுந்தகடு வெளியீட்டு விழாவில் அறம் பாடினார்.

புலவர் புலமைப்பித்தன் ‘தமிழக அரசியல்’ இதழில் அன்மையில் எழுதிய, ‘தலைவர்- தம்பி - நான்’ தொடர் நூல் வடிவம்பெற்று அதன் வெளீயீட்டு விழாவும்... புலவர் எழுதிய, ‘விழுவதெல்லாம் எழுவதற்கே’ என்ற தலைப்பிலான பாடல் குறுந்தகடு வெளியீட்டு விழாவும் சென்னையில் நடந்தது. இந்நிகழ்வில், குறுந்தகட்டை புலவரின் இல்லத்தரசியார் தமிழரசி வெளியிட இயக்குனர் பார்த்திபன் பெற்றுக் கொண்டார்.

‘தலைவர் - தம்பி - நான்’ நூலை ‘தமிழக அரசியல்’ பதிப்பாளர் திரிசக்தி சுந்தர்ராமன் வெளியிட, திரைப்பட்த் தயாரிப்பாளர் மணிவண்ணன் மற்றும் நடிகர் மயில்சாமி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். விழாவில் பேசிய பார்த்திபன்;

“புலவர் எழுதிய பாடல்கள் நாம் கேட்டு மகிழ்வடைய அல்ல. நம் உடம்பில் சூடும், உயிரில் சொரணையும் ஏற்படுத்துவதற்காக எழுதப்பட்ட பாடல்கள், தமிழை வாழவைக்க இவ்வளவு வயதான நிலையிலும் புலவர் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு எப்போதுமே நான் தலைவணங்குவேன்” என்று குறிப்பிட்டார்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கி, தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கோவை ராமகிருஷ்ணன் பேசுகையில்... “ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழகத்துக்கும் முக்கிய பங்கு உண்டு. அதில் பெரும்பங்கு புலவருக்கு உண்டு. தமிழகத்தில் புலிகளுக்கான பயிற்சி நடந்தபோது... ஒரு வீரருக்கு ஒரு நாளைக்கு ஏழு ரூபாய்தான் வழங்கினார் பிரபாகரன். அவ்வளவு நிதிப் பற்றாக்குறை. ஒரு பிரட், ஒரு வாழைப்பழம்தான் அந்த ஏழு ரூபாயில் வாங்கமுடியும். பிரட் சாப்பிடும்போது தொண்டை அடைக்காமல் இருப்பதற்காக ஜாம் போல வாழைப்பழத்தைக் கடித்துக் கொள்வார்கள். இந்த நிலையில்தான் புலவரின் ‘தலைவர்’ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஈழப்போராட்டத்துக்கு ஐந்துகோடி ரூபாயை அள்ளிக் கொடுத்தார். ஈழப்போராட்டத்தின் மிகப்பெரிய பரிணாம வளர்ச்சி புரட்சித் தலைவரின் உதவியால்தான் நிகழ்ந்தது.

ஒருநாள் பிரபாகரனை திடீரென அழைத்தார் எம்.ஜி.ஆர். கையை வீசிக் கொண்டு வந்தார் பிரபாகரன். ‘எவ்வளவு பணம் இருந்தால் விடுதலை பெற்றுவிடலாம்?’ என்று எம்.ஜி.ஆர். கேட்க பிரபாகரனுக்கு கையும் ஓட வில்லை, காலும் ஓடவில்லை. நூறுகோடி ரூபாய் என்று சொல்லிவைத்தார்கள். அப்போது உள்ளே சென்ற எம்.ஜி.ஆர். ஒரு பையில் கொண்டுவந்து டேபிளில் பணக்கட்டுகளைக் கொட்டினார்.

இப்போதைக்கு இதை வைத்துக் கொள்ளுங்கள். விரைவில் நூறு கோடிக்கும் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்.

என்ன செய்வது, எப்படி எடுத்துச் செல்வது என்று கூட பிரபாகரனுக்குத் தெரியவில்லை. உடனே புரட்சித் தலைவர் தன் பாதுகாவலர்களை அழைத்து. ‘இதை பண்டல் செய்யுங்கள்’ என்று உத்தரவிட்டார். மேலும், ‘என் வண்டியில் (முதலமைச்சரின் கார்) இவர்களை அழைத்துச் சென்று அவர்கள் எங்கே விடச்சொல்கிறார்களோ அங்கே விட்டுவிட்டு வாங்கள்’ என்று உத்தரவிட்டிருக்கிறார். நாங்கள் கோவை சிறையில் இருந்தபோது, எம்.ஜி.ஆருக்கு நெருக்கமான காவல்துறை கண்காணிப்பாளர் ஒருவர் இந்தத் தகவலைச் சொன்னார்.




திருவான்மியூருக்கு வந்த பிரபாகரன் பணத்தை எண்ணிப் பார்த்தபோது ஐந்துகோடி ரூபாய் இருந்தது. உடனே ஒருவரை தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி, ‘அண்ணா நீங்கள் கொடுத்ததில் ஐந்துகோடி ரூபாய் இருந்தது அண்ணா...’ என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட எம்.ஜி.ஆரை பிரபாகரனுக்கு அறிமுகப்படுத்தியதில் புலவர் ஐயாவுக்கு பெரும் பங்கு உண்டு.

ஆயுதங்களால்தான் விடுதலைப் போராட்டம் என்று இல்லை. கவிதைகளாலும் விடுதலைப் போராட்டங்கள் நடத்திவருபவர்களில் முக்கியமானவர் புலவர் ஐயா’ என்று சுட்டிக்காட்டினார்.



‘தமிழக அரசியலைத் தவிர வேறு எந்த பத்திரிகைக்கும் இந்தக் கட்டுரைகளை வெளியிட துணிச்சல் இல்லை’ என்ற முன்னுரையோடு அழைக்கப்பட்டார் திரிசக்தி சுந்தர்ராமன். அவர் பேசுகையில்:

“ஈழத்தைப் பற்றி எழுதினால் அவர்கள் பிடித்துப்போய்விடுவார்கள், இவர்கள் பிடித்துப் போய்விடுவார்கள் என்று பல மிரட்டல் கலந்த அச்சுறுத்தல்கள் வந்தபோதுதான்... ஈழத்தைப் பற்றி அதிகம் வெளியிடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அந்த வகையில் புலவரின் எழுத்துக்கள் தமிழக அரசியலில் கொதிப்போடு வந்தன. தமிழ் வெப்பமும் படைத்த புலவர், ‘கல்யாணத் தேன் நிலா, காய்ச்சாத பால் நிலா’ என்ற குளிர்ச்சியும் படைத்தவர். ஈழம் நமக்கு அளித்த கொடை எம்.ஜி.ஆர். ஆனால் ஈழத்துக்கு நாம் என்ன செய்தோம்? என்ற குற்ற உணர்ச்சி இந்தத் தலைமுறையில் எல்லாருக்கும் இருக்கக் கூடியது.

புலவர் ஐயாவைப் பொறுத்தவரை தன்னைப் பற்றிய விமர்சனத்தில் தாராளமாக இருக்கிறார். பிறரைப் பற்றிய விமர்சனத்தில் சிக்கனமானவர். இது அவரது மிகச் சிறந்த நாகரிகம். 78 வயதாகும் புலவர் நூறு வயது வாழ்வார். அதுவரை புலவர் அவர்களின் ஈழ எழுத்துக்களுக்கு ‘தமிழக அரசியல்’ தொடர்ந்து ஆதரவளிக்கும்” என்று முடித்தார்.

நிகழ்ச்சியில் தன்னை எழுதப்படிக்கத் தெரியாதவன் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட நடிகர் மயில்சாமி... எம்.ஜி.ஆரைப் பற்றி உணர்ச்சிமயமாகப் பேசினார்.

“1983-ல் கிருஷ்ணபிரசாத் ஹோட்டலில் நான் வேலை செய்தபோது அந்தப் பக்கம் வந்த எம்.ஜி.ஆர். கருப்பு சட்டை போட்டிருந்தார். எம்.ஜி.ஆர். ஏன் கருப்பு சட்டை போட்டிருக்கார்னு நான் விசாரிச்சப்பதான்... பக்கத்து நாட்ல தமிழர்களுக்கு நடக்குற கொடுமைகள் பத்தி தெரியவந்துச்சு, அதனால நானும் கருப்புச் சட்டை போட்டுக்கிட்டேன். அடிக்கடி இலங்கை போய்வந்தவன் நான். என்னைக்கு தமிழர்களுக்கு இப்படியெல்லாம் நடக்குதுன்னு தெரிஞ்சுதோ... அப்போலேர்ந்து இலங்கை மண்ணையும் மிதிக்கிறதுல்ல. அந்த நாட்டு மேல பறந்துபோற விமானத்துல கூட போறதில்லை” என்று சொல்லி வியக்க வைத்தார் மயில்சாமி.

நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்தவரும் புலவரின் மாணாக்கருமான அய்யநாதன், எழுத்தாளர் பாமரன், ஓவியர் புகழேந்தி, இயக்குனர் கௌதமன், எழுத்தாளர் புகழேந்தி தங்கராசு ஆகியோரின் உரையை அடுத்துப் பேசிய... மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன்,

“ஈழப் போராட்ட வரலாறுபற்றி இந்தத் தலைமுறைக்கு விரிவான தகவல்களை தனது புத்தகத்தில் சொல்கிறார் புலவர். குறிப்பாக ஒரு கட்டுரையில் புலவரின் வீட்டு பால்கனியில் இருந்த பிரபாகரன் திடீரென தன் சகாக்களோடு விரைந்து வெளியேறுகிறார். ஏன் எனக் கேட்டபோது, ‘மொசாத், மொசாத்’ என்று சொல்வதாக புலவர் குறிப்பிட்டிருக்கிறார். பிரபாகரன் குறிப்பிட்டது இஸ்ரேலின் உளவுப் படையான மொசாத். அன்று முதல் இன்றுவரை ஈழ விடுதலைப் போராட்டம் சர்வதேசத்தின் வேட்டைப் பொருளாகவே இருப்பதை நாம் உணரவேண்டும்” என்று குறிப்பிட்டார் திருமுருகன்.

ஏற்புரை நிகழ்த்திய புலவர் புலமைப்பித்தன் நரை விழுந்த புலியாய் உறுமினார். “போன வருடமே எனக்கு இதயத்தில் அடைப்பு ஏற்பட்டது. அப்போதே நான் போயிருக்க வேண்டியவன். ஆனால் இன்னும் காலம் ஏன் என் மீது கருணை காட்டி விட்டு வைத்திருக்கிறது? என் கண்கள் ஏன் இன்னும் ஒளியிழக்காமல் இருக்கின்றன? ஈழம் மலரும், அங்கே ஈழத்தின் கொடி பறப்பதை என் கண்கள் காண்பதற்காகத்தான் காலம் என் மீது கருணை காட்டி விட்டு வைத்திருக்கிறது. ‘தம்பி வருவான்... தம்பி வருவான்... நம்பியிருங்கள் தோழர்களே’ என்று பாடல் இயற்றினேன். தம்பி வருவார்!” என்று நம்பிக்கை பிரகடனம் வெளியிட்டவர்...; ஈழ இனப்படுகொலைக்கு காரணமான கொழும்பு, இலங்கை அதிபர் ராஜபக்ஷே, அவருக்கு உடந்தையாக இருந்த தேசங்கள் எல்லாம் நாசமாய் போக அறம்பாடி முடித்தார்.



CROYDON இல் புதுப்பொலிவுடன்
JK Gold House & Fashion House
புத்தம் புதிய டிசைன்களில் தரமான தங்க நகைகள்! நியாயமான விலையில்!!
கண்கவரும் ஆடைகள் - SAREE, SURIDAR, CHOLI இன்னும் பல....
அலங்காரப் பொருட்கள் - நெக்லஸ், காப்புகள்....கோயில் சாமான்கள்
நகை திருத்த வேலைகள்
நகை அடகு பிடித்தல்
இலங்கை இந்தியாவுக்கான பணமாற்றுச் சேவை
பொன்னுருக்கல். தாலிக் கொடி மற்றும் பல....
பஞ்சாபி. சாறி பிளவுஸ் போன்ற பல்வேறு ஆடைகள் தைத்தும். திருத்தியும் கொடுக்கப்படும்.
உங்களுக்காக புதிய அதிர்ஷ்ட லாப நகைச்சீட்டு! உங்கள் பெயர்களை உடனே பதிவு செய்துகொள்ளுங்கள்.
JK GOLD HOUSE & FASHION HOUSE
314 - 316 London Road, Croydon CRO 2TJ
Tel : 020 86844577
(Best Food Super Market முன்பாக)




ENGINE TEC MOTORS
we offer Facilities for
Servicing
Clutches
Brakes
Overhauls
Car Electricals
Pre - MOT Checks
ALL Types of Repair & Body Work
Insurance Work Undertaken
என்ஜின் ரெக் மோட்டர்ஸ் உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்
Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945
Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com
Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE
தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

# Money Transfer / Money Exchange

## *The Best Deal in Tooting to*



# SRI LANKA

## இலங்கைக்கான பணமாற்று சேவை
## நம்பிக்கை நாணயமிக்க மிக துரிதமான சேவை

குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள் உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.



**Free Transfers to the First 100 Customers on the day of opening!**

**Opening Monday 25th August 2014**

# 48 Mitcham Rd, Tooting SW17

**CEC CURRENCY EXCHANGE CORPORATION LTD.**

**The leading Money Exchange Company in London**

**Whether Buying or Selling we offer unbeatable rates on all currencies**

**EURO – USD – CAD – AUD – SEK –NOK – DKK – YEN and all other currencies available same day**

**FAST CASH** 1999

SEND TODAY - COLLECT TODAY

**The Fastest & the Safest Money Transfer Service to Sri Lanka & Worldwide**

**Send any amount for just £5.00 and receive an official receipt for each transaction**

**The Highest Official Exchange Rate - *Guaranteed***

## www.cecltd.com | 0208 886 4488

MCG



தொடர்கதை

# 'புனித யாத்திரை'

சிவ தியாகராஜா



# போர் முழக்கமும் பொன்னம்மாவின் பிரிவும்

*"பெற்ற தாயினும் சிறந்த கோயிலும் இந்தத் தரணியிலே ஏது?*

*மற்ற தெய்வங்கள் யாவும் அன்னையின் அன்பாம் அருளின்முன் நில்லாது!"*

## 1

1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9-ந் திகதி பிற்பகல், நாங்கள் வசித்த யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலிருந்த நமது வீட்டின் பின் வளவில் பிரம்மாண்ட சத்தத்துடன் வெடித்த குண்டினால் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் வெடித்து நொறுங்கின; கூரை ஓடுகள் உடைந்து சிதறின. அந்த அதிர்ச்சியில் வீட்டு ஹாலில் சோபாவில் சாய்ந்துகொண்டிருந்த நிலையில் பொன்னம்மா ஆன்ரியின் இருதயத் துடிப்பு நின்று அவரது உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது.

அவரது ஆஸ்துமா நோய் நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டு வந்து அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த போதிலும், எங்களோடு சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தவருக்கு சடுதியாக ஏற்பட்ட இந்த முடிவை நம்மால் ஜீரணிக்க முடியவில்லை.

பிருந்தா வாய்விட்டுக் கதறி அழுதாள்.

"அம்மா, அம்மா! இந்த உலகில் எனக்கு உறவாக, ஊன்றுகோலாக, தாயாக, தந்தையாக, தெய்வமாக இருந்தவர் நீங்கள் ஒருவர்தான்! இன்று உங்களை இழந்து அனாதையாக நிற்கிறேன். இனிமேல் யார் என்னை உங்களைப்போல ஆதரிக்கப் போகிறார்கள்."

அவளை ஆதரவாகக் கட்டியணைத்தேன். அவளும் என் தோள்மீது சாய்ந்து கொண்டு, தனது ஆதங்கம், துக்கம் அனைத்தும் குறையும் வரை அழுது தீர்த்தாள்.

ஆஸ்பத்திரிக்குச் சென்று கொழும்பிலிருந்த பொன்னம்மா ஆன்ரியின் அண்ணனுக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தேன். யாழ்ப்பாணத்தில் போர் ஆரம்பித்த நிலையில் தன்னால் அங்கே வரமுடியாது எனக் கூறி, தனது அனுதாபத்தை மட்டும் தெரிவித்தார். பிருந்தாவின் எதிர்காலம் பற்றி அவர் எதுவுமே கூறாதது ஆச்சரியமாக இருந்தது. இந்த அண்ணனின் மேல் ஆன்ரி எத்தனை பாசமும் எதிர்பார்ப்பும் கொண்டிருந்தார் என்பதை அறிந்திருந்தேன். அனாதரவாக நிற்கும் தனது மருமகளைப் பற்றி எதுவுமே விசாரிக்காத இந்த மனிதர் எத்தகைய மனிதராக இருப்பார் என எண்ணினேன்.

செய்தி கேட்டறிந்ததும் எனது ஆஸ்பத்திரி நண்பர்கள் வீட்டிற்கு வந்து, அனுதாபம் தெரிவித்து, வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். நண்பன் டாக்டர் பாலகுமார் தனது தாயார் விசாலத்தோடு பெட்டி படுக்கை சகிதம் வந்திருந்தான். அன்றிலிருந்து விசாலம் மாமி பிருந்தாவிற்குத் துணையாக எங்கள் வீட்டிலேயே தங்கினார்கள்.

மறுநாள் காலை பொன்னம்மாவின் தகனக்கிரியைகளுக்கு வேண்டிய ஆயத்தங்களை நண்பர்கள் சிவானந்தனும், பாலகுமாரும் கவனித்துக்கொண்டார்கள். அன்று பிற்பகல் கோம்பையன் மணல் மயானத்தில் பொன்னம்மா ஆன்ரியின் பூதவுடல் அக்கினியோடு சங்கமமாயிற்று. அந்தச் சமயத்தில் எனது நண்பர்கள் காட்டிய ஆதரவும், ஆற்றிய உதவிகளும் நான் வாழ்நாளில் மறக்கமுடியாதவை.

பொன்னம்மா ஆன்ரியின் பிரிவு பிருந்தாவை வெகுவாகப் பாதித்திருந்தது. சிறு வயதில் அவளது தந்தையார் வேலை நிமித்தம் வெளிநாடு சென்றபின் தாயாரின் அன்பான அரவணைப்பில் வளர்ந்த பிள்ளை அவள். அவளுக்குத் தாயாகவும் தந்தையாகவுமிருந்து கட்டிக்காத்த அந்தத் தாயின் பிரிவை அவளால் தாங்க முடியவில்லை. விசாலம் மாமி அவளுக்குப் பக்கத்துணையாக இருந்து தேற்றி வந்தார்.

பொன்னம்மா ஆன்ரியின் பிரிவின் பின்னர் சமையல் வேலைகளை விசாலம் மாமி கவனித்து வந்தார். நண்பன் பாலகுமார் சாப்பாட்டு நேரங்களில் மட்டும் வந்து போனான். ஒரு மாதம் கழித்து இரண்டாம் குறுக்குத் தெருவிலிருந்த வாடகை வீட்டை விட்டுவிட்டு எங்களுடனே அவனும் வந்து தங்கினான்.

## 2

ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் விடுதலைப்புலி போராளிகளோடு மோதல்கள் ஏதும் இல்லாதிருந்தும் ஸ்ரீலங்கா அரச படையினரின் விமானங்களும், நீண்டதூர பீரங்கிகளும் யாழ்ப்பாணத்தின் வடபகுதியான வலிகாமத்தின் மீது குண்டுகளையும், ஷெல்களையும் அடித்துக் கொண்டேயிருந்தன. சாதாரண மக்கள் தினசரி இறந்து கொண்டேயிருந்தார்கள். கை, கால் இழந்து காயம் பட்டவர்களால் ஆஸ்பத்திரிகள் நிறைந்து கொண்டேயிருந்தன.

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு உணவு விநியோகம் தடைப்பட்டு பஞ்சம் தலைகாட்டியது. நமது வீட்டில் இந்த நிலைமையை எதிர்பார்த்து ஏற்கனவே அரிசி, பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை நான் ஏற்கனவே சேகரித்து வைத்திருந்தமையால் பட்டினியின்றி சமாளிக்க முடிந்தது.

ஒக்டோபர் மாதம் 17-ந் திகதி ஸ்ரீலங்கா இராணுவம் 15,000 போர் வீரர்களுடன் பலாலி முகாமிலிருந்து டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள், ஆட்டிலரி வண்டிகள் சகிதம் பலாலி வீதியாலும், அச்சுவேலி வீதியாலும் யாழ்ப்பண நகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் கிடைத்தன. இத்தாக்குதலுக்கு அவர்கள் "ரிவிரேஸா நடவடிக்கை" (Operation Riviresa) எனப் பெயர் கொடுத்திருந்தார்கள். அம்மாதத்தில் யாழ்ப்பாணத்தில் பருவ மழை (monsoon) ஆரம்பமாகியிருந்தது.

விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தை யாழ்ப்பாண நகருக்குள் புகவிடாது சமரில் ஈடுபட்டிருப்பதாக அவர்களது வானொலி அறிவித்தது. இலங்கை வானொலி அரசப் படைகளின் முன்னேற்றத்தையும், அவர்களின் வீர தீரத்தையும், கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் புள்ளிவிவரங்களையும் தந்துகொண்டிருக்கிறது.

புன்னாலைக் கட்டுவனில் முன்னேறி வந்துகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தை நேருக்கு நேர் நின்று போரிட்ட விடுதலைப்புலிகள் 150 போராளிகளை இழந்தார்கள். இந்த இழப்பைத் தொடர்ந்து அவர்கள் தமது போர்த் தந்திரத்தை மாற்றிக்கொண்டார்கள். இராணுவத்தை நேரடியாகத் தாக்காமல் பின்வாங்கி கொரில்லாப் போரில் ஈடுபட்டார்கள். கணிசமான போராளிகளை வன்னிக்குப் பின்வாங்கச் செய்து, பின்னொரு சமயம் இராணுவத்தோடு போர் புரிய முடிவெடுத்தார்கள். இதன் காரணமாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுலபமாக யாழ்ப்பாண நகருக்குள் புக முடிந்தது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட போர்த் தந்திரோபாயத்தை இந்திய இராணுவ அதிகாரி லெவ்ரினன்ற் ஜெனரல் அமர்ஜித் சிங் கல்கத் பின்வருமாறு விபரிக்கிறார்:

"கவசவாகனங்களுடனும், ஆட்டிலரிகளுடனும் ஒரு படைப்பிரிவு ஒரு குறிப்பிட்ட தூரம் வரை போகும். அதன்பின் அவர்கள் கைப்பற்றிய

பகுதியை எதிரிகள் இல்லாமல் சுத்திகரிப்பார்கள். எதிராளி தங்கியிருந்து தாக்கக்கூடிய உயர்வான கட்டிடங்கள் ஏதும் எதிர்ப்பட்டால் அதை விமானப்படை கொண்டு அல்லது பீரங்கியின் உதவியோடு குண்டடித்துத் தகர்ப்பார்கள். அதன்பின் சுத்திகரிப்பு, இப்படியாகத் தரைமட்டமாக்கப்படும் கட்டிடங்களில் பெரும்பாலும் எதிரிகள் இருப்பதில்லை. இப்படியாக முன்னேறும் படை; தன் பின்னால் கட்டிடங்களின் இடிந்த குவியல்களை விட்டுச் செல்லும். பத்திரிகை, செய்தி கட்டுப்பாட்டின் மூலம் இந்நிகழ்ச்சி வெளியுலகத்திற்குத் தெரியாதவாறு கட்டுப்படுத்தப்பட்டது."

## 3

ஒக்டோபர் மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமை. யாழ்ப்பாண நகரில் அன்றைய பொழுது வழக்கம்போல் இடிமுழக்கத்தோடு - ஷெல் வெடிச் சத்தத்தோடு - விடிந்தது. ஐந்தாறு ஷெல்கள் கூவிக்கொண்டு பறந்து வந்து வெடித்து, உயிர்ப்பலி எடுத்தன. வடக்கே குண்டுகள் வெடிக்கும் சத்தமும், இடையிடையே துப்பாக்கி வெடிக்கும் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

நான் குளித்து வெளிக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போவதற்காக வீதியில் இறங்கியபோது, வீதியில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. கையில் பிடித்த பெட்டிகளோடும், கோணிப் பைகளோடும் மக்கள் சென்று கொண்டிருந்தார்கள். உரும்பிராய், கோப்பாய் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நகர்ப்புறங்களில் தங்குவதற்காக இடம்தேடிக் கொண்டிருந்தார்கள்.

நான் மின்சார நிலைய வீதி வழியே சென்று, நகர பஸ் நிலையத்தை அடைந்த சமயம், பஸ் நிலையத்தில் நின்ற விடுதலைப்புலிகளின் அரசியல் அங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கையில் பிடித்த ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

"ஸ்ரீலங்காவின் சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாண நகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்று மாலை ஆறு மணிக்கு முன்னர் யாழ் நகரம் உட்பட முழு வலிகாமத்திலிருக்கும் மக்கள் அனைவரும் உங்கள் வீடுகளை விட்டு வெளிக்கிட்டு நாவற்குழிப் பாலத்தைக் கடந்து, தென்மராட்சிக்குப் போய்விட வேண்டும். இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு நாவற்குழிப் பாலம் தகர்க்கப்படும். அதற்கு முன்னர் போகாவிட்டால் நீங்கள் சிங்கள ஆமிக்காரர்களால் கொல்லப்படுவீர்கள்."

நான் விரைந்து ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். வழமைபோல பலர் இரத்தக் காயங்களோடு ஆஸ்பத்திரிக்கு வந்து கொண்டிருந்தார்கள். அவசர அவசரமாக என்னாலான சிகிச்சைகளைச் செய்துவிட்டு, பாலகுமாரை தேடிச் சென்றேன். மருத்துவ அதிகாரியிடம் தெரிவித்துவிட்டு, அன்று பிற்பகல் வீட்டைவிட்டுப் புறப்படுவதாக முடிவு செய்தோம். பாலகுமாரின் மாமன் - விசாலத்தின் தம்பி முறையான சதாசிவம் என்ற ஆசிரியர் சாவகச்சேரியில் இருக்கிறார். பரோபகாரமான மனிதர். அவரது வீட்டில் தங்குவதற்கு கட்டாயமாக இடம் கிடைக்கும் என உறுதியளித்தான் பாலகுமார்.

அன்று பிற்பகல் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பிய நான் விசாலம் மாமிக்கும் பிருந்தாவிற்கும் விஷயத்தைக் கூறி அன்று மாலை இருட்டுவதற்குமுன் நாங்கள் வீட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன்.

ஏற்கனவே இச் செய்தியை இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வீடு வீடாகச் சென்று அறிவித்திருப்பதாக அவர்கள் சொன்னார்கள். நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்த சமயம் பாலகுமாரும் வீடு வந்து சேர்ந்தான்.

"தற்காலிகமாகத்தான் எங்களை வீடுகளை விட்டு வெளியேறும்படி சொல்லியிருக்கிறார்கள். இராணுவத்தை இங்கிருந்து விரட்டிய பின்னர் நாம் மீண்டும் திரும்பி வரலாம் என்கிறார்கள்" என்றாள் பிருந்தா.

"இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் அவர்களைத் திரும்ப விரட்டுவதென்பது நடக்காத காரியம் பிருந்தா" என்றான் பாலகுமார்.

"ஏன் நடக்காத காரியம்?"

"இரு வாரங்களுக்கு முன்னர் ஒக்டோபர் 17-ந் திகதியிலிருந்து 15,000 வீரர்களுடன் ஸ்ரீலங்கா இராணுவம் 'ரிவிரேஷா' என்ற இத்தாக்குதலை ஆரம்பித்தது. சென்ற இரு வாரங்களாக விடுதலைப் புலிகள் இந்த இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டார்கள். முன்னால் விமானங்களை விட்டுக் குண்டடித்து, அதன்பின்னே டாங்கிகளுடனும், கவச வாகனங்களுடனும் வரும் பதினையாயிரம் வீரர்களை எதிர்த்து வெற்றி காண முடியாது என்ற நிலையில் புலிப்படையினர் பின்வாங்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்கள் பின்வாங்குவது சரி; அதற்காக வலிகாமத்து மக்கள் அனவரையும் தமது வீடு வாசல்களை விட்டுவிட்டு, வெளியேறும்படி உத்தரவிடுவது எந்த வகையில் நியாயம்?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் முந்தையர் வாழ்ந்து, சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்த்து, நம் வியர்வையோடும் இரத்தத்தோடும் கலந்துவிட்ட பந்த பூமி இந்த மண். இதை விட்டுவிட்டு ஓடுவதா? எங்கே ஓடுவது? எப்படி ஓடுவது?

எங்களை ஓடச் சொன்னவர்கள் இதன் விளைவுகளை, தெளிவான சிந்தனையுடன் தீர்க்கமாக அலசி ஆராய்ந்து சொன்னார்களா? அல்லது குறுகிய பார்வையுடன் சிந்தனையிழந்து சொன்னார்களா?"

அவன் பேசி முடித்தபோது ஒரு புயலடித்து ஓய்ந்தது போலிருந்தது. பிருந்தா மௌனமானாள். அப்போது பிருந்தாவிற்கு நிறைமாதம். டாக்டர்கள் எதிர்பார்த்த பிரசவத் தேதியிலிருந்து மேலும் ஒரு வாரம் கடந்துவிட்டிருந்தது. பெரிய வயிற்றில் பிள்ளையோடு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"கிருஷ், நாங்கள் கட்டாயமாக இன்றைக்கே புறப்பட வேண்டுமா? போகிற வழியில் பிரசவ வலி ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது?"

"இன்றிரவு நடுநிசிக்கு நாவற்குழிப் பாலத்தைத் தகர்க்க புலிகள் முடிவு செய்திருப்பதாக அறிகிறேன். அது நடப்பதற்கு முன்னர் நாம் யாழ்ப்பாண நகரை விட்டு வெளியேறிவிட வேண்டும். நாவற்குழிப் பாலம் தகர்க்கப்பட்டுவிட்டால், அதன் பின்னர் இங்கிருந்து வெளியேற முடியாது; அப்புறம் ஆமிக்காரன் தருகிற தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

பிரசவவலி ஏற்பட்டால் என்ன? அதுதான் ஒன்றுக்கு இரண்டு டாக்டர்மார் உன்னோடு வருகிறோமே. இப்படி வசதி எத்தனை பேருக்குக் கிடைக்கப் போகிறது?" என்றேன்.

ஷெட்டிலிருந்த எனது 430 காரை வெளியிலெடுத்து பெற்றோல் கான்களிலிருந்த பெற்றோலை ஊற்றி காரின் தாங்கியை நிரப்பிக் கொண்டேன். காரின் பின்புற 'டிக்கி'யைத் திறந்து மேலும் சில கான்களை அதில் வைத்தேன்.

நாங்கள் நான்கு பேரும் நான்கு சிறிய 'சூட்கேஸ்களை' எடுத்து, எங்களுக்கு அவசியம் தேவையான பணம், கல்வித் தராதரப் பத்திரங்கள், சேட்டிபிக்கேற்றுகள், பாஸ்போர்ட் என்பவற்றை எடுத்து வைத்தோம். உயிருக்கு பயந்து ஓடும்போது உடைமைகளையெல்லாம் எடுத்துச்செல்ல இயலாது. ஒரு 'டிராவலிங் பேக்கில்' சில மருந்து மாத்திரைகள், ஊசி மருந்துகள், சுடுநீர்ப் போத்தல் என்பன அடங்கின. ஒரு 'பிளாங்கெட்' போர்வையையும், இரு தலையணைகளையும் எடுத்துக் கொண்டேன்.

## 4

மாலை மணி ஐந்து.

வானம் கருமுகில்களால் மூடப்பட்டு நிலத்தை இருள் கவ்வ ஆரம்பித்தது. மழை பெய்யத் தொடங்கியது.

அத்தியாவசியமான பொருட்களை மட்டும் எடுத்து காரில் ஏற்றியபின் வீட்டின் வெளிக்கதவைப் பூட்டினேன்.

நெஞ்சு கனத்தது.

என்னைப் பொறுத்தவரை இது சாதாரணமான ஒரு குடும்ப வீடு அல்ல; ஒரு கோயில்.

கடந்த இரு ஆண்டுகளாக எனக்குத் தஞ் சமளித்த சரணாலயம் இந்த 'பிருந்தாவனம்'.

அது மட்டுமல்ல; வாழ்க்கைப் பயணத்தில் எனக்கு தோளோடு தோள் தந்து பயணிக்க ஒரு துணையை அமைத்துத் தந்திருப்பதும் இந்த ஆலயம்தான்.

இனிமேல் எப்போது இங்கே மீண்டும் வருவேனோ என்பதை நானறியேன்.

காரின் முன் 'பாஸஞ்சர்' சீட்டில் பாலகுமார் உட்கார்ந்திருந்தான். பின் ஆசனத்தில் விசாலம் மாமியும், பிருந்தாவும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் நமது சூட்கேஸ்கள் அடுக்கிக் கிடந்தன.

காரின் முன்புற 'டாஷ் போர்ட்'டில் தொங்கிய படத்தில் கையில் பிடித்த வேலுடன் "யாமிருக்கப் பயமேன்" என சிரித்த முகத்தோடு கந்தவேள் காட்சிதந்து கொண்டிருந்தார்.

கந்தனைப் பிரார்த்தித்துக் கொண்டு, காரை முடுக்கி 'ஸ்ரார்ட்' செய்தேன். மழை இப்போது பலமாகப் பெய்து கொண்டிருந்தது. மழைநீரைத் துடைக்கும் 'வைப்பரைப்' போட்டுக் கொண்டு காரை மிகமிக மெதுவாக ஓட்டிக்கொண்டு சென்றேன்.

தெருவெல்லாம் சனக்கூட்டத்தினால் நிரம்பி வழிந்தது. யாழ்ப்பாணம் முழுவதுமே வீடுகளை விட்டு வெளியேறி வீதியில் இறங்கி நின்றது.

குழந்தை குட்டிகளுடனும், கையில் பிடித்த பெட்டிகளுடனும், தலையில் சுமந்த பொதிகளுடனும் இலட்சக்கணக்கான மக்கள் - எங்கே போகிறோம் என்ற இலக்கேதும் இல்லாமல் - கொட்டும் மழையில் நனைந்த வண்ணம் நடந்து கொண்டிருந்த காட்சி - எங்கள் வாழ்நாளில் என்றுமே கண்டிராத ஓர் அவல ஊர்வலம்!

ஆண்டவனே! இது என்ன சோதனை!

இத்தனை அவலத்தை இந்த மண்ணின் மைந்தர்களுக்கு ஏன் கொடுத்தாய் இறைவா?

இந்த மண்ணின் சமாதானப் பறவையை அரசியல்வாதிகளும், ஆதிக்க வெறியர்களும், போர்ப் பிரியர்களும் குத்திக் குதறிக் கொன்றுவிட்டார்கள். மனிதம், மனிதாபிமானம், மனித வாழ்க்கை என்பவற்றின் அர்த்தமே இவர்களுக்குத் தெரியவில்லை. இதைத் தெரிந்து கொள்ளக்கூடிய மனோபக்குவமும் இவர்களுக்கு இல்லை. அமைதியும், சமாதானமும், பாதுகாப்பும் கொண்ட சமுதாய வாழ்க்கை இனிமேல் இந்த மண்ணிற்குத் திரும்பக் கிடைக்கும் என்கிற நம்பிக்கையை நாம் இழந்துவிட்டிருந்தோம்.

- தொடரும்.



# மனைவியின் இயக்கத்தில் இனி நடிக்க மாட்டேன்!

தமிழ் சினிமாவைத் தாண்டித் தற்போது ஹிந்தியிலும் பிரபல நடிகராகிவிட்டார்.

தனது தந்தை கஸ்தூரி ராஜா படத்தின் மூலம் அறிமுகமான தனுஷ், தன் மனைவி ஐஸ்வர்யா ரஜினிகாந்த் டைரக்‌ஷனில் வெளியான '3' படத்தில் நடித்தார். கமலுடைய மகள் சுருதியுடன் மிக நெருக்கமாக நடித்தார். அப்போது 'கிசு கிசு'கள் பேசப்பட்டன.

'உங்கள் மனைவி ஐஸ்வர்யா இயக்கும் படங்களில் இனி நடிப்பீர்களா?' என்று சமீபத்தில் தனுஷிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அவர் சொன்ன பதில்:

"நடிக்கமாட்டேன். அவர் தயாரிக்கும் படங்களில் நடிப்பேன்"

இது பற்றி பின்னர் விளக்கங்கள் கூட அடிபட்டன. ஐஸ்வர்யாராய் டைரக்ட் செய்து தனுஷ் - சுருதி நடித்தபோது ஏற்பட்ட சங்கடங்கள்தான் இந்த முடிவை எடுக்க வைத்துள்ளது.

# விஜய் புகழ்பாடும் கதாநாயகிகள்!

தமிழ் சினிமாவில் மாபெரும் ரசிகர் வட்டத்தைக் கொண்டவர் இளைய தளபதி விஜய். இவர் தற்போது 'கத்தி' படத்தில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக சமந்தா நடித்துக் கொண்டிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன் சமந்தா விஜய்யின் நடனத்தைப் பார்த்து அசந்துவிட்டதாக ஒரு பேட்டியில் கூறியிருந்தார். இதேபோல் சமீபத்தில் ஒரு கதாநாயகி விஜய்யைப் புகழ்ந்து பேசியுள்ளார்.



அவர் வேறு யாருமில்லை. 'வேலாயுதம்' படத்தில் இவருக்கு ஜோடியாக நடித்த ஹன்சிகாதான். சிம்புதேவன், விஜய்யை வைத்து இயக்கும் படத்தில் ஹீரோயினாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்தச் சந்தோஷத்தில் செல்லும் இடமெல்லாம் இளைய தளபதியின் புகழ் பாடி வருகிறாராம்!





# கொரில்லாவாக மாறி வரும் விக்ரம்!

நடிப்பிற்காக எதையும் செய்யத் துணிந்தவர் விக்ரம்! படத்திற்குப் படம், வித்தியாசமான நடிப்பை மட்டும் இல்லாமல் உடல் மொழியையும் கமலுக்குப் பின் மாற்றி நடிக்கும் ஒரே நடிகர் யார் என்றால் கண்டிப்பாக அது இவர்தான்.

தற்போது இவர் நடித்து ரிலீஸ்க்கு ரெடியாக இருக்கும் படம் ஐ. இப்படத்தில் ஒரு பாடல் காட்சிக்காக 10 கிலோ எடை ஏற்றினாராம் விக்ரம். இதில் பல மிருகங்களின் கெட்டப்பில் வந்து எமி ஜாக்சனுடன் ரொமான்ஸ் செய்வாராம்!

அதில் குறிப்பிட்டு கூறுவதென்றால், சிங்கத்தின் பற்கள், காண்டா மிருகம் அளவு எடை, கொரில்லா போல் உடற்கட்டு என செம்ம விருந்து கொடுக்கிறாராம் சீயான்!

# சரவணன் - மீனாட்சி நிஜத்திலும் இணைந்தனர்!



சரவணன் - மீனாட்சி என்ற தொடரில் விஜய் டி.வி.யில் நடித்த மிர்ச்சி செந்திலும், ஸ்ரீஜாவும் திருப்பதியில் வைத்து ரகசியமாகத் திருமணம் செய்துகொண்டார்கள்.

மதுரை என்ற தொலைக்காட்சித் தொடரில் முதலில் நடித்தனர். அதன் பிறகு சரவணன் - மீனாட்சியில் கணவன், மனைவியாக நடித்தனர்.

டி.வி.யில் பார்த்தவர்கள் நிஜத்திலும் கணவன், மனைவி என்று நினைத்தனர். இப்போது நிஜத்தில் கணவன், மனைவி ஆகிவிட்டனர்.

யாருக்கும் தெரிவிக்காமல் நடந்தது இத்திருமணம்.



# அப்பா - அம்மா பெயரை பச்சைக் குத்திய சவுந்தர்யா!

'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் - லதா தம்பதியினரின் இளைய மகள் சவுந்தர்யா, தனது அப்பா - அம்மா பெயரை தனது கையில் டாட்டுவாக (பச்சை) குத்தியுள்ளார். நம் பாட்டிமார் காலத்தில் பச்சை என அழைக்கப்பட்டதுதான் இன்று டாட்டு என்ற பெயரில் புதிய ஃபேஷனாக உலா வந்து கொண்டிருக்கிறது. பறவைகள், விலங்குகள் மற்றும் பூக்கள் என குத்தியது போய், சமீப காலமாக தங்களது மனதுக்குப் பிடித்தவர்களின் பெயரைக் குத்துவது ஃபேஷனாக உள்ளது.

அந்தவகையில், தற்போது தமிழ் சினிமாவில் கிராபிக்ஸ் வடிவமைப்பாளர், தயாரிப்பாளர், மற்றும் இயக்குனர் எனப் பன்முகத்திறமையாளராக வலம் வரும் ரஜினியின் இளைய மகளான சவுந்தர்யா 'லதா - ரஜினி' எனத் தனது கையில் குத்தியுள்ளார்.



# தமிழ் சினிமாவில் முத்தத்துக்கு தனி விலை!

முத்தம் என்பதே ஹொலிவுட் படத்தில் மட்டும் நாம் பார்த்து வந்த விஷயம். ஆனால் இன்று மிகவும் சாதாரணமாக தமிழ் படங்களிலும் பரவ ஆரம்பித்துவிட்டது.

ஆனால், இது கதைக்காக வைக்கப்படுகிறதா என்றால் கேள்விக்குறிதான். படத்தின் விளம்பரத்துக்காகவேதான் படத்தில் முத்தக்காட்சியைத் திணிக்கின்றனர். இதையே வாய்ப்பாக எடுத்துக்கொண்டு சில நடிகைகள் முத்தக் காட்சி என்றால் அதற்கு ஒரு தனிச்சம்பளம் தரவேண்டும் என்று பேரம் பேசுகிறார்கள்.

இதனால் சமீபத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட நடிகை என்றால் லட்சுமி மேனன்தான்! 'நான் சிகப்பு மனிதனி'ல் விஷாலுடன் உதட்டோடு உதடு வைத்து பல நிமிடங்கள் வரும் முத்தக் காட்சி, விமலுடன் 'மஞ்சப்பை'யிலும் இதேபோன்ற முத்தக்காட்சி படங்களுக்கு நல்ல வரவேற்பைக் கொடுத்தனவாம். கதை சொல்ல வருகிற இயக்குனர்கள் எல்லாம் முத்தக்காட்சியைத்தான் இப்போது சொல்கிறார்களாம்! "நான் கேட்கும் பணத்தை தந்தால், எப்படியான காட்சியிலும் நடிக்கத் தயார்"! என்று ஒரு நடிகை கூறினாராம்.

# உலக தரத்தில் பாரதிராஜா துவங்கும் திரைப்படக் கல்லூரி!



ரஜினி, கமல் என உச்ச நட்சத்திரங்களை இயக்கிய பாரதிராஜா தற்போது சினிமா கனவில் இருக்கும் இளைஞர்களுக்கு வழி காட்ட முனைந்து உள்ளார்.

உலகத் தரத்திற்கு இணையான திரைப்படக் கல்லூரி ஒன்றை சென்னையில் துவக்க உள்ளார். அதற்கான முதற்கட்டப் பணிகளை ஆரம்பித்துள்ளார்.

இயக்குனர்கள் பாலசந்தர், பாலுமகேந்திரா, பாரதிராஜா ஆகிய மூவரும் தமிழ் சினிமாவில் தூண்களாக இருந்து அரிய படைப்புக்களை சினிமாவிற்கு அளித்தவர்கள்.

'16 வயதினிலே' படம் மூலம் இயக்குனராகத் தன் திரைப் பயணத்தை ஆரம்பித்தவர் பாரதிராஜா. ஆறு தேசிய விருதுகள் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

# மியூசிக் பண்ணுவேன் என்கிறார் நடிகர் ஜெய்!

இசைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் நடிகர் ஜெய். இவரது பெரியப்பா 'தேனிசைத் தென்றல்' தேவா, சித்தப்பாக்கள் சபேஷ், முரளி - அண்ணன் ஸ்ரீகாந்த் தேவா எல்லாருமே இசை அமைப்பாளர்கள்தான். ஜெய் மட்டும் தீவிரமான நடிகராகி விட்டார். ஆனால், வருங்காலத்தில் தானும் இசை அமைப்பேன் என்று கூறுகிறார் ஜெய்.



"சின்ன வயசிலே மியூசிக் என்றால் எனக்கு உயிர், எப்பவும் கிதாரும், கையுமாகத்தான் இருப்பேன். ஆனால் நடிகனாகி விட்டேன். இப்போதும் சூட்டிங் இல்லாத நாட்களில் வீட்டில் இருந்து கொண்டு புதுசு புதுசாக டியூன் போட்டுக் கொண்டிருப்பேன். இதுவரைக்கும் 500க்கும் மேற்பட்ட டியூன்களைப் போட்டு வைச்சிருக்கேன். அதுல செலக்ட் பண்ணி ஒரு மியூசிக் அல்பம் விரைவில் போடப்போறன். படத்துக்கும் மியூசிக் பண்ணுவேன்." என்கிறார் நடிகர் ஜெய்.

# விஜய் டிவி திரை விருது பக்க சார்பானதா? - விழாவில் சலசலப்பு



தேசிய விருது பெற்ற பாடலுக்கும், தேசிய விருது பெற்ற குழந்தைக்கும் விஜய் டிவி விருது கொடுக்காதா என்று, 'தங்கமீன்கள்' இயக்குனர் ராம் விஜய் டிவி விருது வழங்கும் மேடையில் எழுப்பிய கேள்வி பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் விஜய் விருதுகள் ஒரு தலைப்பட்சமாக வழங்கப்படுவதாகவும், ஏராளமானோர் சமூக வலைத் தளங்களில் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

விஜய் டிவி சார்பில் ஆண்டு தோறும் விஜய் அவார்ட்ஸ் திரைக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2013ஆம் ஆண்டுக்கான விருது சமீபத்தில் சென்னை நேரு ஸ்டேடியத்தில் வழங்கப்பட்டது.

விழாவில் 'தங்கமீன்கள்' படத்திற்குச் சிறந்த படம் என்ற விருது வழங்கப்பட்டது. அப்போது நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய கோபிநாத், இயக்குனர் ராமிடம் தங்கமீன்கள் படம் குறித்துப் பாராட்டி விட்டு சில கேள்விகளைக் கேட்டார்.

விருது வாங்கிக் கொண்டு ராம் சில கருத்துக்களை முன் வைத்தார்.

'தங்கமீன்கள்' படத்தில் மகளாக நடித்த குழந்தை சாதனா, 'கடந்த ஒரு வாரமாக நான் சென்னை வரட்டுமா? எனக்கு விருது தாராங்களா?' என அடிக்கடி போன் செய்து கேட்டதாகவும், உனக்கு எந்த விருதும் தரவில்லை, 'தங்கமீன்கள்' படத்திற்கு மட்டுமே விருது தருகிறார்கள் என்று ராம் கூறியுள்ளார். அதற்கு சாதனா, 'எனக்குத் தேசிய விருது கொடுத்திருக்காங்க... விஜய் அவார்ட்ஸ் தரமாட்டாங்களா... தெய்வத்திருமகள் படத்தில் நடித்த சாராவுக்கு விஜய் அவார்ட்ஸ் கொடுத்தாங்களே! அந்த மாதிரி எனக்கு தரமாட்டாங்களா' எனத்தன்னிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டதாக ராம் கூறினார்.

மேலும், 'தங்கமீன்கள்' படத்திற்கு உயிர் கொடுத்ததே 'ஆனந்த யாழை' என்ற பாடல்தான். ஆனால் அந்தப்பாடலை நொமினி லிஸ்டில் கூடச் சேர்க்கவில்லை. அவ்வளவு தரங்கெட்ட பாடலா அது? எனக் கேள்வி எழுப்பினார். அப்போது அரங்கமே ஒரு நிமிடம் நிசப்தமானது. மேலும் 'அந்தப் பாடலை ஒரு முறை ஒலிபரப்புங்கள், நான் கேட்க வேண்டும்' எனக் கேட்டார் ராம்.




உடனே கோபிநாத், "சார் அந்தப் பாடல் இல்லை என்று நினைக்கிறேன்' என்று மழுப்பலான பதிலைத் தெரிவித்தார்.

"சரி! அந்தப் பாடலைப் பாடத் தெரிந்தவர்கள் யாராவது இந்த விழாவில் உள்ளீர்களா?" எனராம்கோரிக்கைவிடுத்தார். ராமை எப்படியாவது மேடையிலிருந்து இறக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்தில் கோபிநாத், அந்தப் பாடல் வேறு ஒரு லிஸ்டில் நொமினியாக உள்ளதாக கூறினார்.

'எனக்குத் தெரியும் அந்தப் பாடல் எந்த லிஸ்டிலும் இல்லை' ராம் சொன்னார்.

கூட்டத்தில் இருந்த ஒருவர் அந்தப் பாடலைப் பாடினார். அவர் பாடி முடித்ததும், 'தங்கமீன்கள்' படத்திற்கு உயிர் தந்த என் தோழன் யுவன் சங்கருக்கு இந்த விருதைச் சமர்ப்பிக்கிறேன் எனக் கூறி யுவனை மேடைக்கு அழைத்து அவரைக் கௌரவித்தார் ராம்.

இந்நிலையில் இயக்குனர் ராமைப் போன்று பல ரசிகர்கள் விஜய் விருது ஒரு சார்பாக வழங்கப்படுவதாக குற்றஞ் சாட்டி பேஸ்புக், டுவிட்டரில் விமர்சித்து வருகின்றனர்.



## வில்லன் கிஷோர் கதாநாயகன்!

வில்லனாக நடிப்பில் ஹீரோக்களை ஆட்டிப் படைக்கும் கிஷோர் தற்போது கதாநாயகனாக நடிக்கிறார்.

தமிழில் ஆடுகளம், பொல்லாதவன், ஜெயம் கொண்டான், ஹரிதாஸ் போன்ற படங்களில் நடித்தவர் கிஷோர்.

தற்போது 'காதலி காணவில்லை' என்ற படத்தில் நாயகனாகத் தோன்றுகிறார் கிஷோர். இப்படத்தினை இரட்டையர்களான ரவி - ராஜா எழுதி இயக்குகின்றனர். வில்லன் வேடத்தில் 'சோப்ராஜு' நடிக்கிறார்.

# விஜய் டி.வி. தொகுப்பாளினி டிடி திருமணம் முடித்தார்!



விஜய் டி.வி. தொகுப்பாளினி டிடி என்று அழைக்கப்படும் திவ்யதர்ஷினி தன் நீண்டகால காதலரான ஸ்ரீகாந்தை திருமணம் செய்து கொண்டார். சின்னத்திரைகளில் நடித்து, ஆடியும் பாடிக்கொண்டே நுழைந்த இவர் இன்று பிரபல விஜய் டி.வி. தொகுப்பாளினியாக வலம் வருகிறார். வெளிநாடுகளுக்கு சென்று நிகழ்ச்சிகளை தொகுத்து அளித்தும் வருகிறார். பிரபலமான திரை நட்சத்திரங்களைப் பேட்டி காண்பதிலும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளிப்பதிலும் நம்பர் வண்ணாக இருக்கிறார். கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் கமல்ஹாசனிடம் கட்டித் தழுவி முத்தம் பெற்று பரபரப்பை ஏற்படுத்தினார். விஜய் டி.வி.யின் செல்லப்பிள்ளையாகவும், டிவி நேயர்களின் நெஞ்சம் கவர்ந்தவராகவும் உலா வருகிறார். இவரது கணவர் ஸ்ரீகாந்த் சினிமாத் துறையில் பணியாற்றுகிறார்.

## லண்டனில் விஜய் ஈழ ரசிகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

இளைய தளபதி விஜய் நடிக்கும் 'கத்தி' இசை வெளியீட்டு விழா லண்டனில் வரும் செப்ரெம்பரில் நடக்கவிருக்கிறது. இந்தப் படத்தின், படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடக்கிறது. 'துப்பாக்கி' படத்துக்குப் பின்னர் ஏ.ஆர்.முருகதாஸ் விஜய்யுடன் சேர்ந்து பணியாற்றும் படம் 'கத்தி'. 'துப்பாக்கி'யைப் போன்று பெரும் வெற்றியைக் 'கத்தி' பெறும் என்று நம்புகிறார்கள்.

லண்டனில் ஈழத்தவர்கள் பெருமளவில் வாழ்கிறார்கள். விஜய் நடித்த ஜில்லா, துப்பாக்கி, வேலாயுதம், தலைவா, நண்பன் ஆகிய படங்கள் இங்கிலாந்தில் நல்ல வசூலைப் பெற்றன. இங்கிலாந்தில் விஜய்க்கு ரசிகர்கள் அதிகம்.

அத்தோடு அவரது மனைவி சங்கீதா தனது வீட்டுக்கு வந்து சில நாட்கள் தங்கவும் ஒரு சந்தர்ப்பம் அல்லவா. சங்கீதா ஈழத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தையார் சொர்ணலிங்கம் யாழ்ப்பாணத்தில் சித்தன்கேணியைச் சேர்ந்தவர். லண்டனிலுள்ள ஈழ விஜய் ரசிகர்கள் தமது நாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவரின் இசை வெளியீட்டு விழா லண்டனில், நடைபெறவிருப்பது. மகிழ்ச்சி அளிக்கும் 'செய்தி'யாக இருக்குமல்லவா!



## 'ஆன்ட்டி' என்று கூப்பிட்டால் கோபப்படுவாரா அனுஷ்கா?

நடுத்தர வயது நடிகைகளை 'அக்கா' என்று கூப்பிட்டாலேயே வருத்தப்படுவார்கள். ஆனால், 'ஆன்ட்டி' என்று அனுஷ்காவை கூப்பிட்டு அவரைக் கோபமடைய வைத்துள்ளனர் பள்ளி மாணவர்கள் சிலர்.

சமீபத்தில் ஹைதராபாத்தில் உள்ள ராமோஜி பிலிம் சிட்டியில் அனுஷ்கா நாயகியாக நடித்து வரும் 'ருத்ரம்மாதேவி' படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றிருக்கிறது. அப்போது அங்கு சில பள்ளிச்சிறுவர், சிறுமியர் சுற்றிப்பார்க்க வந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் அனுஷ்காவை 'ஆன்ட்டி' என்று அழைத்தார்கள். அதனால் அனுஷ்கா கோபப்பட்டு வருத்தமடைந்து விட்டார். ஆம், அனுஷ்கா முகத்தில் உள்ள 'மெச்சூரிட்டி' அவருக்கு கொஞ்சம் வயதான ஹீரோயின் தோற்றத்தைத் தருகிறது என்பதில் பொய் எதுவுமில்லை. இப்போதுள்ள சில இளம் ஹீரோக்களுடன் அவர் ஜோடி சேர்ந்து நடிக்க முடியாது என்பதே உண்மை. 'இதை ஒத்துக்கொள்ளாமல், 'ஆன்ட்டி' என்று கூப்பிட்டதற்கெல்லாம் கோபித்துக்கொள்வது சரியா அனுஷ்கா?'





# காலம் பொன்னானது!

## ஹோமியோபதி டாக்டர் ஆர்.தியாகராஜன் பேசுகிறார்

**பத்து வருடங்களுக்கு மேலாக லண்டனுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த ஹோமியோபதி வைத்திய நிபுணர் டாக்டர் ஆர்.தியாகராஜன் நேரத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று கூறுகிறார். நம்மில் எத்தனை பேர் இந்தப் பொன்னான நேரத்தைத் தொலைத்துவிட்டு வருத்தங்களோடு போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பாருங்கள்!**

காலம் பொன்னானது. மனித வாழ்க்கையில் அது மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

-இப்படி ஆரம்பித்தார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் டாக்டர் ஆர்.தியாகராஜன்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக லண்டனுக்கு வந்து போகிறார். நூற்றுக்கணக்கான நோயாளிகள் அவரிடம் சிகிச்சை பெறுகிறார். நமது நாட்டில் இயங்கும் தமிழ்த்தொலைக்காட்சிகளில் கடந்த பல ஆண்டுகளாக அவரது நேர்காணலை விரும்பி ஒளிபரப்புகிறார்கள். அவருடைய கருத்துக்கள் நோயாளிகளுக்கு மட்டுமல்ல, சாதாரணமான மக்களுக்கே பயனுள்ளதாக அமைகிறது. இதனால் ஆயிரக்கணக்கானோர் இவரது ரிவி நிகழ்ச்சிகளை விரும்பிப்பார்க்கிறார்கள். தனக்கும், தான் சார்ந்துள்ள ஹோமியோபதி வைத்திய முறைக்கும் 'விளம்பரம்' தேட வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தைக் கடந்து, வாழ்க்கை நலமானதாகப் பயணிக்க வேண்டும் என்ற எண்ணங்களே இவரது கருத்துக்களில் நிறைந்திருக்கும்.

சமீபத்தில் அவரைச் சந்தித்தபோது, காலத்தைப்பற்றி கருத்துக்களை அவர் சொல்ல ஆரம்பித்தார். 'டாக்டர்! இந்தக் காலத்துக்கும், உடல் நலத்துக்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்டேன்.

"நிறைய நிறைய இருக்கிறது. ஆரோக்கியமான மனித வாழ்க்கையில் இந்த TIME பெரும் பங்கு வகிக்கிறது" என்று கூறியவர், தொடர்ந்தார்:


நேரத்தைப் பற்றி நான் எதுவுமே புதிதாகக் கண்டுபிடித்துவிடவில்லை. நேரம் என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நல்ல நேரம், கெட்ட நேரம் என்று நினைக்கிற இந்தக் காலம் போனால் வராது. விலை மதிக்க முடியாத இந்த நேரத்துக்கும், ஆராக்கியத்துக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு என்பதையே சொல்ல வருகிறேன்.



நேரத்தை எப்படி உருவாக்குகிறோம்? எப்படி மிச்சம் பிடிக்கிறோம்? அந்த மிச்சம் பிடிக்கிற நேரத்தை எப்படிப் பயன்படுத்துகிறோம்? மிச்சப்படுத்திய நேரத்தைப் பயனுள்ளதாக்குகிறோமா? அல்லது வீணாக்குகிறோமா?



ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையிலிருந்து கப்பலில் பிரயாணம் செய்து, மூன்று மாதங்களுக்குப் பின்னர் இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார்கள் நம்மவர்கள். இப்போது எல்லாம் கொழும்பிலிருந்து லண்டன் வர 12 மணி நேர விமானப் பயணம். ஆகக் கூடினால் 'டிரான்ஸிற்' உட்பட பதினாறு மணி நேரம் ஆகிறது. ஏஜென்சிக்குப் பணம் கட்டி லண்டனுக்கு அகதியாக






வந்த ஈழத் தமிழர்கள் மூன்று வருடங்களைக் கூட கழித்திருக்கிறார்கள். இப்படியான நேரம் எவ்வளவோ இப்போது மிச்சப்படுத்தப்படுகிறது.

இப்படி பல வகைகளில் நேரத்தை மனிதன் மிச்சப்படுத்தி அதனைச் சேமிக்கிற வசதிகள் இப்போது கிடைக்கிறது. தபால்களை அனுப்பி அவற்றுக்குப் பதில் பெறுவதற்கு எத்தனை நாட்கள்! இப்போது ஈ.மெயில், செல்போன், தொலைபேசி, பேஸ்புக் என்று அடுத்த நிமிட நேரத்தில், அனைத்தையும் அறியக்கூடிய விதத்தில் காலத்தை மிச்சப்படுத்துகிற அரிய சாதனங்கள், மிஷின்கள், கருவிகள், தொலைக்காட்சி என்று பல பல! நேரத்தைச் சேமிக்கிறான்; ஆனால் இப்போது மனிதன் நிம்மதியாக வாழ்கிறானா? மிச்சப்படுத்துகிற நேரத்தைச் சரியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்துகிறானா? இல்லை? அதுதான் பிரச்சனை!

இந்த நேரத்துக்கும், ஆரோக்கியத்திற்கும் உள்ள தொடர்பை சுலபமாகப் புரிய வைக்க விரும்புகிறேன்.

உடம்புக்குத் தேவை: நேரத்துக்குத் தொலைக்காட்சி, செல்போன், கம்ப்யூட்டர் போன்றவைதான் பலரையும் கெடுக்கின்றன. ஒரு மணி நேரம் தொலைக்காட்சிக்கு ஒதுக்கினால் பரவாயில்லை. அடுத்த நாள் வேலை என்பதைக் கூட மறந்து, அகால நேரத்திலும் டி.வி. பார்த்துக் கொண்டிருப்பது. அதன் பின்னர் சாப்பிடுவது. இரவு 2 மணிநேரம் ஆவது. ஒழுங்காக நித்திரை கொள்ளாமல் வேலைக்குப் போவது. வேலையில் தூங்கி வழிவது. இவற்றால் வருவதுதான் டயாபட்டிக்ஸ், உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், மூட்டு வலி, செக்ஸ் பிரச்சனைகள் போன்றவைகள்.

கம்ப்யூட்டருக்கு முன்னால் உட்கார்ந்தால் மணித்தியாலக் கணக்கில் முடங்கிவிடுகிறார்கள்.

எனக்கு தெரிந்தவரை பிள்ளைகளுக்கு வருகிற நோயைத் தடுப்பதற்கு பெற்றோர்கள் முயற்சிக்க வேண்டும். அடுத்த நாள் பள்ளிக்கூடத்துக்குப் போகிற பிள்ளைகளை நேரத்துக்குத் தூங்க வைக்க வேண்டும். இரவு 7 மணிக்கு அவர்கள் சாப்பாட்டை முடித்து விட்டு, 8 மணிக்காவது நித்திரைக்குப் போகக்கூடியதாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். அல்லது காலையில் தாமாக எழும்பமாட்டார்கள், சிணுங்கிச் சிணுங்கி எழும்பி அரைகுறையாக வெளிக்கிட்டு, அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு, பாடசாலைக்குப் போகிற பிள்ளைகள் எப்படி ஒழுங்காகப் படிப்பார்கள்? மண்டையில் ஏறாது! அத்தோடு ஆராக்கியமான உடல் நலத்துக்கு நேர ஒழுங்கமைப்புத் தேவை.

அந்தக் காலத்தில் ஒரு வீட்டில் ஒருவர் மட்டும் உழைச்சு முழுக்குடும்பத்தையும் பார்த்தார்கள். இப்போது என்ன நடக்கிறது? கணவன் - மனைவி இரண்டு பேருமே கை நிறைய உழைச்சும் அமைதி இல்லை! வீட்டில் பிள்ளைகளைப் பார்க்க நேரமில்லை. ஏதோ அது இது என்று ஏகப்பட்ட செலவு. ஆரோக்கியமான வாழ்வும் இல்லை. குழப்பங்கள்தான் குடும்பத்தில். "நானும்தான் வேலைக்குப் போய் வந்தேன். களைச்சுப் போனேன்" என்று மனைவியும் சொல்கிறார். TURN எடுத்து சமையல் தொடக்கம் எல்லாவற்றையும் செய்கிறார்கள். சமைக்க நேரமில்லை. TAKE AWAY. ஆரோக்கியமற்ற உணவு உடம்பைக் கெடுக்கிறது. கடைசியில் வருத்தம்தான் மிஞ்சுகிறது. நேரத்தைத் திட்டமிட்டால், ஆரோக்கியத்தைப் பெறலாம்.

அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலைகளைச் செய்யாமல், கடைசி நேரத்தில் அவற்றை வைப்பது பலருக்கு ஒரு பழக்கமாகிவிட்டது. மூன்று மாதத்துக்கு முன்னரே இலங்கைக்கோ, இந்தியாவுக்கோ, கனடாவுக்கோ போகப்போகிறேன் என்பதை தெரிந்தும், முதல் நாள்வரை சாமான்கள் அடுக்குவது, பொருட்களை வாங்குவது என்பது போன்ற விஷயங்களை வைத்துக் கொண்டிருப்பார்கள். கடைசி நேரத்தில், நாளை காலைக்குள் ரெடியாகிவிடவேண்டும் என்று குடும்பத்துடன் சேர்ந்து இரவு இரவாகக் கண்விழித்து ஏற்பாடுகளைச் செய்வார்கள். இதனால் வருவது டென்ஷன்... ஏற்கனவே உள்ள டயாபட்டிக்ஸ், உயர் இரத்த அழுத்தம் இரட்டிப்பாகிவிடுகிறது. தேவைதானா?

டாக்டர் தியாகராஜன் நேரத்தின் மகிமையை சிறு சிறு சாதாரணமான உதாரணங்களால் விளக்கிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

"சரி டாக்டர்! ஹோமியோபதி மருத்துவத்தினால் எப்படி இவற்றைச் சரி செய்வது?" என்று கேட்டேன்.

"வைத்தியம் இருக்கிறது. மருந்துகளும் இருக்கிறது. ஆனாலும் வருத்தம் வர முன்னதாகவே நாம் ஒழுங்கான முறையில் வாழ்ந்தால், இவற்றையெல்லாம் தவிர்க்கலாமல்லவா!" என்று பதில் கூறிவிட்டு சொன்னார்:

ஹோமியோபதி மருத்துவத்தில் மருந்துகள் பாதி. மற்றப் பாதி, நம்மிடம் வருபவர்கள், ஹோமியோபதி மருந்துகளுடன், எங்கள் ஆலோசனைகளை கேட்டு அதன்படி நடக்க முயற்சிக்க வேண்டும்.

பக்க விளைவுகளற்ற மருத்துவம் ஹோமியோபதி.

டாக்டர் தியாகராஜனுடன் எந்தவிதமான மருத்துவ ஆலோசனைகளையும் இலவசமாகப் பெறுவதற்கு 02081441553 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுங்கள். அவருடன் மனம் திறந்து உங்கள் வருத்தங்களைப் பற்றிப் பேசலாம்.

- ஈ கே ஆர்


டயாபட்டிஸ்
ஹோமியோபதி மருத்துவம்
+
உங்கள் ஒத்துழைப்பு
100% தீர்வு
டயாபட்டிஸ் நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.
உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை
சிறப்பு சிகிச்சைகள்
உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
கொலஸ்ட்ரால் (Cholesterol)
சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
மூட்டு வலி (Arthritis)
தோல் வியாதிகள் (Skin Diseases)
ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
குழந்தையின்மை (Insertility)
இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
போன்: 0208 144 1553
வெப்சைட்: www.homoeocare.com
இமெயில்: homoeocare@rediffmail.com


THARANI
JEWELLERY
அதி குறைந்த வட்டி
வீதத்தில் அடைவு பிடிக்கும்
தலை சிறந்த நிறுவனம்
Our Rates of Interest
2.95%
Loan Term: Up to 6 Months
Documents Required: • Photo ID - Passport or • UK Driving License • Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months.
Terms and Conditions The maximum loan term is for 6 months. If the loan cannot be repaid during this period, a renewal can be made, after interest on the loan is paid in full. If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time, we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstanding. The pledge remains your property until it is sold, but the loan remains outstanding and interest will continue to be charged till the loan is redeemed, or pledge is sold, if you have borrowed over £100, we will write to give you 14 days notice of our intent to sell your pledged Gold.
Interest on Gold loans is charged on daily basis. For example the interest on a £1000 loan after 15 days will be £16.25. For closing the loan after 15 days, you have to pay £1016.25. Non-redemption of these Gold will not affect your credit rating. Please keep the pledge receipt safely. You need to return the original pledge receipt to us for redeeming your Gold.
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111
020 8902 6777
ashni23@aol.com



Aarti tv
உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!
OVER
500 Tamil Movies
Available Instanly
25க்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்
Local Time Broadcast: Indian Time / UK Time / European Time
பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும பார்வையிட வசதியானது.
சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.
Roku
Windows
App Store
Google play
Multi Room
Viewing
எமது வாடிக்கையாளர்கள் தங்களது வீடுகளில் இருக்கும் அறைகளில் ஒரே நேரத்தில் பல அலைவரிசைகளை பார்வையிடுவதற்கான வசதியை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன்மூலம் ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்.
SPECIAL
OFFER
12 Months
Subscription
+
Set Top Box
£ 99
24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்
100%
LEGAL
United Kingdom
0203 318 2004 / 0783 276 9522
Web
WWW.AARTITV.TV
15 Days
Money Back
GUARANTEE

(தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா)

# ராஜீவ் கொலை: தூக்குக்கைதிகள் மூவரின் வாழ்க்கை திரைப்படமாகிறது!

ஒரு காலத்தில் புராணம். இதிகாசம் என்று பிரமாண்டமாக தயாரித்தும், தழுவியும், கரு எடுத்தும், தமிழில் மொழிமாற்றம் செய்தும் கோடம்பாக்கத்தில் கொடி கட்டிப்பறந்த தமிழ் சினிமாக்கள் பின்னர் வியாபார ரீதியில் முழுக்க நனைந்து மசாலாவாகின. தூண்டில் போட்டுத் தேடினாலும் கதை மனதில் நிற்காத நிலைமை. கதைக்களத்துக்கான ஹீரோ தேடப்படுவதை விட்டு ஹீரோவை மையப்படுத்தி கதைகள் பின்னர் உருவாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து புதுமுகங்கள் பட்டை தீட்டி துணிச்சலுடன் இறக்கப்பட்டனர். இதில் இயக்குநர், தயாரிப்பாளர் வெற்றிகண்டதும் அதே ஹீரோ பல கண்களுக்குள் பதிந்து தொடர் வெற்றி நாயகனாகிறார். சம்பளமும், "பரவாயில்லை" எனும் நிலையிலிருந்து ஒரு கோடியாகி, கதாநாயகன் வலியுறுத்தும் ஏழு கோடிக்கும் உயர்ந்துவிட்டது கோடம்பாக்கத்துக்கு பழையசெய்தி. இந்த உச்சிக்கு உயர்ந்தவர், 'விஜய்.டி.வி' 'அது இது எது' நிகழ்ச்சி புகழ் சிவகார்த்திகேயன்தான். இந்த வரிசையில் உண்மைச் சம்பவத்தைக் கருவாகக் கொண்டு, கதை அமைத்து படமாக்கி உடனடியாக வெளியிட முடியாமல் தவித்தவர்களும் உண்டு; காலம் தாழ்த்தி கைகள் சுட்ட நிலையில் வெளியிட்டவர்களும் இருக்கிறார்கள். இந்த நிலையில் கோடம்பாக்கத்தில் பரபரப்பாக ஒரு செய்தி உலா வந்ததில் காதைக் கொடுத்தால்; இளைஞர் அ.செந்தில்குமார் இயக்கத்தில் ஒரு உண்மைச்சம்பவம் துணிச்சலுடன் படமாகி வருவது பளிச்சிட்டது.

**ராஜூவ்கொலை: அரசியல் இருக்காது ஆனால் அரசியல் பேசும்!** இத்திரைப்படம் ராஜீவ் காந்தி படுகொலையை நினைவுபடுத்தும். ஆனால் இப்படுகொலை தொடர்பாக ஒரு வசனமும் இருக்காது. சுருக்கமாகச் சொல்வதென்றால், நீங்கள் எதிர்பார்க்கும் அரசியல் இருக்காது. ஆனால் அரசியல் பேசும்! அண்மையில் கோடம்பாக்கத்தில் ஒரு சினிமா போஸ்டர் கண்ணில் குத்தியது. அந்த போஸ்டரில் காணப்படும் நீதிதேவதையின் கண்கள் கறுப்புத் துணியால் கட்டப்பட்டிருக்கிறது. இடது கையில் நீதித்தராசு. உயரப்பிடித்திருக்கும் தராசின் மூன்று கயிற்றிலும், மூன்று பேர் தூக்கில் தொங்குகின்றனர். வலதுகையில் ஒரு வாள். திரைப்படத்தின் பெயர் 'வாய்மை' என்று போஸ்டர் கூறுகிறது. படத்தின் கதை வட்டாரத்துக்குள் நுழைந்தால்.... ஓர் இளைஞனுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த அநீதியை எதிர்த்து வந்த இளைஞரின் தாய், தூக்குக்கு தூக்கு வராதா என்று போராடுவதுதான் கதை. தூக்குத் தண்டனை எனும் அநீதிக்கு எதிராக, தண்டனை பெற்ற இளைஞனின் தாய் போராட புறப்படுகின்றாள் என்றால்... "என்ன இல்லை



என்கிறீர்கள் ஆனால் இருக்கும் என்கிறீர்கள்... குழப்புகிறீர்களே..." என்று நீங்கள் நினைப்பது கரெக்ட். இப்படத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கு நிழல் மட்டும்தான் தெரியும். முருகன் இப்படத்தில் வருவார். சாந்தன் வருவார். பேரறிவாளன் வருவார். ஆனால் இம் மூவரையும் படத்தில் பார்க்கமாட்டீர்கள். இவர்கள் வேடத்தில் வேறு மூன்று பிரபலங்கள் தோன்றுவார்கள்.







முருகன் வேடத்தில் இயக்குநர் பாரதிராஜாவின் மகன் மனோஜும், சாந்தன் வேடத்தில் நடிகர் பாண்டியராஜன் மகன் ப்ரித்வியும், பேரறிவாளன் வேடத்தில் இயக்குநர் பாக்கியராஜ் மகன் சாந்தனுவும் நடிக்க, பேரறிவாளன் தாயயார் அற்புதம்மாள் வேடத்தில் பாக்கியராஜ் துணைவியார் பூர்ணிமா வருகின்றார். ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நகைச்சுவை நடிகர் கவுண்டமணி, டாக்டர் பென்னிக்குவிக்காக, மரணதண்டனைக்கு எதிராக நடிப்பில் பிளந்து தள்ளுகிறாராம். பென்னிக்குவிக் பெரியாறு அணையைக் கட்டியவர். அவர் எப்படி டாக்டர் ஆனார்... கவுண்டமணியை எப்படிக் கவிழ்த்தார் என்றெல்லாம் குழம்பாதீங்க. படம் பார்க்கும்போது இந்த சமாச்சாரம் வெளிச்சத்துக்கு வந்துவிடும்.



'வாய்மை' திரைப்படம் சம்பந்தமாக பேரறிவாளனிடம் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டதும் பெரிதும் மகிழ்ச்சியடைந்து இயக்குநருக்கு நன்றியுடன் வாழ்த்து கூறி ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். இந்த வாழ்த்துக் கடிதம் அச்சுப்பிசகாமல் அப்படியே 'டிரெய்லரில்' காட்டப்படுகிறது.

## மரண தண்டனைக்கு எதிராக குரல்கொடுக்கும் 'வாய்மை'!

மரண தண்டனைக்கு எதிரான போராட்டங்களுக்கு கைகொடுத்து ஊக்குவிக்கும் 'வாய்மை' திரைப்படத்தின் கதைக்காக, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணய்யரின் பல நூல்களின் பக்கங்களை 'வாய்மை' மேய்ந்திருப்பதுடன், இயக்குநரின் பார்வை ஓய்வுபெற்ற நீதிபதி சந்துருவின் மீதும் விழுந்து, அவர் ஆலோசனைகளும் பெறப்பட்டது.

மூவர் தூக்குத் தண்டனை பெற்ற கதைப்படமில்லாமல் அதாவது, அந்தக் கதையின் பின்னணி இல்லாமல், மரண தண்டனை ஒழிப்புக்கு ஆதரவாக குரல் எழுப்பும் 'வாய்மை'; பேரறிவாளனின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து காணப்படுகிறது.



சீரியஸான கதையாச்சே... எப்படி கவுண்டமணி நுழைவு? ஒரு சந்தர்ப்பத்தில், இந்த வேடத்துக்கு கவுண்டமணி பொருத்தமாக இருப்பார் என்று படக்குழு முடிவுசெய்து அவரை அணுகி படக்கதை, அதன் அவசரத் தேவை பற்றி சொன்னபோது அவரும் சீரியஸாக "அடடா இப்படி ஒரு படமா?" என்று பெருமைப்பட்டு உடனே 'ஓகே' சொல்லிவிட்டாராம்.

கதை தயாரானதும் இயக்குநர் அ.செந்தில்குமார் கதை 'பைலு'டன் இயக்குநர் பாக்கியராஜை சந்தித்து விளக்கியதும் பூரண திருப்தியுடன் ஆசியும் வாழ்த்தும் கூறியதுடன், மற்றுமொரு சந்திப்பில் இயக்குநரின் கோரிக்கையை ஏற்று, தனது மகன் சாந்தனுவும் மனைவி பூர்ணிமாவும் 'வாய்மை'யில் நடிக்க விருப்பமும் தெரிவித்திருந்தாராம் பாக்கியராஜ்.

## "மரண தண்டனைக்கு எதிரான போராட்டத்தில் கிடைத்த வெற்றி"

தயாராகிக் கொண்டிருக்கும் 'வாய்மை' திரைப்படம் குறித்து பேரறிவாளன் தாயார் அற்புதம்மாளிடம் 'புதினம்' தொடர்பு கொண்டபோது; "எனது மரணதண்டனை ஒழிப்பு போராட்டத்துக்கு 'வாய்மை' திரைப்படம் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும்" என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

"மரண தண்டனைக்கு எதிராக குரல்கொடுக்கும் வகையில் 'வாய்மை' பெயரில் ஒரு படம் எடுப்பதாக செந்தில் என்னிடம் விளக்கமாகக் கூறியதுடன், எனது பாத்திரத்தில் பூர்ணிமா பாக்கியராஜ் நடிப்பதாகவும் சொன்னார். பெருமிதப்பட்டேன். அநீதிக்கு எதிராகப் போராடும் ஒரு தாய் என்று எனது கதை எடுக்கப்படுவதில் மகிழ்ச்சியாக இருக்கிறது. மரண தண்டனை ஒழிப்பு போராட்டத்தை நீண்ட காலமாக நடத்திவருவதுடன் இது சம்பந்தமாக பல நூல்களையும், குறுந்தகடுகளையும் வெளியிட்டுள்ளேன். எனது நியாயமான போராட்டத்தை 'வாய்மை' திரைப்படம் கடல் கடந்தும் பல நாடுகளுக்கு கொண்டு செல்லும். நல்ல முயற்சி" என்று 'புதினத்'திடம் நம்பிக்கை கூறினார்.

**ஒரு கூடுதல் தகவல்:** ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மூவர் தூக்குத் தண்டனை பெற்று, பின்னர் இத்தண்டனை ஆயுளாக குறைக்கப்பட்டு தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பெருமுயற்சியால், விடுதலை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் 'வாய்மை'க்கு அம்மா தரப்பிலிருந்து எதிர்ப்புக்குப் பதில் ஆதரவே கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில்; இப்படத்தின் 'ஆடியோ ரிலீஸ்' அற்புதம்மாள் முன்னிலையில் விரைவில் நடைபெறவிருக்கிறது. ஓகே!

# குடியேற்றம்



செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியமர்த்தும் முயற்சியின் முதல் கட்டமாக அமெரிக்க விஞ்ஞானிகள் அனுப்பிய அந்த நவீன விமானம் இருபது மனிதர்களுடன் செவ்வாய் கிரகத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானிகளின் இந்த சாதனையை - மனித இனத்தின் அறிவு வளர்ச்சியை - புகழாத பத்திரிகை இல்லை விபரிக்காத தொலை தொடர்பு சாதனங்கள் இல்லை.

ஊரின் ஒதுக்குப்புறமாக உள்ள மயானத்தில் அடர்ந்து பரந்திருந்த மரமொன்றில் அமர்ந்திருந்த ஒரு குட்டிப் பிசாசு - தானும் மனிதர்களின் அறிவு வளர்ச்சியையிட்டு பெருமைப்படுவதாக தன் நண்பர்களுக்கு கூறியது. கூட்டத்தில் இருந்து இதைக் கேட்ட கிழ பிசாசு ஒன்று நளினமாக கூறியது:

வயதில் சிறிய உனக்கு மனிதர்களைப் பற்றி - அவர்களின் சரித்திரம் பற்றி - எதுவும் விபரமாக தெரியாது.

இந்த மனிதன் என்னும் ஜன்மம் பூமியில் தோன்று முன்பு - ஐந்தறிவு படைத்த விலங்குகள் மட்டுமே பூமியில் வாழ்ந்த காலத்தில் - காற்று- நிலம் - நீர் - ஆகாயம் - எல்லாமே சுத்தமாக - சுகாதாரமாக இருந்தன. எல்லா உயிரினங்களையும் தாங்கிக் கொண்டு - அவற்றைப் பராமரித்துக்கொண்டு - அழகாக இயங்கியது இந்த பூமி.

மனிதன் என்ற இந்த நாய் தோன்றிய அன்று ஆரம்பமாகியது பூமியில் துன்பங்கள்.

அழகாக இருந்த நிலத்தை - இது அமெரிக்கா - இது ஆப்பிரிக்கா- இது ஆசியா - என்று எல்லைகள் போட்டுப் பிரித்து - காட்டை வெட்டி - நதிகளை அணை போட்டு - திசை திருப்பி - விலங்குகளை - தாவரங்களை - பறவைகளை - கொன்று குவித்து - பருவ காலங்களை மாற வைத்து - சூழலை - சுற்றாடலை - மாற்றியவர்கள் இந்த மனிதர்கள்.

வறட்சியால் - வெள்ளத்தால் - புயலால் - இங்கு நேர்ந்த துன்பங்கள் - துயரங்கள் எல்லாவற்றிற்கும் இந்த நாய்களே காரணம்.

நிலத்தை குடைந்து அணு ஆயுதங்களை பதுக்கி வைத்து - அதே ஆயுதங்களைக் கொண்டு நிலத்தை பிளந்து - நிலத்தை - நீரை - வாயுவை - ஆகாயத்தை அசுத்தமாக்கியவர்கள் இந்த மனிதர்கள்.

இன்று காற்றில் விஷம், நிலத்தில் விஷம், நீரில் விஷம், எங்கும் எதிலும் விஷம். சொர்க்கபுரியாக இருந்த பூமியை வாழ முடியாத நரகமாக்கியவர்கள் இந்த பேராசை பிடித்தவர்கள்.

இவ்வளவற்றையும் செய்த பின்னும் கூட இவர்கள் இங்கு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கின்றார்களா என்றால் அது தான் இல்லை. இயற்கை உருவாக்கிய உயிரினங்களிலேயே சந்தோஷம் இல்லாத ஒரே ஒரு உயிரினம் மனிதன் ஒருவன் தான்.

இந்த லட்சணத்தில் இவர்கள் செவ்வாய் கிரகம் சென்றால் என்ன - புதனுக்குப் போனாலென்ன? எங்கும் எப்போதும் அதே செக்கு மாட்டு வாழ்க்கைதானே இவர்களுக்கு!

# என்ன உலகமடா? Doctor ஸ்ரீதரன்



## பூரணம்



அன்று ஞாயிற்றுக்கிழமை. நேரம் காலை பத்து மணி. கடந்த பதினைந்து வருடங்களாக இலண்டனில் வாழும் - இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் ரவியும் அவரது மனைவி அகிலாவும் - வழமை போல அவர்களின் மகள் அபிராமியை வீணை வகுப்பிற்கும் மகன் பிரகலாதனை மிருதங்க வகுப்பிற்கும் அழைத்துச் செல்ல தயாராகிறார்கள். தனது பிள்ளைகள் லண்டனில் வாழ்ந்தாலும் அவர்கள் இந்திய கலாச்சாரத்துடன்தான் வளர வேண்டும் என்பது டாக்டரின் பிடிவாதம். வீட்டை பூட்டிய பின் - மனைவியையும் பிள்ளைகளையும் காரில் ஏற்றி விட்டு - நேற்றைய பத்திரிகையையும் வேறு சில தேவையற்ற பொருட்களையும் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு காரில் ஏறுகிறார் டாக்டர்.

வீசிய அந்தப் பத்திரிகையில் டாக்டர் படிக்க தவறிய பக்கம் ஒரு சமூகவியல் கட்டுரை. அதன் சாராம்சம்:

கலாச்சாரம் என்பது ஒரு மன அமைப்பு - அது ஒரு சிந்தனை முறை. பிறந்த இனம்- பேசும் மொழி - கற்ற கல்வி - வாழும் சூழல் - இப்படி எத்தனையோ காரணிகள் சேர்ந்து உருவாக்கும் - பார்வைக்கு தெரியாத மிக சிக்கலான ஒரு முழுமை அது. நமது வெளிப்பார்வைக்கு தெரியும் கலாச்சாரச் சின்னங்கள் என்பவை ஒரு கலாச்சாரத்தின் வெளிப்பாடுகள் - அதன் பிரதிபலிப்புகள். பெண்கள் அச்சம் - மடம் - நாணம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்பது ஒரு சிந்தனை முறை. சேலை - பூ - பொட்டு - அவற்றை பிரதிபலிக்கும் சின்னங்கள். உடலை - உள்ளத்தை கடந்து - அந்த உயிரை உருக வைப்பது சங்கீதம் என்பது ஒரு சிந்தனை முறை. சங்கராபரணம் - மோகனம் - காம்போதி - அவற்றின் பிரதிபலிப்புகள்.

சிந்தனை இல்லாதபோது சின்னங்கள் அர்த்தமற்ற வெறும் வேஷங்கள். சின்னங்களைச் சூடிக்கொள்வதால் சிந்தனை முறை மாறுவதில்லை.

வேட்டி அணிவதால் ஒரு பீட்டர் சுப்பிரமணியமாகி விடுவதில்லை! ஒரு அன்ஜலாவை அகிலாவாக்குவதற்கு சேலை மட்டும் போதாது! கூந்தலில் பூ சூடுவதால் மேரியும் சாவித்திரியும் ஒன்றல்ல! சங்கராபரணம் பாடுவதால் மைக்கல் ஜாக்ஸன் பேசுதாஸ் ஆகி விடுவதில்லை! காசிக்கு செல்வதால் பேப்பாண்டவர் சங்கராச்சாரியார் ஆகிவிடுவதில்லை!

அப்படியானால் -

டாக்டரின் பிள்ளைகள் - வீணை படிக்கும் அபிராமியும் மிருதங்கம் படிக்கும் பிரகலாதனும் தமது நண்பர்களை தனியாகச் சந்திக்கும்போது பேச விரும்பும் விடயங்கள் - ஆங்கில சினிமா - தொலைக்காட்சி நாடகம் - கவர்ச்சி நடிக நடிகையர் நாகரீக உடை அலங்காரங்கள்!

பேச விரும்பாத விடயங்கள் - சங்கராபரணம் - ஆதி தாளம் - மகாபாரதம்!

இன்று இவர்கள்-

பிரகலாதன் என்ற பெயரில் மிருதங்கம் பயிலும் பீட்டர்கள்!

நாளை இவர்கள் -

அபிராமி என்ற பெயரில் உலாவப் போகும் வீணை கற்ற அன்ஜலாக்கள்!

*பூரணத்திற்கு தேவையா பூர்வீகம்?*

# குகை



இலங்கையிலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட ஒரு முக்கிய கடிதத்தை பெற்றுக் கொள்வதற்காக - நானும் எனது நண்பனும் எமக்கு முன் அறிமுகமில்லாத - மின்சார பொறியியலாளர் மகேசன் வீட்டுக்கு கடந்த வாரம் சென்றிருந்தோம். இன்னும் ஐந்தே நிமிடங்களில் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து திரும்பி விடுவார் - ஹாலில் அமருங்கள் என்று கூறி மறைகிறாள் அவரின் மனைவி. நம் கண்கள் ஹாலை ஒரு முறை வட்டமிடுகின்றன.

நான் அமர்ந்திருக்கும் ஸோபாவின் அருகேயுள்ள சிறிய மேசையின் மீது - சில தினங்களுக்கு முன் உணவருந்திய கோப்பையில் உள்ள மீதி உணவு உலர்ந்து - அதன் மீது பச்சை நிறத்தில் ஏதோ ஒன்று வளர்ந்து கொண்டிருக்கிறது.

மிகப் பெரிய - விலை உயர்ந்த டி.வி. - பலவித பொருட்களையும் வைப்பதற்கு ஒரு உகந்த இடமாகத் தெரியப்பட்டிருக்கிறது - அதன் மீது ஒரு பிள்ளையார் சிலை - மிளகாய் பொடி டப்பா - பல் துலக்கும் பிரஷ் - பற்பசை - ஒரு சோற்றுக் கரண்டி - ஒரு கத்தி - என வெகு அலங்காரமாக காட்சி அளிக்கிறது டி.வி. அதற்கு கீழே இருக்கும் வீடியோ உபகரணத்தினுள் ஒரு பாண் துண்டு செருகப்பட்டிருக்கிறது.

ஹாலையும் சமையலறையையும் பிரிக்கும் கதவில் பொறியியலாளரின் ஒரு சேட் உடுப்பு தொங்குகிறது- கசங்கி சுருண்ட சிவப்பு நிற ஜட்டி உட்பட.

ஹாலின் ஓரமாகவுள்ள பெரிய மேசை - இது எதற்காக உபயோகிக்கப்படுகிறது என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்! என்ற போட்டிக்கு தயார்படுத்தப்பட்டது போல அதன் மீது சில பொருட்கள்- ஒரு கம்ப்யூட்டர் - பூந்தோட்டத்தில் வேலி கத்தரிக்க உபயோகிக்கும் நீண்ட கத்தரி ஒன்று - ஒரு சுத்தியல் - ஒரு நீண்ட வாள் - ஒரு பென்சில் - சில புத்தகங்கள்.

மேசைக்கு அருகேயுள்ள விலை உயர்ந்த நாற்காலியில் ஒரு நாய் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறது.

ஹால் முழுவதும் ஒரு வகை அபூர்வ சுகந்தம். அது நாயின் மணமா - அல்லது சிகரட் புகையின் நாற்றமா - அல்லது சமையலறையிலிருந்து வரும் கருவாட்டு மணமா - அல்லது இவையெல்லாவற்றின் ஒரு அபூர்வ கலப்பா என்பது கண்டு பிடிக்க முடியாத ஒன்று.

பொறியிலாளர் சிறிது நேரத்திலேயே வீடு வந்து விட்டார். அவருடன் நாம் நடத்திய சிறு உரையாடலில் நாம் அறிந்து கொண்ட மிக முக்கிய விடயம் - வெகு விரைவில் அவர்கள் இந்த வீட்டை விற்று விட்டு வேறு இடத்திற்கு செல்கிறார்கள் - காரணம் - இந்த Area சரியில்லை.

வெளியே வந்த பின் நான் நண்பனிடம் கேட்ட முதல் கேள்வி:

ஏன் இவர்களின் வீடு காட்டு மிருகங்களின் குகையைப் போல இருக்கிறது?

இதற்கு நண்பனின் பதில்:

இந்த Area சரியில்லை - அதனால்தான் அவர்கள் Areaவிற்கு ஏற்ப வீட்டை வைத்திருக்கிறார்கள்!

கைலாயம் செல்வதால் ஒரு எருமை நந்தியாவதில்லை!



ப.வை.ஜெயபாலன்



# லண்டனில் நிதிசேகரிப்பு நிகழ்வுகள்!

கோடை பிறந்தாலே குதூகலம்தான். லண்டன் போன்று புலம் பெயர் நாடுகளில் கொண்டாட்டங்கள் களைகட்டும். விடுமுறைகளில் எல்லாம் பகல் இரவு என தொடர் விழாக்கள் கொண்டாட்டங்கள்! உறவினர், நண்பர்களின் திருமணம், பூப்புனித நீராட்டு ஒருபுறம். பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள் என்பவற்றுக்கான முழுநாள் வருடாந்திர நிகழ்வுகள் இன்னொருபுறம். ஊரில் பாதிக்கப்பட்டவர்கள், ஆலய புனரமைப்பு என நிதித்தேட்ட கலை நிகழ்வுகள், விளையாட்டுக்கழகங்கள், தமிழ்ப் பள்ளிகளின் விழாக்கள், அதிகரித்துவிட்ட ஆலயங்களின் திருவிழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் என தொடரும் பற்பல நிகழ்வுகள்.

கோடை குதூகலங்களின் பெயரால் மன, பண பாதிப்புக்கு உள்ளாவது சிறீமான் பொது சனம்தான். எப்படி முகத்தை முறிப்பது, கடமைப்பாடு, பிள்ளைகளின் ஆசை என்ற காரணங்களுக்காக இவர்கள் இதற்கு மன எரிச்சலை வெளிக்காட்டாமல் செலவு செய்ய நேர்கிறது.

இவை எல்லாம் நிதிசேகரிப்பு நிகழ்வுகளாகவே நடைபெறுகின்றன. உறவினர், நண்பர்கள் தொடர்பான விசேஷங்களில் உறவினர்களுடன் ஒன்று கூடினோம். அன்பளிப்பு விடயத்தில், "வாங்கினோம் கொடுத்தோம்" என்ற நிலையில் அது நிறைவை தருகிறது. அதிலும் ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகள் எதிர்வந்தால் அடுத்த நாளில் வீட்டுக்குப் போய் தலைகாட்ட வேண்டிய நிர்ப்பந்தம்.

பழைய மாணவர் சங்கங்கள். விளையாட்டுக்கழகங்கள் என்பன தம் நிகழ்வுகளுக்கு கார் ' தரிப்பு இட கட்டணம், நுழைவுக் கட்டணம், ஊர் உணவு என்ற பெயரில் பல மடங்கு விலையான திண்பண்டங்கள் என செலவுக்கு வழிவைத்துவிடுகின்றன. இந்த அமைப்புகளின் வருடாந்த விழாக்களின் நோக்கம் செலவுகளை ஈடுகட்டுவதும் மீதிப்பணம் ஊர் பள்ளிக்கு அல்லத்து கழகத்துக்கு என்ற விளம்பர யுத்தியையும் கொண்டதாக உள்ளன. எனது பிள்ளையின் விளையாட்டுக்கழகம், எனது பள்ளிச் சங்கம், எங்கள் சமூகம் என்ற வட்டத்தை மையப்படுத்தியதாக இந்த நிகழ்வுகள் அமைகின்றன. சுய மரியாதையைக் காப்பாற்றுவதற்காக இதில் கலந்துகொள்ள வேண்டிய கட்டாயம் அந்த சமூகத்தவருக்கு ஏற்படுகின்றது.

அறக்கட்டளை நிறுவனங்கள் புலம் பெயர் நாட்டில் பெருமளவில் முளைத்துள்ளன. இவற்றில் நிதிசேகரிப்பு நிகழ்வுகளே அதிகம்; கோடைப்பருவத்தை ஆக்கிரமிக்கின்றன. பல்லாயிரக்கணக்கான பவுண்களை இந்திய சினிமா பிரபலங்களுக்கு வழங்கி இங்கு அழைத்து, பிரமாண்ட செலவில் மேடை அமைத்து, இங்கு உள்ள சினிமா பிரியர்களிடம் நூற்றுக்கணக்கான பவுண்களை நுழைவுக் கட்டணமாக வசூலித்து நிதிதேடும் நிறுவனங்கள் சிலவும் இதில் அடக்கம்.

எங்களிலும் பார்க்க எவ்வளவு கீழ்நிலையில் தாயகத்தில் எம் உறவுகள் தவிக்கிறார்கள் என்ற உணர்வை ஊட்டி தாங்கள் தனித்துவமான ஒரு நிகழ்ச்சியை நடாத்தி விடவேண்டும் என்ற நோக்கமே இதில் சில அமைப்பாளர்களிடம் மேலோங்கி உள்ளது.

"ஊருக்கு காசு அனுப்புறதுக்கு எத்தனை பேருக்கெண்டு நாங்கள் குடுக்கிறது" என்ற முணுமுணுப்பையும் எங்கும் கேட்க முடியும்.

கலை நிகழ்வுகளை நிதிசேகரிப்பு நிகழ்ச்சிகளாக அறக்கட்டளை அமைப்புக்களும், சங்கீதம், நடனம், வயலின், மிருதங்கம் என்று பல்கலைகளையும் கற்பிக்கும் ஆசிரியர்களும் நடாத்துகிறார்கள். இவர்கள் நுழைவுச் சீட்டு விற்பனைக்கும் சில உபாயங்களைக் கையாள்கிறார்கள். நிகழ்ச்சிகளில் மேடையில் தம் திறமையை கூட்டாக காட்டும் வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மாணவர்கள் குறித்த தொகைக்கான நுழைவுச்சீட்டு பெற்றுக் கொள்ளவேண்டும் என நிபந்தனை விதிக்கப்படுகிறார்கள். பிள்ளைகளுடைய ஆசைக்கும் ஆசிரியர் கேட்கிறார் என்பதற்குமாக நுழைவுச்சீட்டை வாங்கும் பெற்றோர் செலவு கூடும்போது அதிருப்தி அடைகின்றார்கள்.

"என்ன மாஸ்ரர், நிகழ்ச்சிக்கு டான்ஸ் பழக்க எண்டு ரீச்சர் வீட்டை ஏழு எட்டுத்தரம் கொண்டு திரியிறம். பழக்கிற வகுப்புக்கும் ஒவ்வொரு முறையும் அவவுக்கு காசு குடுக்கவேணும். பிறகு டான்ஸ் உடுப்பு, தையல் கூலி என்றும் அறுபது. எழுபது பவுண்ஸ் செலவழிக்க வேணும். பிறகு பிள்ளையள், பெற்றோர் ரிக்கற் எடுக்க வேணும் எண்டும் சொல்லீனம். நிகழ்ச்சியும் பழக்கி குடுத்து காசும் குடுத்துத்தான் ஆட வேண்டும் எண்டா காசுக்கு என்ன செய்யிறது மாஸ்ரர்" இது நிதி நிகழ்வு ஒன்றுக்கு பிள்ளையை தயார் செய்த தனாவின் தாயின் நியாயம்.

"தங்கள் தங்கள் பிள்ளையளின்ரை டான்ஸ்சை மேடையில பார்க்க சந்தர்ப்பம் தாறம் என்பதை பெற்றோர் யோசிக்க வேணும். ஊரில ஒரு நல்ல காரியம் செய்யத்தானே நிகழ்ச்சி நடத்திறம்" இது நிதி நிகழ்ச்சி நடத்தும் குழுவைச் சேர்ந்த ஆசிரியரின் கருத்து.

ஆர்வத்துடன் நிதி நிகழ்வுகளை ஏற்பாடு செய்பவர்கள் அதிகம். ஆனால் மண்டப வாடகை, ஒளி, ஒலி, படப்பிடிப்பு, உபசரணை, விளம்பரம் என்று செலவுபோக ஊருக்கு அனுப்ப தேறுவது எதுவும் இராது. மண்டபத்துக்குள் சிற்றுண்டி விற்று இலாபம் தேடலாம், விழா முடிய இரவு உணவும் ஏற்பாடு செய்தால் ஆர்வமாக ரிக்கற் எடுப்பார்கள் என்றெல்லாம் திட்டம் செயற்படுத்தப்படும். ஆனால் சிற்றுண்டி பொதிகள் விலைபோகாது பெருமளவில் மிஞ்சுவதையும், மேலதிக வருகையாளர்களை எதிர்பார்த்து ஆயிரக்கணக்கில் வாங்கும் இடியாப்பம் கறிகள் வீணாவதும்தான் எங்கும் நடைபெறுகின்றன. சிற்றுண்டிச்சாலை நடாத்தி பணம் தேட பெற்றோரிடம் 50 வடை, 100 கேக் என்று செய்துதரும்படி உதவி கேட்கும் விழா அமைப்பாளர்களும் உண்டு.

அண்மையில் செலவை மீதப்படுத்தும் நோக்குடன் ஒரே மேடையில் இரு வெவ்வேறு அமைப்புகளின் நிகழ்வுகள் நடந்தன. நோக்கம் வெற்றியடைந்தது. சட்டனில் பாமுகம் தொலைக்காட்சி இயக்கிவரும் ஒலிபரப்பாளர் நடாமோகனின் 130ஆவது "பொன்மாலை பொழுது" நிகழ்ச்சியும் மோடன் சூட்டிங் ஸ்ரார் விளையாட்டு கழகத்தின் முதலாவது ஆண்டு விழாவும் நடைபெற்றன. பிற்பகல் 2 மணி முதல் 5.30 மணிவரை பொன்மாலைப் பொழுதும் பின்னர் தொடர்ந்து மறுநிகழ்ச்சியும் நடைபெற்றன. ஒலி, ஒளி படப்பிடிப்பாளர் கட்டணம், மேடை ஒழுங்கு நேர வாடகை போன்ற வகையில் வழமையான செலவில் பாதியை ஒவ்வொரு அமைப்பும் இலாபமாக மீதப்படுத்திக் கொண்டன.

நிகழ்ச்சிகளை வழங்கிய சட்டன் தமிழ்ப்பாடசாலை உட்பட ஏனைய குழுக்கள் மற்றும் பார்வையாளர்கள் பங்காளர்கள் எல்லோரும் ஒரே நாளில் மகிழ்ச்சியோடு பங்கேற்றனர். இரசிக்கவும் இந்த உபாயம் வாய்ப்புத் தந்தது.







இதேவேளை தன் நிகழ்வை ஐரோப்பிய நாடுகளில் 130ம் தடவையாக நடாத்தும் நடாமோகன் தன் எல்லா நிகழ்வுகளும் நுழைவுக்கட்டணம் இன்றியும் பங்கேற்கும் சிறுவர்கள் தாம் விரும்பும் திறமைகளை காட்ட சந்தர்ப்பம் அளிக்கப்படுவதாகவும் சொன்னார். ஒலி, படப்பிடிப்பு, மண்டப வாடகை பரிசுப் பொருட்கள் அந்த அந்த பிரதேச வியாபார நிறுவனங்களின் அன்பளிப்பு என்றும் மொத்த செலவு பவுண் 500க்கு குறைவாகத்தான் அமைவது இவற்றால் ஈடு கட்டப்பட்டதாகவும் தெரிவித்தார். பிள்ளைகளே பழகி பெற்றோர் சுற்றத்துடன் வந்து தங்கள் நிகழ்ச்சிகளை நுழைவு சீட்டு இன்றி மகிழ்ச்சியாக மேடையேற்ற தொடர்ந்து வாய்ப்பு வழங்கும் அவர் சேவை ஆச்சர்யம் அளித்தது.

பொன்மாலை பொழுது சேவைக்காக ஒலி படப்பிடிப்பு சேவையாளர்களும் கட்டணம் இன்றி இணைந்தத்தாக கூறினார். அடுத்த சந்ததியை முன்னேற்ற சேவை புரியும் நடாமோகனின் முன்மாதிரியை ஏனையோரும் சிந்திக்கலாமே. செயற்படுத்தலாமே.

**AYNGARAN INTERNATONAL**
**Proudly Presents**

**Four Further Details**
**020 8540 1500, 020 8903 3300**
**020 8543 4342, 020 8543 4477**




**From 15th AUG 2014 - CINEWORLD CINEMAS**

Directed by: N. Lingusamy, Written by: N. Lingusamy, Starring: Suriya, Samantha, Vidyut Jamwal, Manoj Bajpai
Music by: Yuvan Shankar Raja, Cinematography: Santosh Sivan Edited by: Anthony

**ILFORD, WEMBLEY, FEKTHAM, WANDSWORTH, STAPLES CORNER, BIRMINGHAM**
**MILTON KEYNES, LIVEPOOL, SHEFFIELD, CRAWLEY, LUTON, STOCKPORT**

ADVANCE BOOKING: ONLINE - WWW.CINEWORLD.CO.UK OR CALL - 0871 220 1000
SUBJECTED TO CHANGES IN SHOWS TIMES WITHIN ADVERTISE PERIOD.

**JOIN US ON** YouTube www.youtube.com/ayngaran   www.facebook.com/ayngaran   visit us: www.ayngaran.com

வவுனியூர் இரா.உதயணன்

# மனித எச்சங்கள்

திருவிழாக்காலம்; பிள்ளையார் கோவில் அலங்கரிக்கப்பட்டு, விழாக்கோலம் பூண்டு அழகாக நிமிர்ந்து நின்றது.

உச்சி வெய்யில் நிலத்தைத்தொட கோவிலுக்கு வந்து போனவர்களில் ஒரு சிலர் நிலத்தின் சூடு தாங்காமல் கெந்திக் கெந்தி நடந்தார்கள்.

கோயிலின் கிழக்குத் திசையில் நீண்டு வளர்ந்து கிளைவிட்டு நிமிர்ந்து நின்ற இலுப்பை மரத்தின் கீழ் ஒரு சிறுமி மரத்தோடு சாய்ந்திருந்தாள். கால்களை நீட்டி ஆட்டியபடியே ஏதோ பாடிக்கொண்டு அணிந்திருந்த அழுக்குப் படிந்த பாவாடையின் நுனியை உயர்த்தி இடது காலை இடக்கை விரல்களின் நகங்களால் சொறிந்தாள்.

குளித்துப் பல நாட்களாக இருக்க வேண்டும். தலைமயிர்கள் புழுதியைச் சுமந்து நின்றன.

-வயது ஏறக்குறைய பதினைந்து, பதினாறு இருக்கும்.

அவள் அமர்ந்திருந்த இலுப்பை மரத்திற்கு சற்றுப் பின்னால் பெரிய குளமொன்று காணப்பட்டது. பலர் குளக்கட்டில் நடந்து வந்து, இறங்கி கோயிலிற்கு வந்து கொண்டிருந்தார்கள்.

கோயிலில் பிள்ளையாரைத் தரிசித்து விட்டு வரும் ஒரு சிலர் அவளுக்கு சில்லறை காசுகளை கொடுத்துவிட்டுப் போனார்கள். இன்னும் ஒரு சிலர் அர்ச்சனை செய்து கிடைத்த பழங்களையும் பிரசாதத்தையும் அவளிடம் கொடுத்துவிட்டுப் போனார்கள். அவளும் அவற்றை வாங்கி அருகில் வைத்துக் கொண்டு வாழைப்பழத்தை உரித்து சாப்பிட்டாள். பின் பிரசாதத்தை எடுத்து வாய்க்குள் அடைத்துக் கொண்டாள். அரைத்து மென்று விழுங்கினாள்.

இடையில் எழும்பி கால் கழுவ நிரப்பியிருந்த தண்ணீர் தொட்டிப் பக்கமாக ஓடினாள். பேணியை எடுத்து தொட்டிக்குள் நிரப்பியிருந்த தண்ணீரை எடுத்து பேணியை உயர்த்தி சரித்து அண்ணாந்து வாய்க்குள் நீரை ஊற்றினாள். பின் ஓடிச் சென்று மரத்தடியில் அமர்ந்து கொண்டாள். சற்றுத் தள்ளி இன்னொரு மர நிழலில் பிச்சைக்காரர்கள் ஒரு சிலர் அமர்ந்திருந்தார்கள்.

செவ்வாய், வெள்ளி, சனி நாட்களில் பக்தர்கள் அதிகமாக வருவதால் பிச்சைக்காரர்கள் அந்த மரத்தடியில் அதிகம் அமர்ந்திருப்பார்கள்.

அன்று திங்கட்கிழமை. அதனால் பிச்சைக்காரர்கள் குறைவாகவே காணப்பட்டார்கள்.

அந்தச் சிறுமி சாப்பிட்டு முடிந்ததும் பக்தர்கள் தனக்குப் போட்ட காசை எடுத்துக் கொண்டு பிச்சைக்காரர்கள் அமர்ந்திருந்த பக்கமாக ஓடினாள். தன்னிடமிருந்த, பக்தர்கள் தனக்குக் கொடுத்த காசை பிச்சைக்காரர்களின் தட்டங்களில் வரிசையாக போட்டாள். பின் நின்று கைதட்டிச் சிரித்தாள். ஓடிப்போய் மரத்தடியில் அமர்ந்து கொண்டாள்.

அவளது பெயர் நந்தினி என்று பலருக்குத் தெரியும். பல தடவைகள் ஒரு பெரியவர் அவளைத் தேடி வந்து அழைத்துச் செல்வதை பலரும் பார்த்திருக்கிறார்கள். பாவம் அந்தப் பெரியவர் நடக்க முடியாமல் மெல்ல மெல்ல நடந்து வந்து நந்தினி போகமறுக்க பொறுமையாக இருந்து அவள் கைபிடித்துச் செல்லும்போது கோயிலுக்குப் போய் வரும் நானும் கூட பார்த்திருக்கிறேன்.

கோயில் பூசாரி சில நாட்களில் நந்தினிக்கு சாப்பாடு கொடுத்ததை நான் கூட கண்டிருக்கிறேன்.

சிலவேளை பல நாட்களாக நந்தினியை காணமுடியாது. பின் திடீரென வந்து அந்த இலுப்பை மரத்தரடியில் அமர்ந்து கொள்வாள்.

ஒரு திங்கட்கிழமை. காலை பத்துமணியளவில் கோயிலுக்குள் சென்றபோது மரத்தடியில் நந்தினி கால்களை விரித்து அமர்ந்திருந்தாள். அருகில் வயது போன அந்தப் பெரியவரும் மரத்தோடு சாய்ந்து அமர்ந்திருந்தார். நான் பெரியவர் அருகில் போய் "ஐயா" என்று கூப்பிட்டேன். தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தார் அந்தப் பெரியவர்.

"இவளுக்கு நீங்கள்...?"

"பாட்டன் தம்பி"

மீண்டும் தலையைக் குனிந்து கொண்டார்.

நானும் அவருக்கு அருகில் அமர்ந்துகொண்டேன்.

"ஐயா உங்கட ஊர்...?"

"வெள்ளை முள்ளிவாய்க்கால்"

-ஒரே சொல்லில் பதில் சொல்லிவிட்டு தலையைக் குனிந்து கொள்ளும் அந்தப் பெரியவரிடம் நந்தினியைப் பற்றி அறிந்து கொள்வது சற்று கடினமாகத்தான் இருந்தது.

"ஐயா குடிக்க ஏதும் எடுத்து வரட்டே... சோடா, தண்ணி ஏதாவது"

பெரியவர் வேண்டாம் என்பதற்கு அடையாளமாக தலையாட்டினார். பின் நிமிந்து என்னைப் பார்த்தார்.

நானும் அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு அவரருகில் அமர்ந்து கொண்டேன்.

"ஐயா..." நான் இழுத்தேன்... "இவளை ஏதாவது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கலாமே! இந்தக் காலத்தில் மனநோய் கொண்டவர்களை இலகுவாக மருந்து கொடுத்து ஆஸ்பத்திரியில் வைத்திருந்து சுகமாக்கி வீட்டு அனுப்பி வைக்கினம்"

-பெரியவர் என்னையே பார்த்தார். அவருக்கு ஏதோ சொல்ல வேணும் என்று தோன்றியிருக்க வேண்டும். ஆனால் மௌனமாக தலையைக் குனிந்து கொண்டார்.

பெரியவருக்கும் மனநோயா என்ற சந்தேகம் எனக்குள் எழுந்தது.

"ஐயா..." மீண்டும் அவரைக் கூப்பிட்டேன்.

தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தார். கண்கள் கலங்கியிருந்தன.

"தம்பி, நான் இவள வைத்தியரிட்ட காட்டாமல் சும்மா விட்டிருப்பன் என்று நினைக்கிறியோ"

நான் கண்கொட்டாமல் அவரையே பார்த்தேன்.

"பக்கத்தில இருக்கிற ஆஸ்பத்தியில கன நாட்கள் இருந்தவள். அங்க இருக்கிற டொக்டர்மார்களும் நல்லாத்தான் கவனிச்சு வந்தினம்". பேசுவதை நிறுத்தி விட்டு என்னைப் பார்த்தார்.



நானும் அவரின் கண்களைப் பார்த்தேன்.

கண்களை நீர் மூடி முட்டியது.

"இவள், தம்பி சில நாட்களில் நல்லாயிருப்பாள். சில நாட்களில் இப்பிடி எனக்குத் தெரியாம வீட்டில இருந்து, இங்க வந்திடுறாள்...

இந்தக் கடைசிக் காலத்தில் என்னைப் பார்க்க வேண்டிய அவளை நான் பார்க்க வேண்டி இருக்கு. போன பிறப்பில என்ன பாவம் செய்தனோ தெரியாது தம்பி."

சொல்லிக் கொண்டிருக்கும்போது எழும்ப முயன்ற நந்தினியின் கைகளை பிடித்து இழுத்து அமர்த்தினார் அந்தப் பெரியவர்.

"ஐயா இவளிடை அப்பா, அம்மா..." நான் இழுத்தேன்.

"என்னத்த சொல்லுறது தம்பி. முள்ளிவாய்க்கால் போரிலேயே ரெண்டும் போய் சேர்ந்துட்டுதுகள்."

"அப்புச்சி போவம்" நந்தினி பாட்டனின் கையைப்பிடித்து இழுத்தாள்.

"கொஞ்ச நேரம் இரு, பிள்ள"- சொல்லிவிட்டு என்னைப் பார்த்தார்.

"ஊரில் எங்கட வீட்டுக்கு பக்கத்தில கோயில் ஒன்று இருக்கு. இவளின்ர தகப்பன்தான் பூசை செய்யிறது. இவளும் சின்ன வயசில இருந்து தகப்பன் பூசை செய்யிற நேரத்தில் எல்லாம் அந்தக் கோயிலில் போய் இருப்பாள்."

"அந்த நினைப்பிலதான் இங்கேயும் அடிக்கடி வந்து இந்த மரத்தடியில இருக்கிறாள்."

"ஆனால் தம்பி போர் நடந்து கொண்டு இருக்கேக்க இவள் பார்த்த காட்சிகள், பெற்றோரும் குண்டு பட்டு இறந்த காட்சி எல்லாம் இவளின்ர மனசை பாதிச்சிட்டுது. டொக்டர்மாரும் இவளின்ர மனநிலைக்கு அதுதான் காரணம் என்று சொல்லி மருந்து கொடுக்கினம். என்ன தம்பி செய்யிறது. கடவுளுக்கு பூசை செய்தவனின்ர மகளுக்கே கடவுள் இரக்கம் காட்டவில்லை பார்த்தியே!"

எழும்பி நந்தினியின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினார் பெரியவர்.

பல நாட்களாக நந்தினியை கோயில் பக்கம் காணவில்லை.

ஓரளவு சுகமாகியிருக்க வேணும் என்று நானும் நினைத்துக் கொண்டேன்.

அன்று புதன்கிழமை. காலை பத்து மணியிருக்கும். கோயிலுக்குப் போய் வரலாம் என்று நானும் புறப்பட்டு கோயில் பக்கமாகப் போனேன்.

கோயிலுக்கு சற்றுத் தள்ளியிருந்த குளக்கட்டில் சனக் கூட்டமாகவிருந்தது.

நானும் என்ன நடக்கிறது என்று பார்க்க குளக்கட்டுப் பக்கமாக நடந்தேன்.

கோயில் வாசலில் இருந்து பிச்சையெடுக்கும் பிச்சைக்காரர்கள் எல்லாம் அங்கே சுற்றி நின்றார்கள். திருவிழாக்காலம். ஆதலால் கோயிலுக்குப்போனபக்தர்கள் பலரும் அங்கே கூடியிருந்தார்கள். பிச்சைக்காரர்கள் ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தார்கள். அவர்களை விலக்கி நானும் எட்டிப் பார்த்தேன்.

நந்தினி குப்புறக் கிடந்தாள். அவள் பாவாடை முழுவதும் இரத்தக்கறை படிந்து காய்ந்திருந்தது.

எனக்குப் புரிந்து விட்டது. அவளது பாட்டன் குந்தியிருந்து அழுது கொண்டிருந்தார்.

முள்ளிவாய்க்காலில் உயிர் தப்பி வந்து வாழ்ந்த இவளுக்கா இந்த நிலை.

என்னையறியாமலேயே மூச்சு இளைத்தது. மூச்சை பலமுறை விரைவாக விட்டு இழுத்துக் கொண்டேன்.

பலரும் வேடிக்கை பார்க்க, பிச்சைக்காரர் ஒப்பாரி வைத்து அழும் காட்சி என்னையும் அழ வைத்தது. காமப்பசி தீர்க்க மனித மிருகங்கள் இரை தேடி அலையும் நேரத்தில் அவளுக்காக, அவள் சேர்த்து வைத்த சொத்து இந்தப் பிச்சைக்காரர்கள்தான்!





# வெள்ளையளுக்குத் தெரியுமா

# எங்கள் இரத்த பாச உறவு!

எனது அம்மா என்னை அடித்துத்தான் வளர்த்தெடுத்தார். ஆனால் எனது பிள்ளைகளை அடித்து வளர்ப்பதில் எனக்கு உடன்பாடில்லை. அவர்கள் நான் சொல்வதைக்கேட்டு வளர்ந்து விட்டார்கள்.



> "அப்பா நான் உங்களோடு தூங்குகிறேன். ஆனால் டீச்சர் கேட்டால் சொல்லவேண்டாம்". அவர் அந்தக்குழந்தையின் பாசத்தால் மனம் நெகிழ்ந்து கண்ணீர் சிந்துகிறார்.

இந்த ஐரோப்பிய நாடுகளின் வெள்ளையின 'கலாச்சாரத்துக்குள் நமது பிள்ளைகளை வளர்ப்பது பெரும் சிரமமான ஒரு விடயமாக இருக்கிறது.

• இளைய அப்துல்லாஹ்




இந்த விடயம் பல இந்திய பெற்றோரிடையே கலக்கத்தை அதிகரித்து விட்டது. எனது நண்பரின் ஐந்து வயது மகன் வீட்டில் அடித்தால் "நான் போய் எனது டீச்சரிடம் சொல்லி விடுவேன்" என்று மிரட்டுகிறான்.

உண்மைதான். அவன் சொல்லி விட்டால் கேட்டு கேள்வி இல்லாமல் ஒன்று இரண்டு விசாரணையில் நண்பருக்கு ஐந்து வயது மகனால் சிறைக்கு போக வேண்டி வரலாம். எனவே பெற்றோர்கள் பிள்ளைகளை கண்டித்து வளர்த்த எங்களது காலம் மாறி இப்பொழுது பிள்ளைகள் பெற்றோரை ஐரோப்பிய. ஸ்கன்டினேவிய நாடுகளில் வைத்து மிரட்டுகின்ற காலத்தில் இருக்கிறோம்.

இங்கு லண்டனில் நான் இருக்கும் ஹாவுன்ஸ்லோ பகுதியில் 'வளர்ப்பு பெற்றோராக இருக்க விருப்பமா?' என்று கேட்டு றோட்டில் பெரிய பெரிய விளம்பரங்களை கவுன்ஸில் வைத்திருக்கிறது.

அவ்வளவுக்கு பிள்ளைகள் அனாதைகளாக இருக்கிறார்கள்.

வெள்ளைக்காரரின் கலாச்சாரத்தோட நாம் போட்டி போட முடியாமல் திணறுகிறோம். எமது இலங்கை, இந்திய கலாசாரம், வெள்ளைக்கார கலாசாரம் என்ற இரட்டை படகில் கிடந்து அல்லலுறுகிறோம்.

வெளி நாட்டு படாடோபமான வாழ்க்கை பொருளாதார மேம்பாடு என்ற சிறப்புகள் எம்மை ஆட்கொண்டாலும் குடும்பம், பிள்ளை வளர்ப்பு என்று வரும்பொழுது நடுத்தர மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.

அன்பாக "ஆ காட்டம்மா" என்று சொல்லி பராக்கு காட்டி எமது குழந்தையை தூக்கிவைத்து கைகளால் சோற்றை பிசைந்து அன்பாக ஊட்டினால் அடுத்தநாள் பொலிஸ் வந்து எமது வீட்டு வாசலில் நிற்கிறது. நாம் எமது பிள்ளையை துன்புறுத்தி விட்டோமாம்.

இங்கே லிவர்பூல் பகுதியில் எனக்கு தெரிந்த நண்பர் ஒருவர் தனது உடம்பு பிரட்டும் செல்லக்குழந்தையை ஆடை இல்லாத உடலோடு போட்டோ எடுத்து தனது மொபைல் போனில் வைத்திருந்து அழகு பார்த்ததற்கு பொலிஸ் அவரை கைது செய்து சிறையில் அடைத்து வைத்திருக்கிறது.

காரணம் அவர் குழந்தைப்பிள்ளையை நிர்வாணமாக ரசிக்கின்ற ஒருவராம். நமது வீட்டு வரவேற்பறைகளில் நாங்கள் சின்னப்பிள்ளையாக குப்புறப்படுத்த நிலையில் இடுப்பில் அருணாக்கயிறோடு ஆடையில்லாமல் இருக்கின்ற போட்டோக்கள்தான் பிறேம்போட்டு மாட்டி வைத்திருக்கிறோம் என்பது வெள்ளைக்காரருக்கு தெரியாதுதானே.

வெள்ளைக்கலாசாரத்தில் இங்கு ரத்த பந்தம் மற்றும் கணவன் மனைவி பந்தம் என்பதெல்லாம் ஒரு வகை போலித்தனத்தோடு இருப்பதால் அவர்கள் யாரையும் நம்ப தயாராக இல்லை. ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் குற்றங்களில் அதிகமானவை கொலை, அதற்கு அடுத்தபடியாக இருப்பது சிறுவர்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகம்.

இங்கு திருமணம் என்பது கஷ்டமான விடயமாக பார்க்கிறார்கள். ஏன் ஒருவருக்கொருவர் பிடிமானமாக இருக்கவேண்டும் 'என்ற நம்பிக்கையீனத்தோடு அனேகமாக ஆணும் பெண்ணும் 'லிவ் இன் டு கெதராக' வாழ்கின்றனர். தேவையான பொழுது பிரியலாம். அப்படி திருமணம் செய்தாலும் சின்ன சின்ன சச்சரவுகளினால் பிரிந்து போகிறார்கள்.

இங்குதான் பிள்ளைகள் பெரும் பிரச்சனையாகிறார்கள். அம்மா வேறு ஒரு ஆணோடு சேர்ந்து இருக்கும் பொழுது அந்த பெண்மணிக்கு இருக்கும் பெண் பிள்ளையை சித்தப்பா முறையானவர் வெறுப்பில் அடிக்கிறார். அல்லது துன்புறுத்துகிறார் அல்லது பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்கிறார். இது மாறியும் நடக்கிறது. ஆண் மறுமணம் முடிக்கும்போதோ அல்லது இன்னொரு பெண்ணுடன் சேர்ந்து வாழும்போதோ ஆண் பிள்ளைகளோ அல்லது பெண் பிள்ளைகளோ இந்த பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். எனவே சிறுவர் மீதான சட்டங்கள் ஐரோப்பிய, ஸ்கன்டினேவிய நாடுகளில் மிகவும் கடுமையாக இருக்கின்றன. அது பிள்ளைகள் மீது அதித அக்கறை கொண்ட இந்தியர்கள் மீதும் பாய்கின்றன.

என்னோடு அலுவலகத்தில் ஒன்றாக வேலை பார்க்கும் பெண்ணொருவரின் மகள் நாலாம் வகுப்பில் படிக்கிறார். வகுப்பில் டீச்சர் 'உங்கள் தந்தை உங்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தினால் தங்களிடம் வந்து சொல்ல வேண்டும்' என்றும் 'தந்தையோடு தூங்கக் கூடாது' என்றும் சொல்லியிருக்கிறார். அந்தக்குழந்தை வந்து "அப்பா நான் உங்களோடு தூங்குகிறேன். ஆனால் டீச்சர் கேட்டால் சொல்லவேண்டாம்". அவர் அந்தக்குழந்தையின் பாசத்தால் மனம் நெகிழ்ந்து கண்ணீர் சிந்துகிறார். சொந்த பிள்ளைகளுக்கும் எங்களுக்குமான உறவு ரத்த பந்த உறவு.

இங்குள்ள நடைமுறைகளை வைத்து பிள்ளைகளை வளர்க்க முடியாது என்று பிள்ளைகளை கூட்டிக்கொண்டு ஊரில் கொண்டு போய் வளர்க்கும் பலரை எனக்கு தெரியும்.

நமது கலாச்சாரம் பண்பாடுகளை அடுத்த தலைமுறை விட்டு விடும் என்ற பயம் இங்குள்ள நமது பெற்றோரிடம் இருக்கிறது.

எனது மகன் படிக்கும் பாடசாலையில் மேல் வகுப்பு படிக்கும் தமிழ் பெண் பிள்ளையின் தாயொருவர் ஒரு பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் நிற்கும்பொழுது பெரும் பதட்டத்தோடு காணப்பட்டார். என்ன என்று விசாரித்தேன். பிள்ளை சுற்றுலா போகப்போகிறது. வளர்ந்த ஆண் பெண் பிள்ளைகள் சேர்ந்து போகிறார்கள். பெண் பிள்ளைக்கு பாலியல் உறவு தொடர்பான விளக்கமும் கர்ப்பம் தரிக்காமலிருக்க கொண்டமும் கொடுத்து அனுப்பும்படி தாயிடம் டீச்சர் சொல்லியிருக்கிறார்.

என்னதான் முற்போக்கு வெளிநாட்டு வாழ்க்கை என்று நாம் பேசினாலும் ஒரு தமிழ்த்தாயிடம் உனது மகளுக்கு கொண்டம் கொடுத்து சுற்றுலா அனுப்பு என்பதை எப்படி ஏற்றுக்கொள்ளுவார். நாம் சிறுவர்களை கிருஷ்ணர்களாக பார்க்கிறோம் என்பதை அவர்களுக்கு எப்படி விளங்கவைப்பது?

சக்தி சக்திதாசன்





# இங்கிலாந்து என்ற 'தங்கக் கூண்டில்' அடைபட்டு வாழும் எங்கள் பெற்றோர்!

கடந்த சில காலங்களுக்கு முன்னால் எனது மனைவி நமது நாட்டு சமையல் சாமான்களுக்கான ஒரு பட்டியலைக் கொடுத்து எமது வதிவிடத்துக்கண்மையில் அமைந்துள்ள தமிழ்க்கடைதனில் சில பொருட்களை வாங்கி வரும்படி கேட்டிருந்தாள்.

அது மட்டுமின்றி ஈழத்திலே எனது உடன்பிறவாச் சகோதரனின் குடும்பத்திற்கு நான் அனுப்பும் மாதாந்த பணத்தொகையையும் அந்தக்கடையினூடாகவே அனுப்புவது வழக்கம்.

அன்று நான் வழமை போல எனது மனைவியின் பட்டியலில் இருந்த பொருட்களை வாங்கி விட்டு ஊருக்கு பணம் அனுப்புவதற்கான கவுண்டரில் சென்று அங்கு அமர்ந்திருந்த அந்தத் தங்கையிடம் எனது தேவையைத் தெரிவித்தேன்.

அங்கே நான் பேசிக்கொண்டிருக்கையில் சுமார் 70வயது மதிக்கத்தக்க ஒரு வயதான தமிழ்ப் பெண்மணி மிகவும் பணிவான புன்முறுவலுடன் என்னை நோக்கி வந்தார்.

அவர் என்னை நெருங்கும்போது மிகவும் தயக்கத்துடன் நெருங்கினார். அந்தப் பெண் மணியைக் கண்டதும் என் கண்கள் ஒரு கணம் கலங்கிவிட்டது.

காரணம்? அவர் எனக்கு என் அன்னையை நினைவூட்டியமையே. அருகில் நெருங்கிய அவர், ஈழத்தமிழில்,

"தம்பி உப்ப ஒரு பவுண்டுக்கு அங்கை எத்தினை ரூவாயாம் குடுக்கினம்" என கண்கள் பனிச்சிட என்னிடம் வினவினார்.

நான் அதற்கான விடையை அவருக்குக் கூறிவிட்டு எனது காரியத்தில் மீண்டும் இறங்கி விட்டேன்.

அவரைப் பற்றிய ஞாபகம் எனக்கு அந்த ஒரு கணம் மறந்துவிட்டது. எனது அலுவலை முடித்துக் கொண்டு கடையை விட்டு வெளியேறும் தறுவாயில் அதே 'அம்மா', மீண்டும் அவசரமாக என்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டேன்.

எனது வேகத்தைக் குறைத்தேன். மீண்டும் ஈழத்தமிழ் கொஞ்சியது.

"தம்பி நீங்கள் எவ்வளவு காசு அனுப்பியிருப்பியள்? ஒரு ஆயிரம் பவுண்ட்ஸ்?" மீண்டும் கண்களில் ஆவல் ததும்ப, முகம் அகலமாய் விரிய அந்தத்தாய் என்னைக் கேட்டார்.

நான் சிரித்தவாறே "இல்லை அம்மா அவ்வளவு அனுப்ப இல்லை" என்றேன் சிரித்தவாறே.

அப்போது அவர் கொஞ்சம் சாவகாச மடைந்தவராக,

"தம்பி நீங்க ஊரில எவடம்?" என்றார் அம்மா.

"யாழ்ப்பாணத்தில் நல்லூருக்குப் பக்கத்தில் கைலாய பிள்ளையார் கோயிலடி" என்றேன்.

"ஓமோம் தம்பி, எனக்குத் தெரியும் அந்த இடம்" என்றார் அத்தாய் மிகவும் மகிழ்ச்சியுடன்.

நான் கடையை விட்டு வெளியே வரும்போது அவரும் என்னுடன் சேர்ந்து வெளியே நடந்தார். அவரின் நடையிலிருந்த வேகம் அவருக்கு என்னுடன் உரையாடலை மீண்டும் தொடர ஆவல் என்று காட்டியது.

ஆனால் எனக்கோ பாழாய்ப்போன வேலைக்குப் போக வேண்டிய அவசரம், அந்தத் தாயின் ஆவலை முறித்துக் கொண்டு செல்ல வேண்டிய காலக்கட்டாயம்.

காரில் உட்காந்திருந்த எனக்கு வழியெல்லாம் அந்தத்தாயின் ஆவல் ததும்பிய முகமும், அவருடன் பேசமுடியாது நான் புறப்பட வேண்டி வந்தபோது அதிலே தென்பட்ட ஏமாற்றமும் மாறி, மாறி மனதில் வந்து வந்து முட்டியது.

என் தாயே அவர் உருவில் என்னுடன் உரையாட வந்தது போன்ற ஏதோ ஒரு இனம்புரியாத உணர்வு என்னைத்தாக்கியது.

எனது மண்ணில் நடந்த போராட்டத்தின் விளைவுகளால் வந்த தாக்கத்தைச் சிறிது எண்ணிப்பார்த்தேன். இவரைப் போல எத்தனையோ வயதானவர்கள் பாதுகாப்பற்ற சூழலினால் புலம்பெயர்ந்து இன்று லண்டனிலே வாழ்கிறார்கள்.



அவர்கள் இழந்தது அவர்களின் மண்ணை மட்டுமா? இல்லையே அவர்களின் மகிழ்வான வாழ்வையும் கூடத்தான்.

ஈழத்திலே வாழும் மட்டும் சுற்றுப்புறச் சொந்தங்களுடன் அல்லும் பகலும் உறவாடி விரும்பிய பொழுதுகளில் விரும்பிய இடங்களுக்குச் சுதந்திரமாக சென்று வாழ்ந்து பழகியவர்கள் இன்று அந்நிய தேசங்களிலே அந்தந்த நாட்டுக் கலாச்சாரச் சிறைகளிலே மனமுடைந்த கைதிகளைப்போல் வாழ்கின்ற நிலை என் கண்களை ஈரமாக்கின.

உண்மையாகவே வாழமுடியாமல் வந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அதை மறுப்பதற்கில்லை. ஆனால் அங்கு வாழக்கூடிய வசதிகள் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமது பிள்ளைகளின் வறட்டுக் கௌரவத்தைக் காப்பதற்காக எத்தனை பெற்றோர் தமது சுதந்திரத்தை அடகு வைத்து விட்டார்கள்.

உதாரணத்துக்கு நான் எனது பெற்றோரையே எடுத்துக் கொள்கிறேன். ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த அவர்கள் வசித்த வீட்டின் மீது இலங்கை இராணுவத்தால் குண்டு வீசப்பட்டபோது என் தந்தை மயிரிழையில் உயிர் தப்பினார்.

அதன் பின்பு அவர்கள் எனது அண்ணன் வீட்டில் வைத்து பராமரிக்கப்பட்டார்கள். அவர்கள் இன்னும் பாதுகாப்பாக வாழட்டுமே என்று அவர்களைத் தலைநகர் கொழும்புக்கு இடம் மாற்றினோம். அங்கு ஒரு வாடகை வீட்டில் அன்னையும், தந்தையும் வசித்து வந்தார்கள்.

ஆனால் மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தார்கள். பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்தபோது பணத்துக்கு அவர்களுக்கு குறைவே இருக்கவில்லை. மிகவும் சுதந்திரமாக நண்பர்கள், உறவினர்கள் என்று அனைவரையும் தமக்கு விரும்பிய பொழுதுகளிலே சென்று சந்திப்பார்கள்.

கொழும்பில் அருகிலிருக்கும் இந்துக் கோவில்களுக்கு விரும்பிய பொழுது சென்று வருவார்கள்.

என் தந்தை இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியிலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். அவரது பொறியிலாளர் சங்கக் கூட்டங்கள் அனைத்திலும் ஆர்வமாகக் கலந்துகொள்வார்.

தனது ஓய்வூதியம் சம்மந்தமான விடயங்கள் அனைத்தையும் தானே கவனித்து வந்தார். அதிலே அவரது நிர்வாகத் திறமைகள் மழுங்கடிக்கப்படாமல் இருந்தன.

ஆனால் மகன் லண்டனிலே, மற்றும் பிள்ளைகள் வெளிநாட்டிலே. பாவம் இவர்கள் வாடகை வீட்டில் இருந்து கஷ்டப்படுகிறார்களே! என்று அவர்கள் சொல்லவில்லை ஊர் சொன்னது. ஆமாம் வெளிநாட்டில் விடுமுறைக்காக கொழும்பு செல்லும் அறிந்தவர்கள், உறவினர்கள் இவர்களைப் பார்த்து விட்டு வருவார்கள்.

"ஐயோ பாவம் யாழ்ப்பாணத்தில் ராஜா, ராணி போல இருந்தார்களே ! இங்கே வாடகை வீட்டிலே கஷ்டப்படுகிறார்கள்" என்று கூறுவார்கள்.

ஆக மொத்தம் சமுதாயத்தின் அடிப்படையற்ற அழுக்கத்திற்காக நாம் எமது தாய் தந்தையரின் சுதந்திரத்தை பறித்து விட்டோம்.

அரை மனதுடன் வரச் சம்மதித்த என் தாயையும் வரவே பிடிக்காத என் தந்தையையும் வலுக்கட்டயமாக இங்கிலாந்துக்கு அழைத்து, கிளிகளைத் தங்கக்கூட்டிலே அடைப்பதுபோல அடைத்ததுதான் மிஞ்சியது.

புலம்பெயர் அவசர வாழ்க்கையிலே அவர்களுக்கு தம் உறவுகளுடன் பேசுவதற்குக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்காதா? பேசுவதற்கு யாராவது வரமாட்டார்களா என்று ஏங்குவார்கள்.

வெளியே ஓரிடமும் தனியாகச் சென்று வர உகந்த கலாச்சாரமல்ல புலம்பெயர் கலாச்சாரம். அதனாலே பிள்ளைகளாகிய நாம் எங்கேயாவது கூட்டிப்போனால் தவிர அவர்களால் ஒரு இடமும் சென்று வரமுடியாத நிலை.

இதனால் அவர்களின் வாழ்க்கைக் காலத்திலே ஒரு ஐந்து வருடத்தை இழந்திருப்பார்கள் என்பது எனது கணிப்பு.

எவ்வளவுதான் சுதந்திரமான, சுயாதீனமான எண்ணங்கள் மனதுக்குள் இருந்தாலும், சமுதாயம் என்னும் சகதிக்குள் புரளும்போது அனைவரும் எருமைகளாகி விடுவது தவிர்க்கப்பட முடியாத செயலாகிவிடுகிறது.

அது தவிர அவர்களுக்கென தனியாக ஒரு வாழ்விடம் அமைத்துக் கொடுத்து கொஞ்சம் சுதந்திரத்தை அளிக்க முற்பட்டால் அதுவும் கூட சமுதாயத்தின் கண்களில் பாபச் செயல்களாகி விடுகிறது.

அன்று அந்தக் கடையிலே என்னுடன் பேசத்துடித்த அந்தத்தாயார் கூட பேச்சுத்துணைக்கு தனக்கு யாராவது கிடைக்க மாட்டார்களா? என்று ஏங்கி அந்த வாசலில் தவம் கிடக்கிறார் போலும்.

என்னுள்ளத்து உணர்வுகளை வடிக்க ஒரு கட்டுரை போதாது ஓராயிரம் கட்டுரைகள் வேண்டும்.

உறுத்தும் உணர்வுகள் உணர்த்தும் உண்மைகள் காலம் கடந்த பாடங்களாகின்றன.

## ஞாபகம் வருதே!



1988ஆம் ஆண்டு, சென்னை மியூசிக் அகாடமியில், அந்த அழகான இளம்பெண்ணின் இசையில் மெய்மறந்து லயித்துப் போயிருந்தேன். அவருக்கு அப்போது ஏறக்குறைய இருபது வயதுதான் இருக்கும்.

எதிர்காலத்தில், நாத உலகில் கம்பீர நடைபோடப் போகிறார் என்ற அப்போதைய என் கணிப்பு சிறிது கூடப் பிசகவில்லை.

இன்று - பல லட்சக்கணக்கான ரசிக உள்ளங்களில் இசைத் தேவதையாக வீற்றிருக்கின்ற டாக்டர் எஸ்.சௌமியாதான் அவர் என்று சொல்வது எனக்கே பெருமையாக இருக்கிறது என்று தன் நினைவுகளைத் தொடர்ந்து 'புதினம்' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார், பிரபல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.நவரத்தினம்.

டாக்டர் நவரத்தினம் நினைவுகள்



# தனித்துவமான பாடகி

# டாக்டர் எஸ்.சௌமியா

உள்ளத்தை பரவசம் அடைய வைக்கும் அமுதம் உண்ட தேன் குரல்.

தெவிட்டாத தெள்ளமுது.

சோர்ந்து நிற்கும் உள்ளத்திற்கு அருமருந்தென அந்த மதுரமான குரல் அருவிபோல் கொட்டுகிறது.

மனம் பஞ்சுபோல இலேசாகிறது!

ஆம்-

1988ம் ஆண்டு, சென்னை மியூசிக் அகாடமியில், அவ் அழகான இளம்பெண்ணின் சங்கீதக் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, எனக்கு ஏற்பட்ட சுகானுபவம்தான் அது.

அவருக்கு அப்போது ஏறக்குறைய இருபது வயதுதான் இருக்கும்.

எதிர்காலத்தில், நாத உலகில் கம்பீர நடை போடப்போகிறார் என்ற அப்போதைய என் கணிப்பு சிறிதுகூடப் பிசகவில்லை.

இன்று -

பல லட்சக்கணக்கான ரசிக உள்ளங்களில் இசைத் தேவதையாக வீற்றிருக்கின்ற டாக்டர் சௌமியாதான் அவர் என்று சொல்வது எனக்கே பெருமையாக இருக்கிறது!

அன்று அவரது இசைக் கச்சேரிக்குப் பின்னர், நேரில் சந்தித்து வாழ்த்துக் கூறினேன். அவரது தாயாரும் பக்கத்தில் இருந்தார். அன்போடு வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்தார்கள்.


ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடக்கிற இசை நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்பதற்காக லண்டனிலிருந்து தமிழகம் சென்று ஏவிஎம் செட்டியாரின் மனைவி ராஜேஸ்வரி அம்மா வீட்டில் விருந்தினராகத் தங்குவேன். இசையுடன் மிக ஈடுபாடு கொண்டவர். திறமையானவர்களை இனங்கண்டு, மனம் விட்டு என்னிடம் பாராட்டிக் கூறுவார்.

சௌமியா பற்றியும் அவர் என்னிடம் கூறியது இப்போதும் நினைவில் நிற்கிறது. சௌமியாவின் இசையை கேட்டுவிட்டு, வீட்டுக்கு வந்தபோது, ராஜேஸ்வரி அம்மாவிடம் குரலின் இனிமையைப் பற்றிக் கூறினேன். அப்போது அம்மா சொன்னார்கள்: "பதினான்கு வயது சௌமியாவுக்கு சில வருடங்களுக்கு முன்னர் மேடையில் தங்கப் பதக்கம் வழங்கினேன். பாரதி பாடலைப் பாடி முதல் பரிசைத் தட்டிக்கொண்டார். அப்பொழுதே உணர்ச்சி பொங்கப் பாடினார். சௌமியாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

பதினாறு வயதில் சௌமியா தனது குருவான சங்கீதக் கலாநிதி டாக்டர் எஸ்.இராமநாதனுடன் சேர்ந்து பாடி அசத்திய கச்சேரி பற்றியும் அறிய வந்தேன். ஒவ்வொரு ஆண்டும் நான் சென்னை செல்கிற சமயங்களில் சௌமியாவின் கச்சேரியைத் தவற விடுவதில்லை.

தாயாருடன் சேர்ந்து அழைப்பு விடுப்பார் சௌமியா.

1990 ஆம் ஆண்டு, சென்னையில் சௌமியா வீட்டுக்குச் சென்றது நினைவுக்கு வருகிறது. அவரது தாயார், சகோதரர்களுடன் மூன்று மணி நேரம் பொழுதைக் கழித்த இனிய நினைவுகள் நெஞ்சோடு நிலைத்து நிற்கிறது. வைத்தியம் சம்பந்தமான சில ஆலோசனைகளை வழங்கி, அனைவருடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றேன்.



2003ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். லண்டன் கலை ஆர்வலர் டாக்டர் சந்திரகுமாரின் மகன் அமுதனின் மிருதங்க அரங்கேற்றத்தில் சௌமியா பாடினார். பிரகாஷின் மாணவர். குறொய்டன் பெயர் பீல்ட் ஹோலில் இந்த அரங்கேற்றம் நடந்தது. மிகச் சிறப்பாக நடந்த அரங்கேற்றத்தில், உயர்ந்த இசையினைக் கேட்ட மனநிறைவு ஏற்பட்டது. அற்புதமான சௌமியாவின் குரல், அமுதனின் அரங்கேற்றத்தை மறக்க முடியாத நிகழ்வாக்கியது. அவரது குரலின் இனிமையும், பாடிய பாங்கும் சபையில் இருந்த அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்தியது. முதன்முதலாக லண்டன் ரசிகர்கள் முன் சௌமியா நிகழ்த்திய இசையினால், பலரையும் தன்பால் இழுத்துவிட்டார்.

லண்டனில் 'மியூசிக்' சாமான்கள் சிலவற்றை வாங்க சௌமியா விரும்புகிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, அவர் விரும்பியவற்றை வாங்குவதற்கு அவருக்கு உதவியது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அடக்கமானவர், பண்புமிக்கவர்.

2006ஆம் ஆண்டு, லண்டன் கர்நாடக இசைப் பள்ளியின் விழாவில் பாடுவதற்காக பூஷணி கல்யாணராமன், மணிமாறன் ஆகியோருடன் சௌமியாவையும் அழைத்து கௌரவித்தோம்.

அந்தச் சமயம், என் வீட்டில் சௌமியா தங்கினார். எனது மனைவி, பிள்ளைகளுடன் மிக அன்பாகப் பழகுவார். எனது மனைவியின் சமையலை மிகவும் ரசித்து ருசித்து உண்டார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், ஷேக்ஸ்பியர் பிறந்த இடம், கேம்ரிஜ் போன்ற இடங்களுக்கு அவரை அழைத்துச் சென்று காண்பித்தோம். கல்வியிலும் அவர் உயர்வு பெற்றவராக இருப்பதால், அந்த அறிவு தொடர்பான விஷயங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற இவர், கெமிஸ்ட்ரியில் எம்எஸ்ஸி பட்டமும் பெற்றிருக்கிறார். சங்கீத விற்பன்னரான டாக்டர் எஸ்.இராமநாதனிடம் ஆறுவயதிலே குருகுலவாசத்தை ஆரம்பித்தவர் சௌமியா.

கெமிக்கல் என்ஜினியரான தந்தையார் எம்.சீனிவாசனிடம் இசையை முதன்முதலாகப் பயில ஆரம்பித்த சௌமியாவும் இரசாயனத்துறை வல்லுனர்.

சிறுவயதிலேயே அவர் ஆற்றல் வெளிவரத் தொடங்கிவிட்டது. தனது இரண்டு வயதிலேயே ராகங்களை அடையாளம் காணத் தொடங்கினார். அக்காலத்தில் அகில இந்திய வானொலியில் இவர் ஆற்றல் ஒலிபரப்பானது.

சுற்றுச்சூழல் தன்மைகளுக்கும், வெப்ப நிலைக்கும் மிருதங்கத்தில் சுருதி வேறுபாடு ஏற்படுவதைத் தவிர்ப்பது தொடர்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்துக்கான ஆராய்ச்சியை செய்தார். இந்தப் பிஎச்டி பட்டப்படிப்புக்கு மேற்பார்வையாளராக இருந்த பேராசிரியை ஒரு ஈழத்துப் பெண்மணி என்பதைச் சொல்வதில் பெருமைப்படுகிறேன். சென்னை பல்கலைக்கழக இசைத் துறை பொறுப்பாளராக இருக்கின்ற பிரமிளா குருமூர்த்திதான் அவர்.

'அச்சமுண்டு அச்சமுண்டு' திரைப்படத்தில், 'கண்ணில் தாகம்...' என்ற பாடலை சௌமியா பாடியிருக்கிறார். ஆனாலும் நடிப்பதற்குக்கூட வந்த வாய்ப்புக்களை அவர் பின்னர் நிராகரித்தார். சாஸ்திரீய கர்நாடக இசை தந்த புகழாகவே அது இருக்க வேண்டுமென்பதே சௌமியாவின் விருப்பம்.

உண்மைதான்-

இலக்கணமான இசை அவருடையது!

அந்த இலக்கணத்தோடு, கர்நாடக இசை மூலம் இமயத்தை எட்ட வேண்டுமென்பதே சௌமியாவின் இலட்சியம்!

விஜய் தொலைக்காட்சியின் 'சுப்பர் சிங்கர் - ஜூனியர்' நடுவர் குழுவில் ஒருவராகவிருக்கிறார்.

'இசை ஒரு விஞ்ஞானம்; இசையின் அந்த விஞ்ஞானத்தை புரிந்துகொண்டால், அதனை அற்புதமான ரசனைமிக்க கலையாக மிளிரவைத்துவிடலாம்' என்பதைப் புரிந்துகொண்டவர் சௌமியா. பிரபல விமர்சகர் சுப்புடு சொன்னது நினைவுக்கு வருகிறது.

நித்தியஸ்ரீ, கணவரை இழந்த துயரத்தில் துவண்டுபோயிருந்தவேளையில், ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'மியூசிக் அக்கடமி'யின் தியாகராஜ ஆராதனையில், தன்னோடு அவரை இணைத்து, அவருக்கு அநுசரணையும் உற்சாகமுமளித்து, கூடவே அவரைப் பாடவைத்தமை, சங்கீத உலகில் சௌமியாவுக்கு தனித்த ஒரு மதிப்பைப் பெற்றுக்கொடுத்தது.

இவர் தயாரித்த 'நாதாநுபவ', கருநாடக இசையின் முதல் இசைக் களஞ்சியமாயமையும் இசைப் பேழை.

சௌமியாவின் 'கர்னாடிக்கா' நிறுவனத்தைப்பற்றி சொல்லவேண்டும். சென்னை தி.நகரில் இந்த நிறுவனம் அமைந்திருக்கிறது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் இசைப்பள்ளிகளை ஆரம்பித்து, சங்கீத்தத்தை வளர்க்க வேண்டும் என்பது 'கர்னாடிக்கா'வின் நோக்கங்களில் ஒன்று.

அந்த நிறுவனத்தைச் சென்று பார்த்திருக்கிறேன் பாடசாலை, ஆய்வு, நூலகம் போன்று பல்வேறு பிரிவுகள் நடாத்தப்படுகின்றன. சௌமியாவின் சிடிக்கள் வெளியிடப்படுகின்றன.

தமிழகத்தில் பிரபலமான தொழில் அதிபராக விளங்கும் நல்லி செட்டியார் இந்த 'கர்னாடிக்கா'வின் வளர்ச்சியில் மிகவும் பங்கு கொண்டுள்ளார். தமிழ் கலைஞர்களுக்கு கைகொடுத்து வளர்க்கும் பெரும் உள்ளம்!

சங்கீத கலா ஸாரதி, சங்கீத சூடாமணி, சங்கீத சிரோன்மணி, நாதபூஷணம், தமிழ் இசைச் செல்வி, ரசிக கலா ரத்னா, சங்கீத கலா பாரதி, நாத ஒளி, யுவகலா பாரதி போன்ற பல பல பட்டங்கள் இவரைப் பெருமைப்படுத்தியுள்ளன.

'சங்கராபரணம்' பாடும்போது, நெஞ்சைக் கொள்ளை கொண்டுவிடுவார் சௌமியா.

பாரதியார் பாடல்கள் அவரது தனித்துவம். கோபால கிருஷ்ண பாரதியின் 'நந்தனார் சரித்திரம்' இலக்கணம் பிசகாது. 'திருப்புகழ்' - உடலைச் சிலிர்க்க வைக்கும்.

உலகத்தின் பல நாடுகளுக்கும் சென்றிருக்கிறார். அமெரிக்கா, கனடா, லண்டன், சிங்கப்பூர், மலேஷியா, அவுஸ்திரேலியா, ஸ்ரீலங்கா என்று பல நாடுகளில் அவர் இசைக் கச்சேரி நடந்திருக்கிறது.

இறுதியாக -

ஒரு மகிழ்ச்சியான செய்தியை லண்டன் இசைப்பிரியர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். தனித்துவமான பாடகி சௌமியா லண்டன் வருகிறார். எதிர்வரும் செப்ரெம்பர் 13ம் திகதி லண்டனில் அவரது இசைப் பேரின்பத்தை அனுபவிக்க ஏற்பாடாகியிருக்கிறது. 'நாழிகை' ஆதரவில் பத்திரிகையாளர் 'மாலி' இந்த ஏற்பாட்டை செய்கிறார். நானும் அனுசரணை வழங்குகிறேன். யாம் பெற்ற இன்பம் அனைவரும் பெறவேண்டும்!



# வெடித்துச் சிதறிய மலேஷிய விமானம்!

## கரைந்து போன தேவதை! தமிழ் ஏர் ஹோஸ்டஸ் பிரமீளா!!



**ஏ**வுகணைகளால் வீழ்த்தப்பட்ட மலேஷியன் ஏர்லயின்ஸ விமானத்தில் பணிப்பெண்களாகப் பணியாற்றி பாதி வயதிலேயே தனது கனவு வாழ்க்கையை முடித்துள்ளார் மலேஷியா தமிழ்ப் பெண்ணான பிரமீளா ராஜேந்திரன்.

30வயதான பிரமீளா, மலேசியாவின் கிளாங் பகுதியைச் சேர்ந்தவர். இளம் வயது முதலே விமானப் பயணங்கள்மீது அதிக ஆர்வம் கொண்டவர். அதேபோல், நீர் விளையாட்டு உள்ளிட்ட சாகசங்களில் ஆர்வம் கொண்டவர். தன் தாய் மண் மீது அதிக பாசம் வைத்திருந்தவர். கடந்த மாதம் கேரளாவுக்குச் சுற்றுப்பயணம் போனார். பல நாடுகளுக்குச் சிறகடித்துப் பறந்தவர் இந்த அழகுப் பாவை.

## இலங்கை வம்சாவளி பெண் குடும்பத்தோடு பலி!



**ஏ**வுகணைகளால் வீழ்த்தப்பட்ட மலேஷியன் ஏர்லைன்ஸ் விமானத்தில், மலேஷியாவைச் சேர்ந்த தமிழ் நடிகையான சுபாஷினி ஜெயரத்தினம் என்ற சுபா ஜெயாவும் தனது குடும்பத்தோடு பலியாகியுள்ளார். இவர் மலேஷியாவில் பிறந்து வளர்ந்தவரான இலங்கை வம்சாவளித் தமிழர்!

மரணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் தனது 38 வது பிறந்த நாளைக்கொண்டாடினார்.

நெதர்லாந்தைச் சேர்ந்த தனது கணவர் மற்றும் மகளுடன் இந்தக் கோரச் சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

நாடகம், நடனம், சினிமா, டிவி என்று பல்துறைகளில் திறமையுடன் திகழ்ந்து வந்தவர். 2010ம் ஆண்டில் நெதர்லாந்தைச் சேர்ந்த இயக்குனர் கோயஸ் என்பவரைத் திருமணம் செய்தார்.



கோயஸ் - சுபா ஜெயரத்தினம் தம்பதிக்கு கேலா என்ற மகள் உள்ளார். விரைவில் இவருக்கு 2வது பிறந்த நாள் வரவுள்ளது. கேலாவை, அவரது தாத்தா பாட்டியிடம் காட்ட நெதர்லாந்து சென்றார்கள். மாமியார் வீட்டில் குழந்தையோடு கழித்து விட்டு திரும்பியபோதுதான் மூன்று பேரும் மாண்டனர்.

## தாக்குதல் நடத்தியவர்களும் படுகொலை!

**ம**லேஷியன் ஏர்லைன்ஸின் MH17 விமானம் தாக்கித்தகர்க்கப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு உக்ரைனில் ரஷ்ய ஆதரவுப் புரட்சிப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள நகரில் 'பக்' ஏவுகணை லோஞ்சர் ஒன்று சென்றுள்ளது தெரிய வந்துள்ளது. அனேகமாக அந்த லோஞ்சரிலிருந்துதான் பக் ஏவுகணை ஏவப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. மலேஷியா விமானம் தாக்கப்படுவதற்கு 2 மணி நேரங்களுக்கு முன்பு இந்த லோஞ்சர் அந்தப் பகுதியில் காணப்பட்டுள்ளது. மேலும் அதில், நான்கு பக் ஏவுகணைகளைப் படுக்க வைத்த நிலையில் மூடப்பட்டு காணப்படுகிறது. வீடுகள் நிரம்பிய ஒரு பகுதியில், மரத்திற்குக் கீழே அந்த லோஞ்சர் காத்திருந்ததும் தெரியவந்துள்ளது. மேலும், தாக்குதலுக்குப் பின்னர் இந்த லோஞ்சர் ரஷ்யப் பகுதிக்குள் போனதையும், உக்ரைன் உளவுப் பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர். அப்போது அந்த லோஞ்சரில் இரண்டு ஏவுகணைகள் இல்லை என்றும் உக்ரைன் கூறுகிறது. உக்ரைனின் டோரஸ் நகரில்தான் இந்த லோஞ்சர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது புரட்சிப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நகரம். பக் ஏவுகணைகள் ரஷ்யாவிடம் மட்டுமே உள்ளன. உலகின் வேறு எந்த நாட்டிடமும் இத்தகைய ஏவுகணைகள் இல்லை. எனவே ரஷ்ய ஆதரவு இல்லாமல் சுட்டு வீழ்த்தியிருக்க முடியாது.



டோரஸ் நகரானது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பகுதியிலிருந்து 10 மைல் தொலைவில்தான் உள்ளது.

இப்போது கிடைத்துள்ள இன்னொரு திடுக்கிடும் தகவல். பக் ஏவுகணைகளை ஏவித்தாக்குதல் நடத்திய புரட்சிப் படையினரும்கூட தற்போது படையின் தலைமையால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர். ஏனென்றால் இவர்கள் யார் கையிலாவது கிடைத்தால் உண்மை வெளியாகி விடும் என்பதால் தீர்த்துக்கட்டப்பட்டு விட்டார்களாம்



## பாதையை மாற்றிய விமானி!

**இ**டைசி நேரத்தில் விமானி புரட்சிப் படையினரின் ஆதிக்கம் உள்ள பகுதி வழியாக விமானத்தைத் திருப்பிய விபரம் தற்போது தெரிய வந்துள்ளது.

தான் அசவுகரியமாக உணர்வதாக விமானி கூறியதாகவும் தெரிய வந்துள்ளது. விமானம் வழக்கமான பாதையில் செல்லாமல், புரட்சிப் படையினர் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியின் வான் வெளியில் திசை திரும்பியதால், உளவுபார்க்கும் விமானமாக இருக்கும் என்று கருதி புரட்சிப் படையினர் மலேஷியா விமானத்தைச் சுட்டு வீழ்த்திவிட்டனர்.

விமானி திசை திரும்பாமல் வேறு பாதையில் போயிருந்தால் ஒரு வேளை இந்த விபரீதம் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் உக்கிரைனின் நிலைமை குறித்து விமானி சரியாக அறிந்து கொள்ளாமல் போனதால் தான் விமானத்தின் பாதையைத் தாங்கள் மாற்றச் சொல்லவில்லை என்று மலேஷியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே விமானியாகவே பாதையை மாற்றியுள்ளார்.



## ஹஜ் யாத்திரை போக இருந்த விமானி



**சு**ட்டு வீழ்த்தப்பட்ட மலேஷிய விமானத்தின் விமானி 'ஹஜ்' யாத்திரை செல்ல ஆசையுடன் இருந்ததாக அவரது உறவினர் தெரிவித்தார்.

வான் அம்ரன் ஹுசின் என்ற 50 வயது முதன்மை விமானி, இந்த வருட இறுதியில் ஹஜ் யாத்திரை செல்ல இருந்தார். இதனை அவருடைய மூத்த சகோதரியிடம் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் கிரி என்ற தனது சொந்தக் கிராமத்துக்குச் சென்றபோது இதனைக் கூறியுள்ளார்.

"20 வருட அனுபவமுள்ள விமானி என் தம்பி. அவர் ஹஜ் போகப் போவதாக சொன்னார். அவருடைய மனைவியும், இரண்டு குழந்தைகளும் ஷா ஆலமில் வசித்து வருகின்றனர். தம்பி பிரிவைத் தாங்க முடியாது தவிக்கிறோம்" என்றார் அவர் சகோதரி.



## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேருமே பலியான பரிதாபம்!

**ம**லேஷியன் விமானத் தகர்ப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் உயிரிழந்துள்ளனர். கஜகஸ்தானில் இருந்து நான்கு குழந்தைகள், மனைவியுடன் மலேஷியா திரும்பியவரின் மொத்தக் குடும்பம்தான் இந்தக் கொடூர சம்பவத்தில் பலியாகிவிட்டது!

குடும்பத்தலைவர் தம்பி ஜியீ (49), அவரது மனைவி அரிஜா (47), இவர்களது பிள்ளைகள் முகமது ஆஃபீப் (19), முகமது அப்சல் (17), மர்ஷா அஜ்யீனா (15), முகமது அஃப்ருஸ் ஆகியோரே இவர்கள்.

கஜகஸ்தானிலிருந்து ஆம்ஸ்டர்டாம் வழியாக அவர்கள், மலேஷியாவிலுள்ள குச்சிங் சிட்டிக்கு சென்றபோது இந்த விபத்து நடந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளாக தம்பி ஜியீ கஜகஸ்தானில் பணியாற்றி வந்தார். அங்கு குடும்பத்தோடு வசித்து வந்தார். சொந்த ஊரின் இனிய நினைவுகளைச் சுமந்து கொண்டு சென்றவர்களின் வாழ்வு பரிதாபமாக முடிந்துவிட்டது !

குடும்பத்தில் ஒருவர்கூட தப்பவில்லை




# நெஞ்சைக் கொள்ளை கொண்ட யோகாவின் ‘கானக்குயில்–2014’

இன்றல்ல, நேற்றல்ல- இருபத்தொரு ஆண்டுகள் அந்நிய மண்ணில் தொடர்ச்சியாக எங்கள் குழந்தைகளுக்காக ஒரு இசை நிகழ்ச்சியை நாடாத்திக் கொண்டிருப்பது எப்படிச் சாத்தியமாகிறது என்பதை நினைத்துப் பிரமித்தேன்.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பாளராகத் திகழ்ந்து, லண்டனில் ‘சண்றைஸ்’ தமிழ் வானொலி மூலம் தன் பணியைத் தொடர்ந்த, நாடறிந்த ஒலிபரப்பாளர் யோகா தில்லைநாதனின் ‘கானக்குயில் 2014’ சமீபத்தில் லண்டன் Greenford Assembly Hall மண்டபத்தில் நடந்தது. மண்டபம் நிறைந்த ரசிகர்கள் முன்னிலையில் மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வெற்றியாளர்களை ரசிகர்களே தெரிவு செய்கிறார்கள். ஆண்டு தவறாமல் ஒவ்வொரு நிகழ்விலும் பங்கு கொண்டிருக்கிறேன். நம்மவர்களின் இசையில் ஏதோ ஒரு சுகத்தை அனுபவித்திருக்கிறேன். இன்றுவரை எந்தச் சலிப்புமே ஏற்படவில்லை. எப்படித்தான் இந்தக் குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் ஆற்றலை வெளிக்கொண்டு வருகிறார்கள் என்று வியந்து கொள்வேன்.

லண்டனில் சனி, ஞாயிறு என்றால் எத்தனை நிகழ்ச்சிகள்? அதுவும் தமிழ் நாட்டு பிரபலங்களை வைத்து நடத்தப்படுகிற நிகழ்ச்சிகள்... அப்படி இருந்தாலும் ‘கானக்குயில்’ நிகழ்ச்சியை பார்த்துக்கேட்டு, ரசிக்க நமது மக்கள் கலந்து கொண்டு அளிக்கிற உற்சாகத்தை நினைக்காமல் இருக்க முடியாது. இந்தாண்டு ‘கானக்குயில்’ போட்டி வழக்கம்போல் மூன்று பிரிவுகளாக நடைபெற்றன. பால கானக்குயில், இளைய கானக்குயில், கானக்குயில் பெண்கள்-ஆண்கள் என போட்டி! போட்டி நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னர் கடந்த இருபது வருடங்களில் கானக்குயில்கள் பாடி மகிழ்வித்தார்கள்.

2001 ‘கானக்குயில்’ கண்டுபிடித்து வளர்த்துவிட்ட பாடகராகவும், இசை அமைப்பாளராகவும் திகழும் அன்ரன் பொஸ்கோ தனது சொந்த இசை அமைப்புப் பாடலான ‘விழுந்தால் எழுவோம்’ என்ற அந்தக் கணீரென்ற குரல் இசை ரசிகர்களைச் சிலிர்க்க வைத்தது. எஸ்.தேனுகா, நவீனா பிரணவரூபன், கௌரிசங்கர், மங்களகௌரி கிருபாகரன் ஆகியோர் ஆரம்ப சிறப்புப் பாடகர்களாக நிகழ்ச்சிக்கு மெருகூட்டினார்கள்.

இதனை அடுத்து ‘பால கானக்குயில்’ போட்டி ஆரம்பமாகியது. சிறுவர் - சிறுமியர் இரு பாலாரும் வெற்றியை தட்டிக்கொள்வதற்காக போட்டா போட்டி போட்டுப் பாடினார்கள். போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்களில் தேர்வான எண்மர், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் இசையை வழங்கினார்கள். வயதில் மிகச் சிறியவர்களாக இருந்தபோதும், பின்னணி இசைக்கு ஏற்றவாறு எப்படித்தான் பாடல்களைப் பாடுகிறார்களோ என்று வியக்க வைத்தது.

இந்தப்போட்டிக்குப் பின்னர் இளைய கானக்குயில். சரியான போட்டி. யாரைத் தெரிவு செய்வது என்ற சங்கடமான நிலை. சிறந்த பின்னணி இசைக் குழுவான ‘சித்ராலயா’ மிகக் கலகலப்பாக வாத்தியங்களை மீட்டு, தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தினார்கள். திரண்டிருந்த சபையோரும் பாடல்களோடு கலந்து காதுகளுக்கு இதமாக இருந்த இசையை வெகுவாக ரசித்தார்கள்.

மூன்றாவதாக நடந்த ஆண்-பெண் கானக்குயில்களைத் தெரிவு செய்யும் போட்டியில்,

**கானக்குயில் – 2014 வெற்றி பெற்றோர்**

**பால கானக்குயில்**

1. மாதவ் கேதீஸ்வரராஜா
2. ஹம்சாயினி உமசுதன்
3. வின்சிஹா செல்வசந்திரராஜா

**இளைய கானக்குயில்**

1. அஜிதா பாலகிருஷ்ணன்
2. சுதர்சினி ஜெயதாஸ்
3. மாதங்கி ஜெகதீஸ்வரன்

**கானக்குயில் (ஆண்)**

1. எஸ்.மகாலிங்கம்
2. எஸ்.கபிலன்
3. என்.ஆதித்தியா

**கானக்குயில் (பெண்)**

1. சினேகா ரவீந்திரா
2. பிரதீபா சங்கர்
3. பிரவீனா மகாதேவன்.

புதிய பழைய பாடல்கள் எல்லாம் ரசிகர்கள் நெஞ்சில் முட்டி மோதின. ‘நானாக நான் இல்லை தாயே...’, ‘சம்திங்... சம்திங்...’- இவற்றுடன் ‘இசைகேட்டால்’ பழைய பாடல்- ‘பாடறியேன்’ போன்ற பாடல்கள் ரசிகர்களை மெய் மறக்க வைத்தன!

போட்டிகளை அடுத்து நடந்த பழைய கானக்குயில்கள் இசை விருந்து ரசிக இதயங்களை கவர்ந்திழுத்தது. இருபது ஆண்டுக்கு முதல் கானக்குயில்களான தர்சினி சிவசுதனும், ஆர்.விக்னேஸ்வரனும் இணைந்து பாடிய ‘அட மச்சான் பிள்ளை...’ காதுகளில் இன்னமும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னாலும், இளமையான அந்தக் குரல்களை கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்றால் ‘கானக்குயிலின்’ மகிமைதான் என்னே! 2008 ஆம் ஆண்டு கானக்குயில் பற்றிக் விஜயரத்தினமும், 2006 ஆம் ஆண்டு கானக்குயில் சிவகாமசுந்தரி ஜெயேந்திராவும் இணைந்து பாடிய பாடல் கம்பீரம்தான்! லவினா சுதந்திரன், அபிராசுகந்தன், புண்யா செல்வ முருகநாதன் ஆகியோர் பாடி மகிழ்வித்தார்கள்.

சிறப்பான பின்னணி இசையை வழங்கிய ‘சித்ராலயா’ இசைக்குழுவைப் பற்றி இத்தருணத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும். கலைஞர் சிவசுதனின் வழிகாட்டலில், அருமையாக இசை வழங்கிய கீ-போர்ட் ஜெயராஜ், அவருக்கு உதவியாக அவர் மகள் அஜனி, ட்ரம்ஸ் கஜேந்திரன்-தபேலா டோலக் ரவிசங்கர், தபேலா ட்ரம்ஸ் பாலமுரளி, லீட் கிற்றார் உதயகுமார், பேஸ் கிற்றார் ஹரிஹரன் ஆகியோர் அசத்திவிட்டார்கள்.

நிகழ்ச்சியை ரசிகர்களின் எதிர்பார்ப்பை மனதிற்கொண்டு அழகாக நகர்த்திய தொகுப்பாளர்களை மறக்க முடியுமா? துளசி சுதந்திரகுமார், தாயார் யோகாவுக்கு அன்று முதல் பக்கபலமாக இருப்பவர். ‘சண்றைஸ்’ வானொலியில் துளசி வளரும் பாடகர்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வர நடாத்திய ‘அரங்கேற்றத்’தின் மறுவடிவமாக இன்று ‘கானக்குயில்’ மேடை நிகழ்ச்சியாகப் பவனி வருவதை அடிக்கடி நினைத்துப் பார்ப்பேன். தர்சினி சிவசுதன் நாடகக் கலைஞர், சிறந்த பாடகர். மற்றிருவரும்; அபிரா சுகந்தன், நிலானி ராமச்சந்திரன். இவர்கள் அனைவரும் நாடறிந்த ஒலிபரப்புக் கலைஞரான யோகா தேர்ந்தெடுத்த முத்துக்கள்.

யோகா தில்லைநாதனின் கடின உழைப்பில் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கிற ‘கானக்குயில்’ நிகழ்ச்சியின் பின்னால், வெற்றிக்கு உறுதுணையாக நிற்கின்ற அவரது கணவர் ஆறுமுகம் தில்லைநாதனின் நினைவு கொள்ளாமல் இந்தப் பத்தியை முடிக்க முடியாது. தாயகத்தில் ஒரு பிரதேசத்திற்கு அரச அதிபராக இருந்தவரல்லவா. அவரது நிர்வாகமே நமது கலைஞர்களை உரிய இடமளித்து கௌரவிக்கிற நல்ல ஒரு நிகழ்ச்சியை வழங்கி வருகிறது என்பதைப் பெருமையுடன் சொல்வது மகிழ்ச்சியாக உள்ளது.

நன்றியுரையில் தமக்கு ஆதரவு தந்த ‘ஸ்பொன்சர்களையும்’ பலவிதங்களில் உதவியவர்களையும் நன்றி கூறி, ‘நன்றி மறப்பது நன்றல்ல’ என்ற வாக்கியத்தை சமர்ப்பணமாக்கினார். அவரது நன்றி சொல்லும் பாணி அனைவர் நெஞ்சங்களையும் தொட்டது.

மொத்தத்தில்- ரசிகர்கள் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட அருமையான நிகழ்ச்சி ‘கானக்குயில் -2014’.



## In Aid Renal Unit in Jaffna Hospital

**Under the Auspicies of "FRIENDS OF JAFFNA HOSPITAL UK"**

# Carnatic Vocal Recital -

*of*

*Kalaimamani*

## Bhushany Kalyanaraman

*On*
*Sunday, 7Th Sep 2014, 6:30 Pm*
*At*
*Bhavan Centre*
*4A, Castletown Road, West Kensington*
*London W14-9He*

**3 Mins From Kensington Tube Sattian**



**Donations**
**£50.00 (Admit Two) £25.00 (Single)**
**£15.00 (Rear Stall)**

*For Further Details,*

| | | | |
|---|---|---|---|
| Dr S Navarathnam | : 01277 223981 | Mr M Muruhanandan | : 0794114059 |
| Dr Geeth Nagendran | : 0208 236 9481 | Mr V Bose | : 07956 150580 |
| Mr Vr Ramanathan | : 07956369557 | Bhavan Centre | : 0207 381 3086 |

# எங்கள் தெய்வமே!

பிறப்பு:
06-11-1939



இறப்பு:
20-07-2014

முல்லைத்தீவு மாமூலையைப் பிறப்பிடமாகவும், நல்லூர்,
பிரித்தானியா WATFORD ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட

## திருமதி கமலாசனிதேவி பரமசாமி (சித்திரா)

(இளைப்பாறிய ஆசிரியை, முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி,
யாழ். புனித யோன் போஸ்கோ கல்லூரி)

அன்பின் சிகரமாக, பாசத்தின் உறைவிடமாக, எங்களுக்குச் சிறந்த துணையாக,
எங்களை நல்வழியில் நடத்திய நீங்கள் இன்று எங்கள் உள்ளங்களில்
தெய்வமாகிவிட்டீர்கள்! உங்களை வணங்குகிறோம்.

கணவன் பரமசாமி, மகன் செந்தூரன், மருமகள் மாதங்கினி,
அப்பம்மாவை பிரிந்துவாடும் ஆதெர்ஷினி, சகோதரர்கள், பெறாமக்கள்.
போன்: 07812000559 (கணவர்).

# சிறப்பாக நடந்த தமிழ் பள்ளி 4வது ஆண்டு விழா









லண்டன, **Sutton Morden** தமிழ் பள்ளிக்கூட 4வது ஆண்டு விழா சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது. **Sports College** மண்டபத்தில் நடந்த இவ்விழாவில், பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. நாடகம், நடனம் என்று பல்வேறு தரப்பட்ட நிகழ்ச்சிகள் மனதைக் கவர்ந்தன. பள்ளியின் தலைவர் ராம் ராமச்சந்திரனுடன், ஏனைய நிர்வாகிகளும் ஆசிரியர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.









# லண்டனில் நாவல் அறிமுகவிழா

பிரித்தானியாவில் வாழும் ஈழ எழுத்தாளர் பசுந்திரா சசியின் 'கட்டக்காடு' என்ற நாவல் அறிமுக விழா, லண்டன், லூசியம் சிவன் கோயில் மண்டபத்தில் வரும் 16.08.2014 சனிக்கிழமை மாலை 6மணிக்கு நடைபெற விடுக்கிறது. லண்டன் தமிழ் இலக்கிய நிறுவனத்தின் ஆதரவில், பிரபல ஈழத்து எழத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் தலையையில் இந்நூல் அறிமுகவிழா நடைபெறும்.

## அன்பைச் சொரிந்து வாழ்ந்தவர்

# இராசலட்சுமி



யாழ்ப்பாணத்தின் சிவபூமி திருநெல்வேலி, மரியாபாரணம் தம்பதியினரின் மூத்த புதல்வி இராசலட்சுமி. இவருக்கு அன்பு கனிந்த மூன்று சகோதரிகள், ஒரு சகோதரர். திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் படித்த இராசலட்சுமியின் அழகும், பண்பும், மாணக்கவாசகரைக் கவர்ந்திட, மணம் முடித்தார். கொழும்பில் உயர் அதிகாரியாக இருந்த மாணிக்க வாசகர், தன் இல்லற வாழ்வை மனமொத்த இல்லாளுடன் நடத்தினார். றோகான் என்ற புதல்வனையும், சியானி என்ற புதல்வியையும் பெற்றனர். இனிதான வாழ்வில் கணவனைப் பிரிந்தார். தன் மகனையும், மகளையும் நன்கு கல்வி கற்க வைத்தார் தாயார். தன் மகன் றோகானை லண்டனுக்கு உயர் கல்வி கற்க அனுப்பினார். றோகான் விரைவாக தன் தாயாரையும், சகோதரியையும் லண்டனுக்கு அழைப்பித்து, ஒன்றிணைந்து வாழ்ந்தனர். பிள்ளைகளுக்கு லண்டனில் மணம் முடித்து வைத்தார். தனது பிள்ளைகளைப்போல, தன்னுடைய சகோதரர், பிள்ளைகள் மீது அன்பைச் சொரிந்து வாழ்ந்தார். அவர் பிரிவு சம்மந்தியான என்னை மட்டுமல்ல, அவருடன பழகிய அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டது. அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம். ஓம் சாந்தி!

*- ராணி.மதுரலிங்கம்*





# என்னடி, நீ பெரிய கில்லாடி!

ஒரு நாள் இரவு, 11 மணி...
பெண்: ஹலோ... எங்க வீட்ல யாருமே இல்லடா...
ஆண்: அப்படியா... இதோ உடனே வர்ரன்...
சில நிமிட நேரங்களுக்குப் பிறகு...
ஆண்: என்னடி, வீடு பூட்டி இருக்கு?
பெண்: அதான் சொன்னேன்ல... வீட்ல யாரும் இல்லன்னு...
நாங்க ஊருக்கு போயிருக்கோம்டா...
வீட்ட பத்திரமா பாத்துக்கோடா...
ஆண்: ?????



# பிரித்தானியாவில் முதலிடம் பெற்ற ஈழச்சிறுவன்!

பிரித்தானியாவில் ஐந்து லட்சம் மாணவர்கள் பங்கு பற்றிய போட்டியில் முதலிடம் பெற்று 150 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ் பரிசுத் தொகையை பெற்று, ஈழத்துக்கு பெருமை சேர்த்திருக்கிறார், குறிஞ்சிகன் என்ற தமிழ் சிறுவன். வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ரமேஷ் - தனலட்சுமி தம்பதியின் ஒன்பது வயதுப் புதல்வர் குறிஞ்சிகன். பிரித்தானியா BEEMARY SCHOOL இல் 4ம் ஆண்டில் கல்வி கற்று வருகிறார். அங்கு பிரித்தானிய BR!TISH GAS நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு, பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பசுமை பேணல் தொடர்பான பசுமை வீடு கட்டுதல், வீடு வடிவமைத்தல் போட்டியில் தனது மிகவும் சிறந்த சிந்தனையால் வீட்டின் உள்ளக, வெளி அமைப்பை வடிவமைத்திருந்தார். இதனால் இவரது பாடசாலைக்கு முதலிடம் கிடைத்தது. 500 பாடசாலைகள் பங்கு பற்றியிருந்தன.

# ஆண்களே...! இதில் எது கடினம்



ஜல்லிக் கட்டு/ தாலிக் கட்டு

# இதுதான் காதலா?



யாரோ ஒருத்தன்
கட்டிக்கப்போற
பொண்ணுக்காக
ஐஸ்கிரீம், சாக்லேட்
எல்லாம் வாங்கிக் குடுத்து
உடம்பை தேத்தி விட்டு...
சுடிதார், வாட்ச், செருப்பு,
எல்லாம் 'கிப்ற்றாக' குடுத்து
அட்டு பிகரை லட்டு பிகராக்கி
எவனுக்கோ கட்டி வைக்கிற
வெட்டி வேலைதான்...
காதல்!



# வாசகர் கடிதம்

## உண்மையான போராளித்தலைவன்

அடித்துச் சொல்வதை இடித்து இடித்துச் சொல்லியிருக்கிறீர்கள்! உண்மைதான், நான் உட்பட இங்கு யாருக்கும் வெட்கமில்லை! முஸ்லீம்களுக்கு உண்மையான தலைவர்கள் யார் இருக்கிறார்கள்? அதனால்தான், முஸ்லீம் மக்கள் தேசியத் தலைவரைத் தேடுகிறார்கள். அவர் போன்ற ஒரு தலைவர், சிங்களத்துக்குப் பதிலடி கொடுக்கக்கூடிய மாபெரும் போராளித் தலைவன் இனிப் பிறக்கமாட்டான். இதனை முஸ்லீம்கள் இப்பொழுதாவது புரிந்துகொள்ளத் தொடங்கியிருப்பது ஆறுதல்!

*- கு.செல்வநாதன் HAYES*

## பின்னிப்பிணைந்து கதை நகர்கிறது

சிவ தியாகராஜாவின் 'புனித யாத்திரை' தொடர் கதையை தொடர்ந்து தவறாது படித்து வருகிறேன். ஈழத்தில் நடந்த போராட்டத்தைப் பின்னிப் பிணைத்து ஆசிரியர் கதையை நகர்த்துகிறார். சரித்திரம் ஒன்றையும் சேர்ந்துப் படிக்க முடிகிறது. ஒரே ஒரு குறை: மாதத்துக்கு ஒருமுறை காத்து இருக்க வேண்டியுள்ளது.

*- என்.சோமாஸ்கந்தன் EASTHAM*

## குறை சொல்வதே வழக்கமாகிவிட்டது!

ஏதாவது குறை சொல்வதே இந்த 'இளைய அப்துல்லாஹ்'வுக்கு வழக்கமாகிவிட்டது. எங்கே என்றாலும் பலதும் பத்தும் இருக்கும். அப்படித்தான் லண்டனிலும் திருட்டுக்கள். அதற்காக கள்வர்கள் நகரம் என்று லண்டனை வர்ணிப்பதா?

*- சுகந்தன் நேசராசா CROYDON*

## லண்டன் நிகழ்ச்சிகள்

லண்டனில் நடக்கிற நிகழ்ச்சிகளுக்கு முன்னிடம் கொடுத்துப் பிரசுரிப்பது, ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாக உள்ளது.

*- செல்வ மனோகரன் HOUNSLOW*

## சினிமா பரவாயில்லை!

சினிமாவுக்கு இரண்டு பக்கத்தைப் போட்டு வீணடிக்கிறீர்கள் என்றுதான் நினைத்தேன். பரவாயில்லை, படிக்கிற விதமாக தகவல்கள் வருகின்றன. இசைப் பிரியா, யாழ்ப்பாணப் பெண் போன்ற செய்திகளை படித்தேன். படிக்கக்கூடிய விதத்தில் படங்களோடு விஷயங்களைப் போடுவது உங்கள் கெட்டித்தனம். பத்திரிகை அனுபவம் என்றுகூடச் சொல்லலாம்.

*- எஸ்.யோகநாதன் NORTHALT*

## சிந்திக்க வைக்கும் எழுத்துக்கள்

சிந்திக்க வைக்கிறார் சக்திதாசன். மனித வாழ்க்கையைப்பற்றி அழகாக எழுதியிருக்கிறார். வாழ்க்கையைப் பற்றி எழுதியுள்ள நல்ல கருத்துக்களைப் படித்து மகிழ்ந்தேன்.

*- க.கந்தசாமி PERLY*

## 'ஞாபகம் வருதே' பெருமை தருகிறது

'ஞாபகம் வருதே' தொடர்ந்து படித்து வருகிறேன். டாக்டர் நவரத்தினம் தனது வைத்தியப் பணியுடன் இந்தளவுக்கு கலையோடு ஈடுபாடு கொண்டு இருப்பது பெருமை அளிக்கிறது. அவரைப்பற்றி அறிவேன். சங்கங்கள் வைத்து பணம் சேர்த்தவரல்ல அவர்! தன் சொந்தப் பணத்தையே கலைக்காகச் செலவு செய்து இருக்கிறார். பயனுள்ள அவரது கட்டுரைகளை தொடர்ந்து நீங்கள் வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

*- R.சுந்தரேசன் LEWISHAM*

## மனவருத்தம்

நமது கவிஞர் வ.ஐ.செ.ஜெயபாலன் பற்றி ஒரு செய்தியைப் பார்த்தேன். மனவருத்தமாக இருந்தது. அவர் ஈழ ஆதரவாளரல்லவா. ஈழத்திற்கு தமிழ் உலகில் பெருமை சேர்க்கிற கவிஞர் அவர். 'நல்ல படம்' என்று அவர் கூறியதில் ஏதாவது உண்மை இருக்குமோ என்று எண்ணுகிறேன்.

*- கலா கனகேஸ்வரன் TOOTING*

## சுவையான 'தமிழகம்'

தமிழக செய்திகளை உங்கள் பத்திரிகையில் விபரமாக எழுதுகிற கே.ஜி.மகாதேவாவின் ஆக்கங்கள் மிக நன்றாக இருக்கின்றன. கடந்த இதழில் அவர் நிறையவே எழுதியிருக்கிறார். அலுப்புச் சலிப்பின்றி வாசிக்கக் கூடியதாக இருந்தது. நீண்ட கால அனுபவமுள்ள பத்திரிகையாளராக அவர் இருப்பதால்தான் இப்படிச் சுவையாக எழுத முடிகிறது.

*- ஆர்.ராமேஸ்வரன் WEMBLEY*



# லண்டன் இலக்கிய சங்கமம்
# தவில் மேதைக்கு கௌரவம்












சிறப்பு பேச்சாளர்களுடன் திரு.சிவ.தணிகாசலம், திரு.க.பாஸ்கரன், திரு.பே.சிவானந்தன்



சிறப்பு பேச்சாளர்களுடன் திரு.சிவ.தணிகாசலம், திரு.நடராஜா கண்ணப்பு, திரு.பொ.பஞ்சாட்சரம், திரு.பாஸ்கரன், புலவர்.வரதன்

"தவில் கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தியின் விரல் வாசிக்கும் தல லய நுட்பங்கள் அபாரமானவை. அந்த வாசிப்பின் நுட்பத்தைப் புரிந்து கொள்ளும் திறன் படைத்தவர்கள், அவரை உலக இசைப் பேரரசு என்றே அடையாளம் காண்பார்கள்" என்று கலாவித்தகர் சோமஸ்கந்த சர்மா கூறினார்.

லண்டன், ஹென்டனில் அமைந்த ஆஞ்சநேயர் மண்டபத்தில், திரிசக்தி இலக்கிய சங்கமம் சமீபத்தில், ஈழத்துத் தவில் கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தியின் நினைவு நாளினை சிறப்புற நடாத்தியது. அப்போது, நினைவுப் பேருரையின் சிறப்புப் பேச்சாளர் சோமஸ்கந்த சர்மா இசை நுட்பங்களை விளக்கினார்.

மேடையில் தவில் கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தி அவர்களின் படத்திற்கு ரோஜா மாலை அணியப்பட்டிருந்தது. மடியில் தவிலோடு அவரின் படம், அன்று மேடைகளை அலங்கரித்த லயஞான குபேர பூபதி அமரர் தட்சிணாமூர்த்தி அவர்களை மீண்டும் தரிசிக்கவைத்தது. பெண்களும் பெரியவர்களும் திருவிளக்கை ஏற்றவும் விழா எழுச்சியோடு பிரகாசிக்கத்தொடங்கியது.

**தேனாய் சிந்திய பக்திமழை:** பண்ணிசைப்பாடகர் பரமசிவம் அவர்களின் தேனாய் சிந்திய தேவாரப்பாடல் பக்திமழையில் பரவசமானோம். இறையருள் இசை எழிலோடு நிகழ்வுகள் தொடங்கின...

**பெரிய புராணம்:** சீர்மிகு பெரிய புராணம் எவ்விழாவிலும் இடம்பெறவேண்டும் என்ற இலக்கிய சங்கமத்தின் விருப்பில், பெரிய புராணம் தொடக்க மணியாய் ஒலிக்க, ஆரம்ப நிகழ்வாய் பெரிய புராணம் காட்டும் பண்பாடு என்ற தலைப்பில் சைவமுன்னேற்ற சங்கத்தலைவர் ஆனந்ததியாகர் அழைக்கப்பட்டார். அவர் தனதுரையில் "வேடுவகுலத்தில் பிறந்த கண்ணப்ப நாயனாரை தன் வலப்பக்கத்தில் இடம் கொடுத்து மானிட நேயத்திற்கு மதிப்பளிக்கும் உயரிய பண்பாட்டை இலக்கிய சங்கமத்தின் ஸ்தாபகர் சிவ தணிகாசலம், என் ஊரை மட்டுமல்ல, யாழ்ப்பாணம் மட்டுமல்ல, இலங்கையை மட்டுமல்ல, முழுத்தமிழ் இசை உலகே பெருமைப்பட வைத்தவர் லயஞான குபேர பூபதி அமரர் தட்சிணாமூர்த்தி என்ற தோரணையில், புகழ்கடரை கலைஞருக்கு ஏற்றி நினைவுப்பேருரையை ஆரம்பித்தார்.

நினைவுப் பேருரையை நிகழ்த்திய 'நாழிகை' ஆசிரியர் மாலி மகாலிங்கசிவம் 'வழமையாய் தவில் நாதஸ்வரத்திற்குப் பக்கவாத்தியம் - ஆனால் கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தி அவர்கள் பங்கேற்கும் இசை நிகழ்வுகளில் தவிலுக்கு நாதஸ்வரம் பக்கவாத்தியம்...' என்று அமரர் தட்சிணாமூர்த்தி அவர்களுக்குப் புகழாரம் சூட்டினார். நிகழ்வை மேலும் அலங்கரிக்க நிகழ்வில் சுதுமலை கனகசபை சற்குணராஜா மனதைத்திகட்டும் இன்னிசையில் திருப்புகழும், திரிஷா ஜெயராஜசேகரன் மழலையின் குரலில் திருக்குறளும் சேர்க்கப்பட்டிருந்தன. ஈலிங் அம்மன் அறங்காவலர் அப்பையா தேவசகாயம் திரிசக்தி இலக்கியசங்கமத்தினரைப் பாராட்டி வாழ்த்தினார். 'கலைஞர்' அமரர் தட்சிணாமூர்த்தியின் ஊரைச் சேர்ந்தவரும், கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தியோடு பழகும் வாய்ப்பைப் பெற்ற வருமான இறுவில் பொ.பஞ்சாட்சரம் கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தியின் பல பரிமாணங்களைச் சொன்னார்; வாழ்த்தினார்.



விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் நிகழ்வைப் பாராட்டி தன் கணிப்பை சொன்னவர், "தவில் கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தி அவர்களின் வித்துவத் தன்மை வியக்கவைப்பது. அவர் தமிழருக்கு மட்டுமல்ல உலக இசைக்குச் சொந்தமானவர். அவரின் பதிவுகளை வைத்திருப்போர் உலக இசையைக் கௌரவிக்கும் வண்ணம் அந்தப் பதிவுகளை வெளிக்கொணர வேண்டும்" என்றார்.

இலக்கிய சங்கமத்தின் ஸ்தாபகர் சிவ தணிகாசலம் நிகழ்வின் வெற்றிக்குத் துணைநின்றோரை குறிப்பிடும்போது, சங்கத்தலைவர் விரிவுரையாளர் கலாநிதி மு.முருகேசன் அவர்கள் எங்கள் தூண் என்றவர், இலக்கிய சங்கமம் கண்ட வரம் என்றார்.

நன்றியுரையைச் செயலாளர் க.ஒப்பிலாமணி அவர்கள் நிகழ்த்த, இரவுப் போசனம் உண்டு மகிழ்ந்தவர்கள் நிறைவோடு விடைபெற்றனர். லண்டனில் தவில் கலைஞர் அமரர் தட்சிணாமூர்த்தி அவர்களின் நினைவு தாளமிட தமிழின் முத்தமிழ் முகிழ்த்தது.





# LycaFly

Travel the world for less



CALL 0207 132 32 32 24x7

VISIT www.Lycafly.com

# £50 Free

## Lycamobile top-up with every single return ticket to

# Colombo



SriLankan Airlines

Non stop flights to Colombo

from £205

We work with over 160 airlines

## BEST DEALS OF THE WEEK

| | | | |
|---|---|---|---|
| NEW YORK from £439 | DUBAI from £298 | BANGKOK from £457 | MELBOURNE from £670 |
| CHENNAI from £441 | SINGAPORE from £488 | TORONTO from £444 | |

Incl Taxes

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
190 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**TOOTING**
232 Upper Tooting Road,
London SW17 7EW · 0207 132 0057

**MILTON KEYNES**
16 Stratford Road MK12 5LJ
0207 993 6355 / 0190 822 7062


Lycamobile
Call the world for less
Special international rates with UK plan to over 75 countries
Sri Lanka
3p /min
Landline + Mobile
£10 a month
500 UK Minutes
1GB Data 4G
Unlimited UK Texts
Lyca to Lyca Unlimited Calls & texts
To buy: Text 11044 to 3535
Order your free SIM at www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's Carphone Warehouse WHSmith Martin McColl
Lycamobile's Special International rates for UK plans customers offer ("the offer") is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with the £10, £15, £20, £30 or £40 UK plans (not the £5 or £7.5 plan). Promotion valid from 06-04-2014 to 31-08-2014. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Mobile internet allowance for the UK PLAN 5,7.50,10,15,20,30,40 includes 50MB, 500MB,1GB,unlimited,2GB,3GB,5GB respectively. Allowances are valid for 30 days from the date of purchase. Unlimited usage is subject only to a variation of speed from 4G/3G to 2G for usage beyond 10GB per month per SIM. 4G availability is subject to handset model and location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non commercial, private, personal use only. Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: the offer is valid from 01.04.2014
Lyca mobile
Call the world for less